(ஏழாவது பாராளுமன்றம் - முதலாவது கூட்டத்தொடர்)

இல. 13.]

# பாராளுமன்றம்

## ஒழுங்குப் புத்தகம்

2014 திசெம்பர் 12, வெள்ளிக்கிழமை உட்பட அன்றைய தினத்திலிருந்து
2014, நவெம்பர் 24, திங்கட்கிழமை வெளியிடப்பட்டது

## 2014 திசெம்பர் 12, வெள்ளிக்கிழமை
## வாய்மூல விடைக்கான வினாக்கள்

2665/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) மஹிந்த சிந்தனை எதிர்காலத்திற்கான தொலைநோக்கில் குறிப்பிடப்பட்டுள்ளதன் பிரகாரம் பன்சாலைகள், கோவில்கள், தேவாலயங்கள் மற்றும் பள்ளிவாசல்கள் உள்ளிட்ட சமய வணக்கஸ்தலங்களின் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்வதற்காக தயாரிக்கப்பட்டுள்ள அரசாங்கத்தின் உதவித் திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி உதவித்திட்டங்கள் சமபந்தமான விபரங்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3310/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2012 திசெம்பர் 31 ஆம் திகதியில் உள்ளவாறு மற்றும் இற்றைவரை வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களின் எண்ணிக்கையை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) 2009 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை,

(i) வெளிநாட்டு வேலைவாய்ப்பின் மூலமாக நாட்டிற்குக் கிடைத்த மொத்த வெளிநாட்டுப் பண அனுப்பீடுகளை அமெரிக்க டொலரிலும் இலங்கை ரூபாவிலும் வெவ்வேறாகவும்;

(ii) தொழில் ஒப்பந்தங்களை மீறியதன் காரணமாக ஒவ்வொரு வருடமும் நாடு கடத்தப்பட்ட அல்லது திருப்பி அனுப்பப்பட்ட புலம்பெயர்ந்த தொழிலாளர்களின் எண்ணிக்கையையும்;

(iii) இவ்விடயத்தில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளையும்;

(iv) வெளிநாட்டு வேலைகளுக்காகச் செல்லும் இலங்கையரிடமிருந்து காப்புறுதித் திட்டம் மூலமாக ஈட்டப்பட்ட பணத்தொகையையும்;

(v) சொல்லப்பட்ட காப்புறுதி நிதியங்களிலிருந்து வெளிநாடுகளில் தொழில் புரியும் இலங்கையர்களுக்காகச் செலவழிக்கப்பட்ட தொகையையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3720/ '13

3\.

கௌரவ அனுர திசாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) கடந்த ஐந்து வருடங்களில் இலங்கைப் புகையிரதத் திணைக்களத்திற்காக இறக்குமதி செய்யப்பட்ட புகையிரத என்ஜின்கள் மற்றும் பெட்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) அவை கொள்வனவு செய்யப்பட்ட நாடு அல்லது நாடுகள் யாவை என்பதையும்;

(iii) கொள்வனவு செய்யும்போது பின்பற்றப்பட்ட நடைமுறைகள் யாவை என்பதையும்;

(iv) அவற்றைக் கொள்வனவு செய்வதற்காக நிதி பெற்றுக் கொள்ளப்பட்ட முறை யாது என்பதையும்;

(v) நிதி பெற்றுக் கொள்வதற்காக உள்நாட்டு அல்லது வெளிநாட்டுக் கடன் பெறப்பட்டுள்ளதா என்பதையும்;

(vi) ஆமெனில், மேற்படி கடனின் அளவு, வட்டி வீதங்கள் மற்றும் ஏற்புடைய நிபந்தனைகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்பட்ட மேற்படி என்ஜின் மற்றும் பெட்டிகளில் தேவையான தொழில்நுட்பங்கள் இல்லை என்பது தெரியவந்துள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி தொழில்நுட்பக் கோளாறுகள் ஏற்படுவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி புகையிரதப் பெட்டிகள் மற்றும் என்ஜின்களைக் கொள்வனவு செய்தமை தொடர்பாக விசாரணையொன்று நடாத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி விசாரணைக்கமைய குறித்த கொள்வனவு தொடர்பில் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யாவர் என்பதையும்;

(v) இவர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4086/ '13

4\.

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ள பிரதித் தபால் மா அதிபர் திரு. கே.ஏ.எஸ். சேனாதீரவுக்கு எதிராக தாபனவிதிக்கோவையின் XLVIII அத்தியாயத்தின் Iவது அட்டவணையின் கீழ் இரண்டு குற்றச்சாட்டுப் பத்திரங்கள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளனவென்பதையும்;

(ii) இதில் ஒரு குற்றச்சாட்டுப் பத்திரத்தில் குறிப்பிடப்பட்ட குற்றச்சாட்டுக்கு தவறாளியானமையால் இவருக்குத் தண்டனை வழங்கப்பட்டுள்ளதென்பதையும்;

(iii) மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக இற்றைவரை முறைசார்ந்த ஒழுக்காற்று நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லையென்பதையும்;

(iv) இக்கருத்திட்டத்தின் பணிப்பாளராக செயலாற்றுவதற்கு பிரதித் தபால் மா அதிபர் திரு. கே.ஏ.எஸ். சேனாதீரவுக்கு தகைமைகள் கிடையாதென கணக்காய்வாளர் தலைமை அதிபதியினால் அறிவிக்கப்பட்டுள்ளது என்பதையும்;

(v) திரு. சேனாதீர கருத்திட்டப் பணிப்பாளரென்ற வகையில் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை மீளஅறவிடுமாறு கணக்காய்வாளர் தலைமை அதிபதி கட்டளையிட்டுள்ளார் என்பதையும்

அவர்அறிவாரா?

(ஆ) (i) திரு. சேனாதீர தொடர்பில் எஞ்சியுள்ள மற்றைய குற்றச்சாட்டுப் பத்திரம் சம்பந்தமாக முறைசார்ந்த ஒழுக்காற்று விசாரணையொன்றினை நடாத்த நடவடிக்கை மேற்கொள்வாரா;

(ii) கருத்திட்டப் பணிப்பாளர் என்ற வகையில் இவர் முறைகேடான விதத்தில் பெற்றுக்கொண்டுள்ள பணத்தை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4671/ '13

5.

கௌரவ பி. ஹரிசன்,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு பொது நலவாய அமைப்பின் வர்த்தக மாநாடு நடாத்தப்பட்ட இடம் மற்றும் ஹோட்டல் யாதென்பதையும்;

(ii) மேற்படி மாநாட்டில் பங்கேற்ற வர்த்தகர்கள் பிரதிநிதித்துவம் செய்த நாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி மாநாட்டிற்காக இலங்கை அரசாங்கத்தின் மூலம் செலவிடப்பட்ட பணத்தொகை மற்றும் பொது நலவாய அமைப்பின் வர்த்தகர் சம்மேளனத்தினால் செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மாநாட்டின் பின்னர் இலங்கையில் ஆரம்பிக்கப்பட்ட கருத்திட்டங்களுக்கு வரிச் சலுகை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) அதன் மூலம் இலங்கை அரசிற்கும் மக்களுக்கும் கிடைக்கும் நன்மைகள் வெவ்வேறாக யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி மாநாட்டிற்கு வருகைத்தந்த வர்த்தகர்களினால் இலங்கையில் முதலீடு செய்வதற்கு அதிக விருப்பம் காட்டிய விசேட கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், அவற்றின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4766/ '14

6.

கௌரவ அசோக் அபேசிங்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) குருணாகல் மாவட்டத்தில்,

(i) நெல் கொள்வனவு செய்வதற்காக தாபிக்கப்பட்டுள்ள நிலையங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) நெல் களஞ்சியப்படுத்துவதற்காக களஞ்சிய வசதிகள் எவ்வளவு உள்ளன என்பதையும்;

(iii) நெல் விளைச்சலில் அரசாங்கம் கொள்வனவு செய்யும் நெல்லின் அளவு எத்தனை சதவீதமென்பதையும்;

(iv) நெல் விளைச்சலை அதே மாவட்டத்தினுள் அரிசியாக்கி விநியோகிப்பதற்கான திட்டமொன்றை தயாரிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4856/ '14

7.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு, பொது வசதிகள் அமைச்சின் கீழ் இயங்கும் வீடமைப்பு நிகழ்ச்சித்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) தற்போது மேற்படி கருத்திட்டங்களின் கீழ் கட்டப்பட்டு மக்களுக்கு கையளிக்கப்பட்டுள்ள வீடமைப்புக் கருத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு பெறுனர்களை தெரிவுசெய்யும் போது பின்பற்றப்பட்ட நடைமுறை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேலே குறிப்பிடப்பட்ட வீடமைப்புக் கருத்திட்டங்களின் கீழ் வீடு வழங்கப்பட்டவர்களின் பெயர்ப் பட்டியலை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அண்மையில் மக்களுக்கு கையளிக்கப்பட்ட மாளிகாவத்தை வீடமைப்புத் தொகுதியை அதன் முதல் குடியிருப்பாளர்களுக்கே வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டிற்கான அமைச்சின் வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டங்களின் இலக்குகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4958/ '14

8.

கௌரவ நிரோஷன் பெரேரா,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வடமேல் மாகாண சபையினால் நிருவகிக்கப்படும் புத்தளம் மாவட்டத்திலுள்ள வைத்தியசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இந்த வைத்தியசாலைகளில் 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் சிகிச்சை பெற்றுள்ள வெளிநோயாளர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வடமேல் மாகாண சபையின் கீழ் நிர்வகிக்கப்படும் மேலே அ(i) இல் குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு வைத்தியசாலைக்கும் அங்கீகரிக்கப்பட்டுள்ள மருத்துவர்கள், தாதிமார், சுகாதார கவனிப்பாளர்கள் வைத்தியசாலைத் தொழிலாளர்கள் மற்றும் ஏனைய பணியாட் தொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) இவ் வைத்தியசாலைகளில் தற்போது இப்பதவிகளுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கைகள் வெவ்வேறாக யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) மேலே ஆ(ii) இல் குறிப்பிடப்பட்டுள்ள வெற்றிடங்களை நிரப்ப மேற்கொள்ளப் பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5027/ '14

9.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) தற்போது உள்நாட்டுச் சந்தையில் சந்தைப்படுத்தப்படும் தெம்பூட்டும் பானங்கள் (Energy Drinks) வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பானங்களிடையே காணப்படுகின்ற உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படுகின்ற பானங்கள் வகைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) தெம்பூட்டும் பானங்களின் தரம் மற்றும் சுகாதாரப் பாதுகாப்பினைத் தீர்மானிக்கும் பிரமாணங்கள் யாவை என்பதையும்;

(iv) 2014 ஆம் ஆண்டினுள் தெம்பூட்டும் பானங்கள் தொடர்பில் நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபைக்கு கிடைத்துள்ள முறைப்பாடுகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) குறித்த முறைப்பாடுகள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5072/ '14

10.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தேசிய மரபுரிமைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தொல்பொருளியல் திணைக்களத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்டொகுதியில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளர் என்ற பதவியொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பதவிக்குரிய கடமைப்பொறுப்புகள் யாவை என்பதையும்;

(iii) தொல்பொருளியல் திணைக்களத்தில் மேற்படி பதவி தோற்றுவிக்கப்பட்ட ஆண்டும் திகதியும் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது தொல்பொருளியல் திணைக்களத்தில் விசேட கருத்திட்ட நடவடிக்கை பணிப்பாளராக பணியாற்றுகின்ற நபரின் பெயர் யாதென்பதையும்;

(ii) மேற்படி பதவியை வகிப்பதற்கு மேற்படி நபர் கொண்டுள்ள கல்வித் தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு இராணுவ அலுவலரொருவர் நியமிக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5084/ ’14

11.
கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) முல்லைத்தீவு, துணுக்காய், உயிலங்குளம் 50 வீடமைத் திட்டத்தில் குடியமர்ந்துள்ளவர்களுக்காக குடிநீர் வசதிகள் இல்லையென்பதையும்;

(ii) இதனால் மேற்படி வீடமைப்புத் திட்டத்தின் குடியிருப்பாளர்கள் குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் பல்வேறு சிரமங்களை எதிர்நோக்கி வருகின்றனரென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி திட்டத்தில் குடியமர்ந்துள்ளவர்களின் குடிநீர் பிரச்சினையை தீர்ப்பதற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகள் யாவையென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5174/ ’14

12.
கௌரவ அஜித் பி. பெரேரா,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இன்றுள்ளவாறு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் இலங்கை வங்கிக்கும் மக்கள் வங்கிக்கும் ஏனைய வங்கிகளுக்கும் செலுத்தவேண்டியுள்ள கடன் மற்றும் வட்டித் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5181/ ’14

13.
கௌரவ நலின் பண்டார ஜயமஹ,— நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2014 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில்,

(i) நிர்மாண, பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் கீழ் உள்ள நிறுவனங்கள் மூலம் அனுசரணை அறிவித்தல்கள், வாழ்த்துரை பலகைகள் மற்றும் விளம்பரப் பலகைகளை பொருத்துவதற்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களை நிறைவேற்றிக்கொள்ளும் பொருட்டு பொருத்தப்பட்ட பலகைகளுக்கு செலவிடப்பட்ட பணத் தொகை;

(ii) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களுக்கு புறம்பான நோக்கங்களுக்காக பொருத்தப்பட்ட பலகைகளுக்கு செலவிடப்பட்ட பணத் தொகை

வருடாந்தம் வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மேற்படி நிறுவனங்களின் நோக்கங்களுக்கு புறம்பான நோக்கங்களுக்காக பொருத்தப்பட்ட விளம்பரப் பலகைகள் மூலம் விளம்பரம் செய்யப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பலகைகளை பொருத்துவதற்கு அங்கீகாரம் வழங்கியவர்கள் யாவர் என்பதையும்;

(iii) அதற்கான செலவு மீளளிப்புச் செய்யப்பட்ட விதம் யாதென்பதையும்;

iv) மேற்படி பலகைகளுக்காக மேற்கொள்ளப்பட்ட கொடுப்பனவுகளுக்கு ஏற்புடையதான ஆவணங்களை சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5192/ '14

14.

கௌரவ சுனில் ஹந்துன்நெத்தி,— கடற்றொழில், நீரக வளமூலங்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை – இந்திய மீனவர்களின் பிரச்சினைகள் குறித்து அண்மையில் இடம்பெற்ற பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் யாது;

(ii) மேற்படி மீனவர் பிரச்சினை தொடர்பில் அரசாங்கத் தரப்பினரின் தலையீடு யாது;

(iii) தற்போது இந்தியாவின் ஆந்திரா பிரதேசத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ள இலங்கை மீனவர்களின் எண்ணிக்கை யாது;

(iv) இவர்களை விடுவிப்பதில் அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டுள்ள தலையீடு யாது;

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மீனவர்களுக்கு வழங்கப்பட்ட எரிபொருள் மானியம் நிறுத்தப்பட்டிருப்பின், இதற்குப் பதிலாக அறிமுகப்படுத்தப்பட்ட மாற்றுத் தீர்விப்பொதியொன்று உள்ளதா;

(ii) ஆமெனில், அது யாது;

(iii) மேற்படி நிவாரணப் பொதிக்கும் எரிபொருள் மானியத்துக்கும் இடையிலான வேறுபாடு யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5271/ '14

15.

கௌரவ மொஹமட் அஸ்லம்,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) மாவனெல்ல, மஹவத்த, தனாகம வீதி, இலக்கம் 4சீ/12இல் வசிக்கும் திருமதி எம். எல். பாத்திமா றிசானாவின் கணவரான, திரு. அகம்மது லெப்பை அசீஸ் (இலங்கை கடவுச் சீட்டு இலக்கம் N0628701 ) சவுதி அரேபியாவின் றியாத் நகரில் 2012.07.09 ஆம் திகதி உயிரிழந்துள்ளார் என்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) உயிரிழந்த திரு. அசீஸ் சார்பில், இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவராண்மையில் 00884/2013 ஆம் இலக்கத்தின் கீழ் காப்புறுதி இழப்பீட்டு விண்ணப்பப் பத்திரத்துடன் சம்பந்தப்பட்ட ஆவணங்களும், சத்தியக் கடதாசியும் சமர்ப்பிக்கப்பட்டபோதிலும், இது வரை குறித்த காப்புறுதி இழப்பீட்டுத் தொகை வழங்கப்படாமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(ii) குறித்த இழப்பீட்டுத் தொகையை திரு. அசீஸின் மனைவிக்கு உடனடியாக வழங்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# பிரேரணை முன்னறிவித்தல்களும் தினப்பணிகளும்

பா.20/ '10

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பணவீக்கத்திற்குப் பொருத்தமான வகையில் 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துதல்,— அரச நிறுவனங்களினால் நிர்வகிக்கப்படும் ஊழியர் சேமலாப நிதிய மற்றும் ஊழியர் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய பணங்களை செலுத்துவதில் ஒவ்வொரு வருடத்திற்கான பணவீக்க அளவுக்கு மேலதிகமாக 1% கொடுப்பனவு ஒன்று ஊழியர்களுக்கு செலுத்துவதை உறுதிப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.21/ '10

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— சிரேஷ்ட பிரசைகளுக்கு இலவச பயண வசதிகள் ஏற்பாடு செய்தல்,— சகல சிரேஷ்ட பிரசைகளுக்கும் பொதுப்போக்குவரத்துச் சேவைகளில் இலவச பயண வசதிகளை ஏற்பாடு செய்துதர வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.22/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்குதல்,— பல இன, மத மக்கள் வாழும் இலங்கையில் சமாதானத்திற்கு பங்கம் ஏற்படும் சவால்களை எதிர்நோக்குகின்றமையினால் அவைகளை இலங்கையிலும், பிராந்தியத்திலும் மற்றும் முழு உலகத்திலும் தீர்ப்பதற்காக பௌத்த, கிரிஸ்தவ, இந்து மற்றும் இஸ்லாம் ஆகிய மதங்களின் ஒழுக்க நெறிகளைக் கொண்ட, தகராறுகள் தீர்க்கும் நிலையமொன்றை உருவாக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.23/ '10

4.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுத்தல்,— இதுவரை ஓய்வூதியப் பணிக்கொடையைப் பெற்றிராத ஓய்வு பெற்றவர்களுக்கு அப்பணிக்கொடையை தாமதமின்றி பெற்றுக்கொடுப்பதற்காக நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.24/ '10

5.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய கொள்கையாக்கச் சபை ஒன்றினை நியமித்தல்,— முறைசார் தேசிய கொள்கை மற்றும் திட்டவாக்கம் தொடர்பில் அரசியல்வாதிகள், மற்றும் விடயம்சார் அதிகாரிகளைக் கொண்டதும் அரசாங்கம் மாறும்போது மாறாததுமான விசேட அதிகாரங்களைக் கொண்ட தேசிய கொள்கையாக்க சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.25/ '10

6.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டில் வேலை செய்பவர்களின் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணுதல் தொடர்பில் சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகை ஏற்படுத்தல்,— வெளிநாடுகளில் வேலைசெய்வோர்கள் முகம் கொடுக்க வேண்டி ஏற்படுகின்ற தாக்குதல்கள், ஆட்கடத்தல், கற்பழிப்பு, பெண்களை இழிதொழிலில் ஈடுபடுத்தல், ஆட்கொலைகள் மற்றும் வெளிநாடுகளுக்கு வேலைவாய்ப்பு தொடர்பில் செல்லும்போது இடம்பெறுகின்ற மோசடிகள், வெளிநாடுகளில் அகதிகளாக்கப்பட்டுள் ளவர்களை திரும்ப அழைத்துக்கொள்ளல் மற்றும் அவர்களின் பாதுகாப்பு தொடர்பில் செயற்படக்கூடிய சட்ட அதிகாரங்களைக் கொண்டதோர் அலகு ஏற்படுத்தப்பட வேண்டு மென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.26/ '10

7.

கௌரவ ரவி கருணாநாயக்க,— புதிய கண்டுபிடிப்பாளர்களை உலகிற்கு அறிமுகப்படுத்து முகமாக தேசிய திட்டமொன்றினை உருவாக்குதல்,— புதிய கண்டுபிடிப்பாளர்களையும் பலதரப்பட்ட திறமைகளைக்கொண்ட பிரசைகளையும் உலகத்திற்கு அறிமுகப்படுத்து வதற்காகவும் அவர்களது திறமைகள் உருவாக்கங்களை மேம்படுத்துவதற்காகவும் தேசிய திட்டமொன்றினை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.27/ '10

8.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உள்ளூர் மூலவளங்களை பயன்படுத்தும் கைத்தொழிலாளர்களுக்கு வரிச்சலுகைகள் வழங்கல்,— உலகச் சந்தைக்காக 75% உள் நாட்டு மூலவளங்களைப் பயன்படுத்தி உற்பத்திகளை மேற்கொள்ளும் உள்நாட்டு கைத்தொழிலாளர்களுக்கு 2 வருடகால வரிச்சலுகை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.28/ '10

9.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தோட்ட சமுதாயத்திற்கு பிரசாவுரிமை வழங்குதல்,— இலங்கைப் பிரசாவுரிமையற்ற சகல தோட்டப்புற மக்களிற்கும் அவர்களது விருப்பத்தின் பேரில் பிரசாவுரிமை வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.29/ '10

10.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தீவிலேயுள்ள ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கு ஒரு கோப்பைப் பால் வழங்குதல்.— தீவிலேயுள்ள சகல ஆரம்பப் பாடசாலை மாணவர்களிற்கும் காலையில் இலவசமாக ஒரு கோப்பை பால் வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.31/ '10

11.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாடசாலை மாணவர்களுக்கு இலவசப் பயணச் சீட்டு வழங்குதல்,— பாடசாலை மாணவர்கள் வீதிப் பயணிகள் போக்குவரத்து அதிகாரசபை பேரூந்துகளில் பிரயாணம் செய்வதற்காக இலவச பயணச்சீட்டுக்களை வழங்குகின்ற முறையொன்றினை அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.32/ '10

12.

கௌரவ ரவி கருணாநாயக்க,— விளையாட்டுப் பாடசாலைகளை அமைத்தலும் தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுத்தலும்,— நீண்ட கால இலக்குடைய தேசிய விளையாட்டுக் கொள்கையினை வகுப்பதற்கான நடிவடிக்கைகளை எடுப்பதற்கான முதல் கட்டமாக சகல மாவட்டங்களையும் உள்ளடக்கூடிய வகையில் விளையாட்டரங்கு, விளையாட்டு மைதானம், விளையாட்டு உபகரணங்கள், விளையாட்டு போதனாசிரியர் களைக் கொண்ட உயர் மட்ட விளையாட்டுப் பாடசாலைகளை அமைக்க வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.33/ '10

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேசிய மொழிகளுக்கான கல்விப் பீடமொன்றினை நிர்மாணித்தல்,— ஆசிரியர்களிற்கு சிங்களம், தமிழ், ஆங்கிலம் ஆகிய மொழிகளை கற்பிப்பதற்காக தேசிய மொழிகளிற்கான கல்விப்பீடமொன்றினை நிர்மாணிக்க வேண்டு மென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.44/ '10

14.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரசாங்க தகவல்களை சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்காக சட்டங்களை இயற்றுதல்,— அரசாங்கத்தின் வெளிப்படைத்தன்மையை பேணுவதற்கும் பொதுமக்கள் அனைத்து அரசாங்க தகவல்களையும் சுதந்திரமாக பெற்றுக் கொள்வதற்கான உரிமைக்காகவும் பாராளுமன்றத்தில் சட்டங்கள் இயற்றப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.45/ '10

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்குதல்,— மக்களில் அதிகமானோர் இருதய சத்திரசிகிச்சை செய்ய வேண்டிய தேவை உடையவர்களாய் இருப்பதால் இலங்கையர்களுக்கு மிகவும் சிறந்த சுகாதார வாய்ப்புக்களை வழங்க வேண்டியிருப்பதாலும் அதற்காக தனியார் துறை ஊழியர்களுக்கு ஊழியர் சேமலாப நிதியம் அல்லது ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினூடாக இலவசமாக வசதிகளை செய்துகொடுக்க வேண்டும் என்றும் அரசாங்க ஊழியர்கள் அல்லது தொழிலற்றோருக்கு அதற்கான முழு செலவையும் அரசாங்கத்தினால் சனாதிபதி நிதியத்தினூடாக வழங்குதல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.46/ '10

16.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உலக சுற்றாடலை பாதுகாத்தல்,— இலங்கை உலக சுற்றாடலை பாதுகாக்கும் பொருட்டு கூடிய கவனம் செலுத்த வேண்டுமென்பதோடு புவி வெப்பமாதலை தவிர்ப்பதற்காக குறிப்பாக நடவடிக்கை எடுக்க வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.47/ '10

17.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற நடவடிக்கைகளை ஒளிபரப்புதல்,— தொலைக்காட்சி அல்லது இணையம் மூலமாக பாராளுமன்ற நடவடிக்கைகள் நேரடியாக அல்லது தணிக்கை செய்யப்பட்டு ஒளிபரப்பப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.48/ '10

18.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர்களுக்கு வாக்களிப்பதற்கான அனுமதியை வழங்குதல்,— வெளிநாடுகளில் வசிக்கின்ற இலங்கையர் களுக்கு எதிர்கால தேர்தல்களில் வாக்களிப்பதற்கு அனுமதி வழங்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.49/ '10

19.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையினை அறிமுகப்படுத்துதல்,— தற்போதுள்ள பழைமையான வாக்களிப்பு முறைமைக்குப் பதிலாக இலத்திரனியல் வாக்களிப்பு முறைமையொன்று அறிமுகப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.57/ '10

20.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேருநர் இடாப்பை அடிக்கடி இற்றைப்படுத்துதல்,— தேருநர் இடாப்பு வருடத்தில் மாதமொன்றுக்கு முப்பது நாட்களுக்கு மட்டும் இற்றைப்படுத்தும் பட்டியலொன்றாக அல்லாமல் அது அடிக்கடி இற்றைப்படுத்தும் திறந்த பட்டியலொன்றாக இருத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.59/ ’10

21.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்புக்களில் ஈடுபட்டுள்ளோருக்கு ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்துதல்,— வெளிநாடுகளுக்குச் சென்று மிகவும் சிரமத்திற்கு மத்தியில் உழைக்கும் செல்வத்தை, இலங்கையின் செல்வத்தை அதிகரிப்பதற்காக அனுப்புகின்ற, வெளிநாட்டு வேலைவாய்ப்புகளில் ஈடுபட்டுள்ளவர்களை மதிக்கும் வகையில் ஓய்வூதிய முறையொன்றை பெற்றுக்கொடுத்தல் வேண்டுமேன இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.60/ ’10

22.

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்கு முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்காக ஓய்வூதிய முறையொன்றை அறிமுகப்படுத்தல், — பாராளுமன்ற உறுப்பினர்கள் 5 வருட சேவைக்காலத்தை பூர்த்திசெய்த பின்னர் ஓய்வூதியத்தைப் பெறுவதற்கு தகைமைபெறுகின்றதனால் ஆயுதப் படைகளில் 22 வருடங்கள் பூர்த்தி செய்யாத போதிலும் 2009 மே மாதம் 19 ஆம் திகதிக்குப் முன்னர் சேவையில் இருந்த ஆயுதப் படையினருக்கும் ஓய்வூதியம் பெற்றுக்கொடுக்கப்படல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.62/ ’10

23.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வலது குறைந்ததும் நடமாடமுடியாததுமான நபர்களுக்கு விசேட வடிவங்களை அறிமுகப்படுத்துதல்,— சட்டத்தில் குறிப்பிடப்படுகின்றவாறு வலது குறைந்தோரின் வசதிகளை உறுதிப்படுத்தவும் அவர்களிடமுள்ள வினைத்திறனை அதிகரிப்பதற்காகவும் அவர்கள் தேவையற்ற விதத்தில் பிறர்மீது தங்கிருப்பதைக் குறைப்பதற்காகவும் அரசாங்கத்தின் அனைத்து புதிய கட்டிடங்கங்களிலும் விசேட வடிவமொன்றை அமைக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.63/ ’10

24.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வாக்களிக்கும் உரிமையை உறுதிப்படுத்தல், – பதிவுசெய்திருந்தும் வாக்களிப்பதற்கான வாய்ப்புக்கிடைக்காத வாக்காளர் அநேக எண்ணிக்கையானோர் இருப்பதனாலும் 18 வயதுக்கு மேற்பட்ட அனைத்து நபர்களுக்கும் வாக்களிக்கும் உரிமையை பெற்றுக்கொடுக்க வேண்டுமெனவும் தேருநர் இடாப்பில் பெயர் குறிப்பிடப்பட்டதன் பின்னர் வாக்களிக்காத நபர்களிடமிருந்து தண்டப் பணமொன்றை அறவிவிடுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.64/ ’10

25.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழலற்ற உலகொன்றை உறுதிப்படுத்தல்,— ஊழலை முற்றாக ஒழிப்பதற்காக இலங்கை பாராளுமன்ற உறுப்பினர்கள் ஒன்றிணைந்து உலகிலுள்ள பாராளுமன்ற அமைப்புக்களில் சேர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 69/ ‘10

26.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஏமாற்றப்பட்ட பண வைப்பாளர்களுக்கு தமது நிதிகளை மீளச் செலுத்துதல்,— போலி நிதி நிறுவனங்களில் தமது பணத்தை வைப்பிலிட்டு அதனால் ஏமாற்றமடைந்த அநேகமானோர் இருப்பதனாலும் கடந்த 2009/2010 தேர்தல் பிரசாரங்களில் இந்த அரசாங்கம் பண வைப்பாளர்கள் மற்றும் நிதி நிறுவனங்களுக்கு அவற்றின் மிகுதிப் பணத்தை மீளச் செலுத்த வாக்குறுதி அளித்திருப்பதனாலும் மத்திய வங்கி இந்நிறுவனங்களின் பொறுப்பாளராக இருப்பதனால் மிகவும் வினைத்திறனுடன் செயற்படவேண்டுமென்பதோடு பண வைப்பாளர்களுக்கு அவர்களது மிகுதிப் பணத்தை பெற்றுக் கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 81/ ‘10

27.

கௌரவ புத்திக பதிரண,— தொழில் சந்தைக்குத் தேவையான ஊழியர்களை பயிற்றுவித்தல்,— எதிர்காலத்தில் இலங்கையில் உருவாகும் புதிய தொழில் வாய்ப்புகளுக்குத் தேவையான ஊழியர்களைப் பயிற்றுவிக்கும் வழியொன்றைத் தொடங்கி வைக்கும் பணியை மிகவும் வினைத்திறனான வகையில், நாட்டினுள் காணப்படும் அனைத்து மூன்றாம் நிலைக்கல்வி நிறுவனங்களினூடாக ஆரம்பித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 82/ ‘10

28.

கௌரவ புத்திக பதிரண,— பொதுநிர்வாக கட்டமைப்பை மறுசீரமைத்தல்,— தற்சமயம் பொதுநிர்வாக அமைச்சினால் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளின் எல்லைகளை மீள நிர்ணயிப்பதற்கனான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுவருவதோடு அவ்வாறு எல்லை நிர்ணயம் செய்யப்படும் கிராம உத்தியோகத்தர் பிரிவுகளினூடாக புதிய பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேச எல்லைகளையும் புதிய மாவட்ட எல்லைகளையும் நிர்ணயிக்க வேண்டுமெனவும், இவ்வாறு நிர்ணயிக்கப்படும் பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசங்கள் உள்ளூராட்சி மன்ற ஆளுகைப் பிரதேசங்களாக மாற்றியமைக்க வேண்டுமெனவும், அத்தகைய ஆளுகைப் பிரதேசத்தினுள் கோட்டக் கல்வி அதிகாரப் பிரதேசம், பொலிஸ் அதிகாரப் பிரதேசம், கமநல சேவைகள் அதிகாரப் பிரதேசம், பிரதேச சுகாதார சேவை உத்தியோகத்தர் அதிகாரப் பிரசேதம் உள்ளிட்ட சகல அரச நிறுவனங்களினதும் அதிகாரப் பிரதேச எல்லைகள் உள்ளடங்கும் வகையில் ஒட்டுமொத்தமான பொதுத்துறைக் கட்டமைப்பும் திருத்தப்பட வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 83/ ’10

29.

கௌரவ புத்திக பதிரண,— நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை மீள ஆரம்பித்தல்,— மாத்தறை மாவட்டத்தின் நில்வளா கங்கை திட்டத்தின் அபிவிருத்திப் பணிகள் இடைநடுவில் முடங்கியிருப்பதால் அப்பள்ளத்தாக்கின் ஊட்டப் பிரதேசத்தில் பயிர்ச்செய்கைகளை மேற்கொள்ளும் மக்கள் முகங்கொடுத்துள்ள பிரச்சினைகளுக்கு விரைவில் தீர்வு வழங்க நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும், நில்வளா கங்கை திட்டத்தின் எதிர்கால அபிவிருத்திப் பணிகளை விரைவில் மீள ஆரம்பிக்க வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 84/ ’10

30.

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்களின் பிரதிநிதிகளின் பதவிக் காலத்துக்குப் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குதல்,— மாகாண சபை மற்றும் உள்ளூராட்சி நிறுவனங்களின் மக்கள் பிரதிநிதிகளுக்கு வழங்கப்படுகின்ற, சமாதான நீதவான் பதவியானது, அவர்களது பதவிக் காலத்துக்கு மட்டும் வரையறுக்கப்பட்டுள்ளதாலும், இப்பதவிக்காலத்தின் பின்னரும், அவர்களிடம் மேற்படி சேவையினைப் பெறுவதற்காக வரும் அநேகமானோர் சிரமங்களுக்கு உள்ளாகின்றனர் என்பதாலும், இம் மக்கள் பிரதிநிதிகளுக்கு தமது பதவிக் காலத்தின் பின்னரும், சமாதான நீதவான் பதவியினை வழங்குவதற்கான தகுந்ததொரு வேலைத் திட்டத்தினை வகுத்தல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 85/ '10

31

கௌரவ புத்திக பதிரண,— மாகாண சபை அமைச்சர்கள் மற்றும் உறுப்பினர்கள் அனைவரினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் குறித்து மீளாய்வு செய்தல்,— நாட்டில் தற்போது இயங்கி வருகின்ற மாகாண சபைகள் மற்றும் எதிர்காலத்தில் ஒழுங்கு முறையாக செயற்படவுள்ள வடமாகாண சபையின், கௌரவ அமைச்சர்கள், தவிசாளர்கள், உபதவிசாளர்கள், ஆளும் கட்சியின் முதற்கோலாசான், சபைத் தலைவர்கள், எதிர்க் கட்சித் தலைவர்கள், எதிர்க் கட்சியின் முதற்கோலாசான் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்கான முறையில் காணப்படாமையினால், இது தொடர்பாக ஆழமாக ஆராய்ந்து அதற்கான ஒழங்கான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 86/ '10

32.

கௌரவ புத்திக பதிரண,— உள்ளூராட்சி நிறுவனங்களின் அனைத்து மக்கள் பிரதிநிதிகளினதும் கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகளை மீளாய்வு செய்தல்,— நாட்டில் நடைமுறையிலுள்ள மற்றும் எதிர்காலத்தில் நடைமுறைப்படுத்தப்படவுள்ள அனைத்து மாநகர சபை, நகர சபை, மற்றும் பிரதேச சபைகளினதும் நகரபிதாக்கள், நகர சபைத் தலைவர்கள், மற்றும் பிரதேச சபைத் தலைவர்கள், பிரதி நகரபிதாக்கள், பிரதி நகர சபைத் தலைவர்கள், உப தலைவர்கள், எதிர்க்கட்சித் தலைவர்கள் மற்றும் கௌரவ உறுப்பினர்கள் ஆகியோரின் கொடுப்பனவுகள், சிறப்புரிமைகள் மற்றும் வசதிகள் ஒழுங்குமுறையாக இல்லாத காரணத்த்தால் இது தொட்பாக ஆழமாக ஆராய்ந்து இதற்கான ஒழுங்குமுறையுடன் கூடிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 87/ '10

33.

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு கிழக்கில் காணாமற் போன தமிழ் மக்களுக்கு மரணச் சான்றிதழ் வழங்குதல்,— வடக்கு கிழக்கு பிரதேசங்களில் யுத்தம் நடைபெற்ற கடந்த மூன்று தசாப்த காலமாக பல்வேறு காரணங்களால் காணாமற் போயுள்ளவர்கள் தற்போது உயிர் வாழ்கின்றார்களா, இல்லையா என்பதையிட்டு துரிதமாக விசாரணை செய்து, இவர்கள் உயிருடன் இல்லாதிருப்பின் இவர்களுக்கான மரணச் சான்றிதழ்களை வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 88/ '10

34.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல்,— அனைத்து அரசியல் கட்சிகளையும் பிரதிநிதித்துவப்படுத்துகின்ற கௌரவ பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்ட தெரிகுழுவொன்றை நியமித்து, இலங்கைக்கு உகந்த தேசிய இளைஞர் கொள்கையொன்றை வகுத்தல் ஆரம்பிக்கப்பட்ட வேண்டுமெனவும் அந்நோக்கத்திற்காக அதனுடன் தொடர்புடைய அனைத்துத் துறைகளும் பிரதிநிதித்துவப்படுத்தும் வகையில் தேர்ச்சி பெற்றவர்கள் அறிஞர்கள் மற்றும் புத்திஜீவிகளினதும் அதேபோன்று அரச மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் ஒத்துழைப்பைப் பெற்றுக்கொள்ள வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 89/ '10

35.

கௌரவ புத்திக பதிரண,— அரசாங்க பாடசாலைகளையும், பல்கலைக் கழகங்களையும் விடுமுறை நாட்களில் கற்கை அலகுகளுக்காகப் பெற்றுக்கொடுத்தல்,— அரசாங்க பாடசாலைகளின் விடுமுறை நாட்களிலும் பிற்பகல் நேரத்திலும், பல்கலைக்கழகங்களின் விடுமுறை நாட்களிலும், அந்த நிலையங்களை அடிப்படையாகக் கொண்டு, வர்த்தக சமுதாயத்தினரையும், அரச சார்பற்ற அமைப்புகளையும், வர்த்தகச் சபைகளையும், சமுதாய அடிப்படையிலான அமைப்புகளையும் இணைத்துக்கொள்கின்றதான விரிவானதொரு வேலைத்திட்டமாக, முதியோர் மற்றும் முறைசாரா கற்கை அலகுகள் சலுகைக் கட்டண அடிப்படையில் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 90/ ’10

36.

கௌரவ புத்திக பதிரண,— வெற்றிடமாகின்ற கிராம உத்தியோகத்தர் பதவிகளில் பதிற் கடமை புரியும் நியமனங்களுக்காக வினைத்திறன்மிக்க வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல்,— கிராம உத்தியோகத்தர் பதவியில் வெற்றிடம் ஏற்படுகின்ற சந்தர்ப்பத்தில் அண்மையிலுள்ள கிராம உத்தியோகத்தர் பிரிவைச் சேர்ந்த கிராம உத்தியோகத்தர் மிகச் சிறியதொரு கொடுப்பனவின் அடிப்படையில் பதிற்கடமைக்காக நியமிக்கப்படுவதாலும், மேற்படி பதிற் கடமை நியமனத்தின் மூலம் கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் இரண்டினதும் வினைத்திறன் வீழ்ச்சயடைவதாலும், இந்த நிலைமையை தவிர்த்துக் கொள்ளும் பொருட்டு சகல பிரதேச செயலகப் பிரிவுகளிலும் கிராம உத்தியோகத்தர் சேர்மம் ஒன்றை அமைக்க வேண்டுமென்பதோடு, வெற்றிடம் ஏற்படுகின்ற பிரிவுகளுக்கு மேற்படி சேர்மத்திலிருந்து கிராம உத்தியோகத்தர்களை நியமிப்பதற்கும், மேற்படி சேர்மத்திலுள்ள கிராம உத்தியோகத்தர்களை, பிரதேச செயலாளரினால் ஒப்படைக்கப்படுகின்ற வேறு பயனுள்ள துறைகளில் அல்லது கடமைகளில் ஈடுபடுத்துவதற்குமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 91/ ‘10

37.

கௌரவ புத்திக பதிரண,— தற்போது செயற்படும் சிவில் பாதுகாப்புக் குழுக்குகளுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரத்தை வழங்குதல்,— சகல கிராம உத்தியோகத்தர் பிரிவுகளிலும் அமைந்துள்ள மத வழிபாட்டுத் தலங்களின் தலைமை தேரர், மதகுரு, பாடசாலை அதிபர், கிராம உத்தியோகத்தர், சமுர்த்தி அபிவிருத்தி உத்தியோகத்தர், கமத்தொழில் ஆராய்ச்சி உதவியாளர், சனசபைச் செயலாளர்கள், பிரதேசத்தின் பொலிஸ் நிலையத்தைப் பிரதிநிதித்துவம் செய்யும் ஒரு உத்தியோகத்தர், மற்றும் உரிய கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள தொண்டர் அமைப்புக்கள், அரச மற்றும் தனியார் துறைகளில் பணிபுரியும் உரிய பிரிவில் வசிக்கும் பிரதிநிதிகளை உள்ளடக்கிய சிவில் பாதுகாப்புக் குழுக்கள் அமைக்கப்படுவதை மிகவும் எளிதாக்கும் பொருட்டு தற்போதைய சிவில் பாதுகாப்புக் குழுக்களுக்கு உத்தியோகபூர்வ அங்கீகாரமொன்றை வழங்கக்கூடியவாறான பாராளுமன்றச் சட்டமொன்று நிறைவேற்றப்படுதல் வேண்டுமெனவும் அதனூடாக கிராம உத்தியோகத்தர் பிரிவில் நடைபெறுகின்ற குற்றச் செயல்கள், துர்நடத்தைகள் மற்றும் சட்ட விரோத நடவடிக்கைகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட பிரிவுகளுடன் சிறந்த தொடர்பைக் கட்டியெழுப்புவதற்கு இயலுமானவாறு குறித்த சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 92/ ‘10

38.

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் தற்பொது அமுலில் உள்ள காலங்கடந்த சட்டங்களை இற்றைப்படுத்துதல்,— தற்போதும் இலங்கையில் ஏகாதிபத்திய வழிகளின் காலத்தில் அறிமுகஞ் செய்யப்பட்ட சட்டங்கள் அமுலாகிவருவதால் காலங்கடந்த தண்டனைகள், தண்டப்பணம் என்பவற்றை இற்றைப்படுத்துவதற்கான தேசிய வேலைத் திட்டமொன்று நடைமுறைப்படுத்தப்படுத்தப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 93/ ‘10

39.

கௌரவ புத்திக பத்திரண,— தேர்தல்ள் அனைத்தையும் ஒரே நாளில் நடத்துதல்,— இலங்கையில் 1988 இல் இருந்து 2010 வரையான 22 வருட காலப்பகுதிக்குள் 1990, 1992, 1995, 1996, 1998, 2003, மற்றும் 2007 ஆம் ஆண்டுகளைத் தவிர்ந்த ஏனைய ஒவ்வோர் ஆண்டிலும் ஏதேனும் ஒரு தேர்தல் நடத்தப்பட்டுள்ளதோடு அவ்விதமாக தேர்தல்களை நடத்துதலானது மக்களின் அபிப்பிராயத்தைக் கண்டறிவதற்கான பெறுமதி மிக்க அளவுகோலாக அமைந்த போதிலும், இதன் மூலமாக நாட்டின் பொருளாதாரம், நிருவாகம் போன்ற அனைத்துத் துறைகளிலும் தீவிரமான தாக்கம் ஏற்படுத்தப்படுவதால் உள்ளூராட்சித் தேர்தல்கள், பொதுத்தேர்தல்கள் மற்றும் சனாதிபதித் தேர்தலை ஒரே நாளில் நடத்துவதற்கேதுவாக மேற்படி நிறுவனங்களின் பதவிக் காலத்தை திருத்தியமைக்கவும் பொருத்தமான தேர்தல் வழிமுறையொன்றை உருவாக்கவும் தகுந்தவாறு அரசியலமைப்புத் திருத்தமொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 94/ '10

40.

கௌரவ புத்திக பத்திரண,— பாராளுமன்ற சனநாயகத்தை வலுப்படுத்துவதற்காக நடவடிக்கை மேற்கொள்ளுதல்,— நாட்டினுள் சனநாயகத்தை மேலும் வலுவூட்டும் நோக்கத்துடன் பாராளுமன்றத்திற்கும் மாகாண சபைகளுக்கிடையிலும், மாகாண சபைகளுக்கும் உள்ளூராட்சி நிறுவனங்களுக்கிடையிலும் சிறந்த இணைப்பினை பேணிவருதல் அத்தியாவசியமாயுள்ளதோடு, இதற்கு உள்ளூராட்சி சபைகளின் தலைவர்கள் மாகாண சபைகளில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதிசெய்வதற்கும் மாகாண சபை தலைவர்கள் பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிப்பதை உறுதி செய்வதற்குமான செயல்முறையொன்றை தயாரிப்பதற்குத் தேவையான அரசியலமைப்புத் திருத்தமொன்று மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 95/ '10

41.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய ஒருமைப்பாட்டை ஏற்படுத்துவதற்கு நடவடிக்கை எடுத்தல்,— தேசிய ஒருமைப்பாட்டை மேம்படுத்தும் நோக்கில் தமிழ் மொழி பேசுகின்ற மக்கள் வாழ்ந்து வரும் பிரதேசங்களில் சிங்கள மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும் சிங்கள மொழி பேசுகின்ற மக்கள் வாழும் பிரதேசங்களில் தமிழ் மொழிப் பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களையும், அரச, அரச சார்பற்ற மற்றும் தனியார் நிறுவனங்களின் உதவியுடன் நடைமுறைப்படுத்தல் வேண்டுமென்பதுடன், அரச மற்றும் தனியார் இலத்திரனியல் ஊடகங்கள் மட்டுமன்றி அச்சு ஊடக நிறுவனங்களின் ஒத்துழைப்பினையும் பெற்றுக்கொண்டு இப்பயிற்சி நிகழ்ச்சித்திட்டங்களை ஆரம்பிப்பதற்கான ஒரு தேசிய நிகழ்ச்சித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 96/ '10

42.

கௌரவ புத்திக பதிரண,— வாழ்க்கைத் துணையின் தகாத செயல்களினால் நிர்க்கதிக்குள்ளாகும் தரப்பினருக்கு நிவாரணமளித்தல்,— திருமணமான கணவன் மனைவி தம்பதிகள் ஒரே வீட்டில் வாழ்கின்ற சந்தர்ப்பங்களில் கணவன் அல்லது மனைவி மதுபாவனை சூதாட்டம் அல்லது வேறு துர்நடத்தைகளில் ஈடுபட்டு, காணி, வீடு அல்லது வீட்டுப் பாவனைப் பொருட்களை தனது தற்றுணிபின் பிரகாரம் விற்பதன் காரணமாக அல்லது வேறு நபர்களுக்கு ஒப்படைப்பதன் காரணமாக மற்றைய தரப்பினருடன் பிள்ளைகளும் கடும் நிர்க்கதி நிலைக்குள்ளாகின்ற சந்தர்ப்பங்களில் அந்நிலைமையை தடுப்பதற்குத் தேவையான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 98/ '10

43.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுக்க நெறிகள் பற்றிய குழுவை தாபித்தல்,— இலங்கைப் பாராளுமன்ற உறுப்பினர்களின் நம்பகத்தன்மையையும் அவர்களிடத்தில் உயரிய ஒழுக்க நெறிகளையும் பேணவேண்டிய தேவைப்பாட்டைப் பற்றி ஆராய்வதற்காக ஒழுக்க நெறிகள் பற்றிய குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 99/ '10

44.

கௌரவ புத்திக பத்திரண,— புதிய இலத்திரனியல் அடையாள அட்டையை வழங்குதல்,— நிர்வாகத்தை எளிதாக்குதல், குற்றங்களை கட்டுப்படுத்துதல் மற்றும் ஏனைய மோசடியான நடவடிக்கைகளில் ஈடுபடுவதைக் குறைப்பதற்காக, குறித்த நபரின் இரத்தப் பிரிவு, வங்கிக் கணக்குகள், கடன் அட்டை, கல்வித் தகைமை, சாரதி அனுமதிப்பத்திரம் மற்றும் வெளிநாட்டுப் பிரயாண கடவுச்சீட்டு இலக்கம் ஆகிய முக்கியமானதும் தேவையானதுமான தகவல்களை உள்ளடக்கிய புதிய இலத்திரனியல் இலக்கத்துடனான, தேசிய அடையாள அட்டையொன்று வழங்கப்படுதல் வேண்டும் எனவும், பிரதேச செயலகப் பிரிவுகளில் வசிக்கும் அனைவரது தகவல்களையும், கிராம உத்தியோகத்தர் பிரிவுகள் மட்டத்தில் கணனிமயப்படுத்தலை துரிதப்படுத்தல் வேண்டும் எனவும் இத் தகவல்கள் அவ்வப்போது இற்றைப்படுத்தப்படல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 100/ '10

45.

கௌரவ புத்திக பத்திரண,— ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கும் இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், ஓய்வு பெறுவதற்கு வாய்ப்பளித்தல்,— பொலிஸ் திணைக்களத்தில் பெண் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கான இருபது வருட சேவைக் காலத்தின் பின்னர், சுயவிருப்பில் ஓய்வு பெறுவதற்கான இயலுமானது, ஆண் பொலிஸ் உத்தியோகத்தர்கள் தொடர்பிலும் ஏற்புடையதாதல் வேண்டுமென்றும் அதற்கான செயல்முறை ஒன்று உருவாக்கப்படல் வேண்டுமென்றும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 101/ '10

46.

கௌரவ புத்திக பத்திரண,— ஒழுங்குவிதிகளை நீக்குவதற்கான குழுவை தாபித்தல்,— ஒழுங்குவிதிகள் உருவாக்கப்படுவதும் நீக்கப்படுவதும் அன்றாடம் இடம்பெறும் நடைமுறையாதலால், காலம் கடந்த ஒழுங்குவிதிகளை நீக்குவது பற்றி ஆராய்வதன் பொருட்டு ஒழுங்கு விதிகளை நீக்குவதற்கான குழு ஒன்று தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 102/ '10

47.

கௌரவ புத்திக பதிரண,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களை, சேவையில் நிரந்தரமாக்கல்,— சிவில் பாதுகாப்புப் படையைச் சார்ந்த உத்தியோகத்தர்களுக்கும் அரசாங்கத்தின் ஏனைய பாதுகாப்புப் பிரிவுகளில் மற்றும் திணைக்களங்களில் சேவையில் ஈடுபடும் உத்தியோகத்தர்களுக்கு உள்ளதைப் போன்று சம்பளம், கொடுப்பனவு, நிரந்தர சேவை மற்றும் ஓய்வூதியத்துடனான உத்தியோக அந்தஸ்து வழங்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 103/ '10

48.

கௌரவ புத்திக பத்திரண,— உறுதியளித்தல் பற்றிய குழுவை தாபித்தல்,— பாராளுமன்றத்தில் கேட்கப்படும் வினாக்களுக்கு விடைகளாக அரசாங்கம் வழங்கும் உறுதி மொழிகளும் அரசாங்கத்தின் கடப்பாடுகளும் மீறப்படுகின்ற பல சந்தர்ப்பங்களைக் காணக்கூடியதாயுள்ளதால் அரசாங்கம் தனது பொறுப்புக்களை நிறைவேற்றுவதையும் அவை தொடர்பில் பொறுப்புக் கூறுவதையும் உறுதி செய்யும் பொருட்டு உறுதியளித்தல் பற்றிய குழுக்களை தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா. 105/ '10

49.

கௌரவ புத்திக பத்திரண,- புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளின் உற்பத்தித் திறனை அதிகரிக்கச் செய்தல்,- இலங்கை புகையிரத திணைக்களத்திற்குச் சொந்தமான காணிகளில் உள்ள அனுமதியற்ற கட்டுமானங்களையும் அனுமதியற்ற குடியிருப்பாளர்களையும் துரிதமாக அப்புறப்படுத்தி சட்டரீதியான கட்டுமானங்கள் தொடர்பான உடன்படிக்கைகளை மீளாய்வுக்குட்படுத்துவதன் மூலம் திணைக்களத்திற்கு கிடைக்கும் வருமானங்களை அதிகரிக்கச் செய்ய வேண்டுமென்பதுடன், திணைக்களத்தின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு நேரடி தாக்கத்தை ஏற்படுத்தாத காணிகளை நீண்ட கால குத்தகை அடிப்படையில் தனியார் துறைக்கு வழங்கி, அந்நிதியை புகையிரத வலைப்பின்னலின் நவீனமயமாக்கலுக்கு பயன்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.108/ '10

50.

கௌரவ புத்திக பத்திரண,— பிச்சைக்காரர்களின் வாழ்வைப் பாதுகாப்பதற்கான முறையியலொன்றைத் தயாரித்தல்,— தற்போது பிச்சைக்காரர்களின் வாழ்வுக்கு பாரியளவில் அச்சுறுத்தல் ஏற்பட்டுள்ளதால் அவர்களது வாழ்வைப் பேணிக்காக்கும் பொருட்டு, அவர்களுக்கு பயிரிடுவதற்கான காணிகளை வழங்கி அதிலிருந்து கிடைக்கின்ற வருமானத்தில் அவர்களது வாழ்வின் பாதுகாப்பினையும் போசனையையும் உறுதிப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.109/ ’10

51.

கௌரவ புத்திக பத்திரண,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுப்பதற்காக முறையியலொன்றைத் தயாரித்தல்,— கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களின் மூலம் மனித உயிர்களுக்கு ஏற்படுகின்ற சேதத்தை தடுக்கும் நோக்கத்தோடு, அரசாங்கம் நிலப் பரப்பொன்றை ஒதுக்கி கட்டாக்காலியாக திரிகின்ற நாய்களை அவ்விடத்திற்குக் கொண்டுசென்று அவற்றைப் பராமரிப்பதற்குப் பொருத்தமான வேலைத்திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.110/ ’10

52.

கௌரவ புத்திக பத்திரண,— சிறுவர் துஷ்பிரயோக சம்பவங்கள் தொடர்பில் கடுமையான தண்டனைகளை விதித்தல்,— நாடு முழுவதிலும் சிறுவர் துஷ்பிரயோகங்கள் நாளுக்கு நாள் சடுதியாக அதிகரித்துவரும் நிலைமை ஏற்பட்டுள்ளதால், அது தொடர்பாக தற்போதுள்ள சட்ட விதிகள் போதியதாக இல்லாதிருப்பின், புதிய சட்ட விதிகளை புதிதாக நிறைவேற்றி மிகவும் துரிதமாக இது தொடர்பான வழக்குகளை தீர்ப்பதற்காக நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.111/ ’10

53.

கௌரவ புத்திக பத்திரண,— சுற்றுலாத்துறையை மேம்படுத்துவதற்காக கரையோர நுழைவுப் பாதைகளை அமைத்தல்,— நாட்டின் கரையோர வலயத்தில் துரிதமாக இடம்பெறுகின்ற நிர்மாணங்கள் காரணமாக உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் மற்றும் கடற்றொழிலாளர்கள் கடற்கரைக்கு பிரவேசிப்பதில் அசௌகரியம் ஏற்படுதலானது, சுற்றுலாத்துறை மேம்பாட்டிற்கும் கடற்றொழிலை மேற்கொள்வதற்கும் தடைகளை ஏற்படுத்துவதனால், இந்நிலமையை தடுப்பதற்கும் இத்துறைகளை மேம்படுத்துவதை நோக்காகக் கொண்டும் கடற்கரை நுழைவுப் பாதை முறைமையொன்று அமைக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.112/ ’10

54.

கௌரவ புத்திக பத்திரண,— கல்வி நிருவாக சேவை உத்தியோகத்தர்களின் சம்பள முரண்பாடுகளை நீக்குதல்,— அதிபர் சேவை, ஆசிரியர் சேவை, கல்வி நிருவாக சேவை ஆகிய சேவைகளில் பாரிய சம்பள முரண்பாடுகள் நிலவுவதால் இந்நிலைமையை போக்கி இவர்களின் சுய கௌரவத்திற்கு உகந்ததொரு சம்பளத்தைக் கிடைக்கச் செய்யும் வகையில், சம்பள முரண்பாடுகளை நீக்குவதற்குரிய முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.113/ ’10

55.

கௌரவ புத்திக பத்திரண,— பௌத்த பிக்குக் கல்வியை மேம்படுத்துதல்,— பௌத்த பிக்குமார்களின் மத அறிவை மேம்படுத்தும் நோக்கத்தோடு அவர்களின் பேச்சாற்றல், செவிமடுக்கும் ஆற்றல், கனணி, உளவியல் மற்றும் ஆலோசனை பற்றிய அறிவு என்பவற்றை மேம்படுத்துவதற்காக, தற்போதுள்ள பிக்குக் கல்வி நிறுவனங்களுக்குப் புறம்பாக இப்பணிக்ளுக்கே ஒதுக்கப்பட்டதான பிக்குக் கல்வி நிறுவனங்களை உருவாக்குவதற்கான முறையியலொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.114/’10

56.

கௌரவ புத்திக பத்திரண,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவையை இற்றைப்படுத்துதல்,— இலங்கையில் தற்போது நடைமுறையிலுள்ள நொத்தாரிசு சேவை காலங்கடந்த சட்டங்களைக் கொண்டுள்ளதால் அது தொடர்பாக மீள பரிசீலனை செய்து தற்காலத்திற்குப் பொருத்தமானவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.115/’10

57.

கௌரவ புத்திக பத்திரண,— உலர் வலய சேனைப் பயிர்செய்கையாளர்களின் பொருளாதாரத்தை வலுவூட்டுதல்,— உலர் வலயங்களில் சேனைப் பயிர்செய்கையாளர்களால் பயிரிடப்படுகின்ற நெல், குரக்கன், பயறு, எள்ளு ஆகிய பயிர்களின் விளைச்சலை அதிகரிப்பதற்கும் உற்பத்திப் பொருட்களை பதனிடுவதற்கும் ஏதுவான வகையில் புதிய தொழிட்நுட்பத்தை அறிமுகப்படுத்துவதன் மூலம் தரச்சிறப்புவாய்ந்த வகையில் உற்பத்திகளை பதனிடுவதற்கும், உள்நாட்டு மற்றும் சர்வதேச சந்தைகளில் உற்பத்திகளை சந்தைப்படுத்தும் நடவடிக்கையை வலுவூட்டுவதற்கும் வரையறுக்கப்பட்ட கூட்டுறவு கம்பனிகள் தாபிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.116/’10

58.

கௌரவ புத்திக பதிரண,— ஆசிரியர் ஆலோசனை சேவையை உருவாக்குதல்,— இலங்கையில் கல்வித் தரத்தை அபிவிருத்தி செய்யும் நோக்கத்தோடு இற்றைக்கு சுமார் இருபது (20) வருடங்களுக்கு முன்னர் தொட்டு ஆரம்பமாகி நடைமுறையிலிருக்கும் ஆசிரியர் ஆலேசானை சேவையை தனியானதொரு சேவை அலகாக தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.118/ ’10

59.

கௌரவ புத்திக பத்திரண,— கோதுமை மாவிற்குப் பதிலாக அரிசி மாவை மக்கள் மத்தியில் பிரபல்யப்படுத்துவதற்காக புதிய தொழில் நுட்பத்தை அறிமுகப்படுத்துதல்,— கோதுமை மாவிற்காக வெளிநாடுகளுக்கு வெளிப் பாய்ச்சப்படும் பெருமளவு செலாவணியை நிறுத்தும் நோக்கத்துடன், மாற்றீடாக பயன்படுத்தக்கூடிய அரிசி மாவினால் தயாரிக்கப்படும் உணவை பிரபல்யப்படுத்துவதற்கும், நார்த்தன்மை கொண்ட தானிய வகையான அரிசியை மிகவும் மென்மையானதாக கோதுமை மாவைப் போன்று அரைப்பதற்கும், கோதுமை மா அரைப்பதற்கு பயன்படுத்தப்படுவதைப் போன்ற இயந்திர உபகரணங்களையும் புதிய தொழில்நுட்பத்தையும் அறிமுகப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.119/ ’10

60.

கௌரவ புத்திக பத்திரண,— யுத்தத்தால் அங்கவீனமுற்றவர்களுக்கு நிவாரணம் வழங்குதல்,— ஏறக்குறைய 30 வருடகாலமாக நடைபெற்ற யுத்தம் காரணமாக அன்றாடம் நாட்கூலிக்கு வேலை செய்து வாழ்ந்த மக்கள் மற்றும் நிரந்தர தொழில் புரிந்த மக்கள் மத்தியில் குறிப்பிடத்தக்க எண்ணிக்கையானோர் உடலுறுப்புக்களை இழந்து அங்கவீனர்களாக வாழ்க்கைச் சுமையினால் பெரும் பாதிப்புக்குள்ளாகி நிர்க்கதியான நிலையில் வாழ்வதால், அவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.120/ '10

61.

கௌரவ புத்திக பத்திரண,— உயர் பிரமுகர்களின் பாதுகாவலர்கள் அனைவருக்கும் பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குதல்,— ஜனாதிபதி பாதுகாப்புச் சேவை மற்றும் பிரதம அமைச்சர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களைப் போன்று ஏனைய உயர் பிரமுகர் பாதுகாப்பு சேவையில் ஈடுபட்டுள்ள உத்தியோகத்தர்களுக்கும் சமமான பிரயாணச் செலவுக் கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.127/'11

62.

கௌரவ ரவி கருணாநாயக்க,— காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு மீள் பெயரிடுதல்,— இலவசக் கல்வியின் தந்தை காலஞ்சென்ற கௌரவ (கலாநிதி) சீ. டபிள்யூ. டபிள்யூ. கன்னங்கர அவர்களுக்கு மரியாதை செலுத்தும் முகமாக காலி சர்வதேச விளையாட்டரங்கிற்கு அவரின் பெயரை சூட்டவேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.130/'11

63.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரி குழுவொன்றை நியமித்தல்,— தேர்தல் நடைமுறைகள் மற்றும் தேர்தல்களை நடாத்துதல் பற்றிய பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நிரந்தர அடிப்படையில் நியமிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.131/'11

64.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் ஆகிய நிதியங்களிலிருந்து பணம் உடனடியாக செலுத்துதல்,— ஊழியர் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் மற்றும் ஊழியர் சேமலாப நிதியம் ஆகியனவற்றுக்கு பங்களிப்புச் செய்கின்ற சகல அங்கத்தவர்களுக்கு செலுத்த வேண்டிய தொகைகள் செயல்படுநிலைத் தொழிலிருந்து ஓய்வு பெற்று ஒரு மாத காலத்தின் பின்னர் அவர்களுக்கான நிலுவைகள் செலுத்தப்படுவதற்கான ஏற்பாடுகள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.132/'11

65.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச ஊடகங்களில் பக்கச் சார்பற்ற தன்மையை உறுதிப்படுத்தல்,— அரச ஊடகங்கள் இலங்கைப் பிரசைகளின் விசேட உரிமையாக இருப்பதாலும், அரச ஊடகங்கள் தொடர்ச்சியாக அரசியல்மயப்பட்டு இருப்பதாலும், இலங்கையில் பதிவு செய்யப்பட்டுள்ள சகல அரசியல் கட்சிகளுக்கும் அரச ஊடகங்களில் சமமாக நடதப்பட்டு சம வாய்ப்புகள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.133/'11

66.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அரச சேவையில் மொழித் தேர்ச்சியின் தேவைப்பாடுகள்,— 2025 ஆம் ஆண்டளவில் சகல அரச சேவை ஊழியர்களும், தமிழ், சிங்களம், ஆங்கிலம் ஆகிய மூன்று மொழிகளிலும் கருமங்களை ஆற்றக் கூடியவர்களாகவும் கடிதப் பரிமாற்றல் மூலம் பணியாற்றுவதற்கும் பேசுவதற்கும் இயலுமையுடையவர்களாக இருப்பதை அரசாங்கம் கட்டாயமாக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.134/'11

67.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத்திட்ட ஒதுக்கீட்டினை வழங்குதல், — இப்பாராளுமன்றத்தின் 225 உறுப்பினர்களும் மொத்த உள்நாட்டு உற்பத்தியின் 1%ற்கு சமமாகின்ற பன்முகப்படுத்தப்பட்ட வரவுசெலவுத் திட்ட ஒதுக்கீட்டிற்கு வருடாந்த அடிப்படையில் உரித்துடையவர்களாக வேண்டுமென்றும் மேலும் இந்த ஒதுக்கீடானது 50% மூலதனச் செலவின்மீது பயன்படுத்தப்படல் வேண்டுமென்றும் எஞ்சியுள்ளவை தனது வாக்காளர்களின் சார்பில் பாராளுமன்ற உறுப்பினர் விரும்புகின்றதும் அரசாங்கத்தின் வழிகாட்டலை அடிப்படையாகக் கொண்டதுமான எவ்வடிப்படையிலும் செலவழிக்கப்படலாமென்றும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.138 / 11

68.

கௌரவ புத்திக பத்திரன,— பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கற்கை நெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக ஆக்குதல்,— நாட்டின் அனைத்து அரசாங்க பல்கலைக்கழகங்கள் மற்றும் தனியார் பல்கலைக்கழகங்களால் நடாத்தப்படுகின்ற கலைக் கல்விகளுக்கான பட்டப்படிப்பு கற்கைநெறிகளை தொழில்மையக் கற்கைநெறிகளாக மாற்றி அதன் மூலமாக உருவாகின்ற பட்டதாரிகளுக்கு புதிய தொழில்வாய்ப்புகளை வழங்கும் நோக்கத்துடன், அனைத்துப் பல்கலைக்கழகங்களுடன் அரச மற்றும் தனியார் துறை நிறுவனங்களை இணைப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.139/'11

69.

கௌரவ புத்திக பத்திரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்கின்ற வான்களுக்கான தரநியமங்களை விதித்தல்,— நாடு பூராவும் நடாத்தப்படுகின்ற பாடசாலை மாணவர்களுக்கான போக்குவரத்துச் சேவைகள் உரிய தரத்தில் இல்லாமையினாலும், சில பாடசாலை வான்களின் ஊழியர்களது நடத்தை சிறந்ததாக இல்லாமையினாலும், உரிய தரநியமங்களுடன் கூடிய வான் சேவையொன்றை நடாத்துவதற்காகவும், மேற்படி சேவையைப் பெறுகின்ற பாடசாலை மாணவ மாணவிகளது பாதுகாப்பை உறுதி செய்வதற்காகவும் வான் சேவைகளுக்கான தரநியமங்களை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும், வான் ஊழியர்களிடையே சிறந்த பழக்க வழக்கங்களைப் பேணிவருவதற்காக ஒழுக்க நெறிக் கோவையொன்றை அறிமுகப்படுத்துதல் வேண்டுமெனவும் இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.147/11

70.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,– பேரிச்சம் பழச் செய்கையை அறிமுகப் படுத்துவற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்படுதல்,– மட்டக்களப்பு மாவட்டத்திலுள்ள காத்தான்குடியில் பரீட்சார்த்தமாகப் பயிர் செய்யப்பட்ட பீனிக்ஸ் டெக்லிபெரா *(Phoenix dactylifera)* என்ற பேரிச்சம் பழச் செய்கை வெற்றியளித்துள்ளதால், எமது சொந்த மண்ணில் வளர்ந்த நற்சுவைமிக்க இப் பழத்தை சுவைப்பதற்கான வாய்ப்புகள் எமது நாட்டு மக்களுக்கும் கிடைக்கக்கூடியவாறு இப் பேரிச்சம் பழச் செய்கையை எமது நாட்டிலும் அறிமுகப்படுத்துவதற்குரிய வாய்ப்புகள் பற்றி விரிவான ஆய்வுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இச்சபை கருதுகிறது.

பா.151/'11

71.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வானோலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— வானொலி ஒலிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.152/'11

72.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தல்,— தொலைக்காட்சி நிகழ்ச்சிகளின் ஒளிபரப்பை ஒழுங்குபடுத்தும் ஒரு சுயாதீன அதிகார சபையை கூட்டிணைப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.153/'11

73.

கௌரவ ரவி கருணாநாயக்க,— மாநகர சபைகளில் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவை அறிமுகம் செய்தல்,— 2013 சனவரி 1 ஆம் திகதியளவில் சகல மாநகர சபைகளிலும் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவைத் தாபிப்பதற்கான சட்டங்கள் அறிமுகப்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.154/'11

74.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உரிமைகள் பிரகடனச் சட்டமூலத்தைச் சட்டமாக்குதல்,— தென்னாபிரிக்காவில் மனித கண்ணியம், சமத்துவம் மற்றும் சுதந்திரம் ஆகியவற்றின் ஜனநாயக விழுமியங்களை உறுதிப்படுத்தி, ஜனநாயகத்தின் ஆதாரமாகத் திகழ்கின்ற உரிமைகள் பிரகடனச் சட்டத்தை அடியொற்றி, சட்டமூலத்தில் விதித்துரைக்கப்பட்ட வரையறைகளுக்கு அமைவாக அரசினால் மதித்து, பாதுகாத்து, மேம்படுத்தி நிறைவேற்றப்பட்ட வேண்டிய நாட்டின் எல்லா மக்களினதும் உரிமைகளை உறுதிப்படுத்தும் சட்டமூலம் இலங்கையில் சட்டமாக்கப்பட வேண்டும் இந்தப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.155/'11

75.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு விசேட படிகள் கொடுப்பனவு,— அரச சேவைகள் ஆணைக்குழு மற்றும் சம்பளங்கள் பதவியணி ஆணைக்குழு ஆகியவற்றினால் அங்கீகரிக்கப்பட்டு பாராளுமன்றத்தில் கொண்டுவரப்படாதவிடத்து அமைச்சர், பிரதி அமைச்சர் அல்லது பாராளுமன்ற உறுப்பினர் எவருக்கும் எந்த வகையான விசேட படிகளும் வழங்கப்படக் கூடாது என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.158/ '12

76.

கௌரவ ரவி கருணாநாயக்க,— இலங்கையில் துறைமுகங்களை அபிவிருத்தி செய்தல்,— இலங்கை புவியியல் ரீதியாக மையப் பகுதியில் நன்கு அமையப்பட்டிருப்பதாக அறியப்பட்டிருந்ததாலும், பண்டைக் காலங்களிலிருந்த கடற்போக்குவரத்து என்பது ஒரு மிக முக்கியமான சேவைத் துறையாக இருந்து வருவதனாலும், அத்துடன் இந்தியா அதன் துறைமுகங்களை மிகுந்த ஆர்வத்துடன் அபிவிருத்தி செய்து மேம்படுத்தி வருகின்ற காரணத்தினாலும் நாம் இந்தியாவுடனும் இந்திய வியாபாரத்துடனும் அணிசேர்ந்து இரண்டு நாடுகளினதும் நன்மைக்காக துறைமுகங்களை அபிவிருத்தி செய்ய வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.159/ '12

77.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய மற்றும் சர்வதேச எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு உற்பத்திகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுத்தல்,— தேசிய மற்றும் சர்வதேச சமூகத்தினரின் எதிர்கால கேள்விக்கு ஏற்றவாறு கைத்தொழில் மற்றும் கமத்தொழில் உற்பத்திகள் தொடர்பாக எதிர்வுகூறலை மேற்கொண்டு சம்பந்தப்பட்ட உற்பத்திகள் சார்ந்த சகல துறைகளுடனான இடைத் தொடர்புகளின் ஊடாகவும் நவீன தொழிநுட்பத்தை உச்ச அளவில் பயன்படுத்தியும் உற்பத்திச் செயற்பாடுகளை அதிகரிக்கச் செய்வதற்கான முறையியலொன்றை வகுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.160/ '12

78.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை மக்களின் பாரம்பரிய மரபுரிமைகளை பாதுகாக்கும் பொருட்டு டிஜிடல் நூலகமொன்றை தாபித்தல்,— இலங்கை மக்களின் மரபார்ந்த அறிவை பாதுகாத்து, போஷித்து அதனை எதிர்கால சந்ததியினருக்கு கொண்டு செல்வதற்கும், மரபணு வளங்கள் மற்றும் உயிர் மரபுரிமைகளின் தவறான பயன்பாட்டை தடுப்பதற்காகவும் விரிவான தேசிய வேலைத்திட்டமொன்றின் தேவை உணரப்பட்டுள்ளதாலும் சுற்றாடல், சுதேச மருத்துவத் துறை, கமத்தொழில் மற்றும் பாரம்பரிய கைத்தொழில் உள்ளடங்கலாக சகல துறைகளுக்கும் டிஜிடல் தொழிநுட்பத்துடனான நவீன நூலகமொன்றை தாபிப்பதற்கும், அதன் பொருட்டு உலக புலமைச்சொத்து அமைப்பு (WIPO ), இலங்கை புலமைச்சொத்து பணியகம், சுற்றாடல் அமைச்சின் உயிர் பல்வகைமை அலகு உள்ளடங்கலாக சகல துறைகளும் ஒருங்கிணைந்த வேலைத்திட்டமொன்றை வகுப்பதற்கும் நடவடிக்கை எடுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.161/ '12

79.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவைப் பேணிப் பாதுகாப்பதற்கான தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கைவாழ் மக்களின் மரபார்ந்த அறிவு கையாளப்படும் மருத்துவ முறைகள், கமத்தொழில், உணவுப் பாதுகாப்பு, கைப்பணிக் கைத்தொழிற்றுறை உள்ளிட்ட பல்வேறு துறைகளிலும் காணப்படும் மரபார்ந்த அறிவை பாதுகாப்பதற்காக சம்பந்தப்பட்ட துறையில் ஈடுபட்டுள்ள மக்களிடமிருந்து தகவல்களைப் பெற்றுக்கொண்டு, உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் உள்ளிட்ட ஏற்புடைய துறைகள் ஒருங்கிணைந்து தேசிய வேலைத்திட்டமொன்றை ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.162/ '12

80.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கைக்கே தனித்துவமானதும் மருத்துவ ரீதியில் பெறுமதிமிக்கதுமான தாவரங்களின் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தைப் பெற்றுக்கொள்ளல்,— வெளிநாடுகள் இலங்கைக்கே தனித்துவமான, பெறுமதிமிக்க மூலிகைத் தாவரங்களின் விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்தினைக் கண்டறிந்து, அவற்றிற்கு மோசடியான முறையில் ஆக்க உரிமம் பெறுவதைத் தடுப்பதற்காக சம்பந்தப்பட்ட விளைதிறன்கொண்ட இரசாயனக் கூறுகள் மற்றும் மரபணு வளத்திற்கான ஆக்க உரிமத்தை இலங்கைக்கு பெற்றுக்கொள்வதற்கும் ஔடத உற்பத்தி மற்றும் அதன் மேம்பாட்டிற்கு அக் கூறுகளைப் பயன்படுத்துவதற்கும் உயிர் பல்வகைமை அலகு, புலமைச் சொத்துப் பணியகம் மற்றும் சுதேச மருத்துவத்துறை அமைச்சு உள்ளிட்ட பொறுப்பு வாய்ந்த அனைத்து நிறுவனங்களும் இணைந்து விசேட வேலைத்திட்டமொன்றைத் தயாரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகிறது.

பா.163/ '12

81.

கௌரவ புத்திக பதிரண,— மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களை கைவிடல்,— ஜனாதிபதி, பிரதம அமைச்சர் உள்ளிட்ட பாராளுமன்றம், மாகாண சபைகள், பிரதேச சபைகளைப் பிரதிநிதித்துவம் செய்கின்ற சகல மக்கள் பிரதிநிதிகளும் மாதாந்தம் தாம் ஆற்றும் சேவைக்குரிய சம்பளம் மற்றும்/அல்லது கொடுப்பனவுகளைப் பெற்றுக் கொள்வதுடன், மேற்படி எந்தவொரு பதவியும் தன்னலமின்றி மேற்கொள்ளப்படுகின்ற கௌரவ சேவைகளாக இல்லாமையினாலும், மேற்படி பதவிகளை வகிப்பவர்களின் பெயர்களுக்கு எதிரே அல்லது பதவிக்கு எதிரே அதிமேதகு, பிரபு அல்லது கௌரவ ஆகிய பெயர்கள் மற்றும் பெயருக்குப் பின்னால் அவர்கள் போன்ற பதங்களை பயன்படுத்துவதானது நகைப்புக்குரிய விடயமாக மாறியுள்ளதனாலும், மக்கள் பிரதிநிதிகளின் கௌரவப் பெயர்களைப் பயன்படுத்துவதை நிறுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.164/ ' 12

82.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழுவினை சுதந்திரமானதொரு நிறுவனமாக மாற்றுதல்,— பிணையங்கள் மற்றும் பரிவர்த்தனை ஆணைக்குழு சம்பந்தமான சகல தடங்கல்களையும், முக்கியமாக அரசியல் தலையீடுகள் மற்றும் ஆதரவுகளை அகற்றும் சுதந்திரமான ஒரு நிறுவனமாக ஆக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.165/ ' 12

83.

கௌரவ ரவி கருணாநாயக்க,— தபால் மூல வாக்களிப்பை மாற்றீடு செய்வதற்காக "முன்கூட்டிய வாக்களிப்பை" அறிமுகம் செய்தல்,— தற்போது நடைமுறையிலுள்ள தேர்தல் முறைமையில் காணப்படுகின்ற குறைபாடுகளை சீர்செய்ய உதவும் "முன்கூட்டிய வாக்களிப்பினால்" தபால்மூல வாக்களிப்பை மாற்றீட செய்வதற்கு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.166/ ' 12

84.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஒரு வெளிப்படையான தேர்தல் இடாப்பினை அறிமுகம் செய்வதற்கு அரசியலமைப்பினை திருத்துதல்,— தற்போது பேணப்பட்டு வருகின்ற ஒரு நிலையான பட்டியலைப் போல் அல்லாது, தேர்தல் இடாப்பு வெளிப்படையான ஓர் இடாப்பாக இருக்கக் கூடியவாறு அரசியலமைப்பு திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.170/ '12

85.

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரித்தல்,— பல்வேறு தரப்பினரால் முதிய பிரசைகள் புறக்கணிக்கப்படுவதால் நேரிடுகின்ற அநீதிகள் தொடர்பில் முறைப்பாடு செய்வதற்காக சமூக சேவைகள் அமைச்சின் முதியோர் செயலகத்தின் கீழ் நடைமுறைப்படுத்தப்படுகின்ற முதியோர் பராமரிப்புச் சபை வேலைத்திட்டத்தை மாகாண, மாவட்ட மற்றும் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் விஸ்தரிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.171/ '12

86.

கௌரவ புத்திக பதிரண,— முதியோர் சமூகம் இலங்கையின் பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு கடன் வழங்கும் வேலைத்திட்டமொன்றைத் தயார் செய்தல்,— 60 வயதைத் தாண்டியுள்ள முதியோர் சமுதாயத்தினரின் வாழ்வாதார வழிமுறைகளை வலுவூட்டி இலங்கையின் ஒட்டு மொத்த பொருளாதார வளர்ச்சியில் பங்கேற்கச் செய்வதற்கு வங்கி முறைமையின் ஊடாக கடன் வழங்கும் முறையியல் ஒன்று அமுல்படுத்தப்படாமையானது அவர்கள் சமூகத்தினுள் வித்தியாசமாகக் கவனிக்கப்படுவதாகும் என்பதால் அத்தகைய அநீதியான நிலைமையைத் தடுப்பதற்கு முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.172/ '12

87.

கௌரவ புத்திக பதிரண,— 60 வயதைத் தாண்டியுள்ளவர்களை சமூகத்தில் முனைப்பான நபர்களாக ஆக்குகின்ற வேலைத்திட்டமொன்றை தயாரித்தல்,— சமூக, பொருளாதார செயற்பாட்டின் முன்னேற்றத்திற்காக தமது உழைப்பை அர்ப்பணித்து, 60 வயதைத் தாண்டிய பின்னர் சமூகத்தில் முறையான அங்கீகாரம் இன்றி செயலிழந்து ஓரங்கட்டப்பட்டுள்ள முதியவர்களை, சமூகத்தின் முனைப்பான நபர்களாக ஆக்குவதற்கான வேலைத்திட்டமொன்றைத் தயாரிப்பதற்காக பாடசாலை சமுதாயம் உள்ளிட்ட முழுச் சமூகத்தையும் விழிப்புணர்வூட்டுகின்ற முறையியலொன்று உருவாக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.175/'13

88.

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறை தொடர்பில் பாடசாலை மாணவர்களின் அறிவை வளர்த்தல்,— இலங்கையின் எதிர்கால இளைஞர், யுவதிகளின் வேலைவாய்ப்புப் பிரச்சினைக்கான ஒரு தீர்வாகவும், மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படும் வளர்ச்சிக்கு ஒப்பீட்டளவில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையைப் பூர்த்தி செய்யும் நோக்கத்துடனும் பாடசாலை பாடத் திட்டத்தில் மோட்டார் வாகன தொழில்நுட்பத்தை ஒரு பாடமாக உள்ளடக்குவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.176/'13

89.

கௌரவ புத்திக பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வியை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு கல்வியியற் கல்லூரியொன்றை தாபித்தல்,— இலங்கையிலும் வெளிநாடுகளிலும் மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையில் ஏற்படக்கூடிய வளர்ச்சிக்கேற்ப மேற்படி துறையில் பயிற்றப்பட்ட ஊழியர்களின் தேவையை பூர்த்தி செய்வதற்கேற்ற வகையில் பாடசாலை மட்டத்தில் அதனை கற்பிப்பதற்கான ஆசிரியர்களை பயிற்றுவிப்பதற்கு மோட்டார் வாகன தொழில்நுட்பத்துறை தொடர்பாக கல்வியியற் கல்லூரியொன்று தாபிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

பா.177/'13

90

கௌரவ புத்திக்க பதிரண,— மோட்டார் வாகன தொழில்நுட்பக் கல்வி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்தல்,— மோட்டார் வாகன தொழில்நுட்பத் துறையுடன் தொடர்புடைய அரசாங்க தொழில்நுட்பக் கல்லூரிகள் மற்றும் அதனுடன் இணைந்த நிறுவனங்களில் கற்பித்தல் நடவடிக்கைகள் 25-30 வருடங்கள் பழமையான பாடத் திட்டங்களின் கீழேயே நடைபெறுவதால், அந்நிலைமையை மாற்றியமைக்கும் பொருட்டு மேற்படி பாடத் திட்டங்களை இற்றைப்படுத்துவதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.178/'13

91.

கௌரவ புத்திக பதிரண,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த தொழிலில் ஈடுபடுபவர்களின் தொழில் பாதுகாப்பினை உறுதிசெய்தல்,— முச்சக்கர வண்டி மற்றும் மோட்டார் சைக்கில் சார்ந்த நேரடி மற்றும் மறைமுக தொழில்களில் ஈடுபடுவதற்கு விருப்பம் கொண்டுள்ள இலங்கையில் வாழும் இளைஞர்கள், ஓய்வுபெற்ற முப்படை உத்தியோகத்தர்கள் மற்றும் மூத்த பிரஜைகள் ஆகிய சமூக குழுக்களின் பொருளாதார பலத்தை மேம்படுத்துவதன் மூலம் மொத்தத் தேசிய உற்பத்திக்கு அவர்களது பங்களிப்பை பெற்றுக் கொள்ளும் நோக்கத்துடன் குறித்த துறையில் ஈடுபட்டுள்ளவர்களது முனைப்புடனான பங்களிப்பை தேசிய பொருளாதாரத்திற்கு பெற்றுக் கொள்வதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று விரைவாக தயாரிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.179/'13

92.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கை/சுதேச சமையற்கலை தொடர்பில் நாட்டினுள் மக்கள் மனப்பான்மைகளை வளர்த்தல்,— இலங்கை/சுதேச சமையற்கலை பற்றி உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு மக்களிடையே அதிக ஆர்வத்தை ஏற்படுத்தும் நோக்கத்துடன் நாட்டினுள் மக்களின் மனப்பான்மைகளை இதன்மீது செலுத்துவதற்காக பாடசாலைகள், பல்கலைக்கழகங்கள், மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களின் பாடநெறியில் சமையற்கலையை ஒரு பாடமாக சேர்ப்பதற்கும், அரச மற்றும் தனியார் துறை தலையீட்டின் அடிப்படையில் ஆராய்ச்சித் துறைகளை ஊக்குவிப்பதன் ஊடாக புதிய கண்டுபிடிப்புக்களை மேற்கொள்ளவும், இதனோடு தொடர்புடைய நிறுவன முறைமைகளை இணைத்து சான்றிதழ், டிப்ளோமா, பட்டம், பட்டப்பின் படிப்பு பாடநெறிகளை உருவாக்குவதன் மூலம் இத் துறை பற்றி மக்கள் மத்தியில் விரிவான விதத்தில் மனப்பான்மை ரீதியிலான மாற்றத்தை ஏற்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.180/'13

93.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் உணவுக் கலாசாரத்தை கற்றல், கற்பித்தல் செயற்பாட்டுடன் இணைத்தல்,— இலங்கையின் உணவுக் கலையானது சுவையூட்டல் மற்றும் கலவையாக்கல் கலை, சமையற்கலை, நிறமூட்டல், உணவு வெட்டுதல் உள்ளிட்ட பல பிரிவுகளை உள்ளடக்கியுள்ளதுடன் இதனோடு இணைந்துள்ள இலங்கையின் உணவுக் கலாசாரம் பற்றி கற்றல், கற்பித்தல் வழிமுறைகள் ஊடாக எதிர்கால சந்ததியினருக்கு கையளிப்பதற்கும் அதேபோன்று உள்நாட்டு, வெளிநாட்டு மக்களிடையே எமது உணவுக் கலாசாரத்தை பரப்புவதன் ஊடாக இலங்கையின் தனித்துவத்தை சர்வதேச ரீதியாக மேலோங்கச் செய்வதற்குமான வேலைத்திட்டமொன்று உருவாக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.186/ '13

94.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கை களுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்தல்,— வறிய மக்களின் அடிப்படை உரிமைகள் மீறுதல், அரசாங்க கொள்கைகளில் உள்ளடக்கம் அல்லது நடாத்துதல், மாநகர சபைகள் அதிகாரிகளினால் பொதுக் கடமைகள் நிறைவேற்றுதல், சமய உரிமைகள் அல்லது அடிப்படை உரிமைகள் மீறுதல் மற்றும் பொதுமக்களை அதிகளவில் கடனாளிகளாக்குகின்ற அல்லது அவர்களுக்கு மேலதிக பொறுப்புகள் ஏற்படுத்துகின்ற ஊழல்கள் ஆகியவை தொடர்பில் பொதுமக்களின் நலனுக்கான சட்டநடவடிக்கைகளுக்காக சட்டங்களை அறிமுகப்படுத்த வேண்டுமென்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.187/ ’13

95.

கௌரவ ரவி கருணாநாயக்க,— அமைச்சர்களுக்கான பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரம் வரையறுத்தல்,— அமைச்சர்களுக்கான பாதுகாப்புப் பிரிவு (MSD ) ஊடாக வழங்கப்பட்டுள்ள பாதுகாப்பு ஆளணியினரை அரசியல்வாதிகளுக்கு மாத்திரமே வரையறுக்கப்பட வேண்டும் எனவும் அவர்களின் குடும்ப உறுப்பினர்களுக்கு வழங்கக் கூடாது எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.188/ ’13

96.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— தேசிய விளையாட்டான கரப்பாந்தாட்ட விளையாட்டைத் தரம் உயர்த்துதல்,— உயர்ந்த அளவிலான திறனையும், சுறுசுறுப்பையும், உடலுறுதியையும், தீர்மானம் மேற்கொள்ளுதலையும், குழு முயற்சியையும் வேண்டி நிற்கும், அற்புதமான தேசிய விளையாட்டாகிய கரப்பாந்தாட்டத்தைத் தரமுயர்த்துவதற்கு, நன்கு திட்டமிடப்பட்ட ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.189/ ’13

97.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— “பீறலு” என அறியப்படும், பாரம்பரியக் கைத்தறி பின்னல் ஆடைக் கைத்தொழிலை தரமுயர்த்துதல்,— “பீறலு” குடிசைக் கைத்தொழிலை விருத்தி செய்து அதன் மூலம் பின்னல் ஆடை உற்பத்தியில் ஈடுபட்டுள்ள கிராமிய மக்கள் உயர் வருமானத்தைப் பெற்றுக் கொள்ள நவீன வசதிகளை ஏற்பாடு செய்யவும் உல்லாசப் பயணிகளிடையே, பின்னல் ஆடையையும், பின்னல் ஆடை உற்பத்திகளையும், பிரபல்யப்படுத்தவும், வினைத்திறனும், அர்த்தபுஷ்டியும் உடைய ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.190/ ’13

98.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார காரணங்களுக்காக இளம் தாய்மார் இலங்கையை விட்டுச் செல்வதை தடுப்பதற்கான சட்டவாக்கம்,— தாய்மார்கள் ஒரு வலுவான மற்றும் சந்தோசமான குடும்ப சூழ்நிலை உருவாக்குவதில் முக்கிய பங்கு வகிப்பதாலும் மற்றும் கடந்த காலங்களில் அத்தகைய தாய்மார்கள் வலுவான குடும்ப அலகின் மதிப்பை இல்லாதொழித்து பாரிய சமூக நெருக்கடியை உருவாக்கி இலங்கையை விட்டு தொழிலுக்காக வெளியேறியதாலும், ஐந்து வயதுக்குக் குறைவான குழந்தைகளின் இளம் தாய்மார்கள் பொருளாதாரக் காரணங்களுக்காக இலங்கையை விட்டு வெளியேறுவதை தடுப்பதற்கான பொருத்தமான சட்டவாக்கம் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.191/ ’13

99.

கௌரவ புத்திக பத்திரண,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்களின் ஆராய்ச்சிகளுக்கான ஆய்வுக் கட்டுரைகளை அமைச்சுக்களின் அபிவிருத்தி நடவடிக்கைகளை இலக்காகக் கொண்டு தயாரித்தல்,— பல்கலைக்கழகங்கள் மற்றும் மூன்றாம் நிலைக் கல்வி நிறுவனங்களைச் சார்ந்த மாணவர்கள் தமது பாடநெறிகள் தொடர்பில் சமர்ப்பிக்கும் ஆராய்ச்சிக் கட்டுரைகளை நாட்டின் பொருளாதார, சமூக, கலாசார மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளில் பயன்படுத்துதல் முக்கியமானதாகையால், மேற்படி ஆய்வுக் கட்டுரைகளை மேற்பார்வை செய்யும் பேராசிரியர்களுக்கும் ஆய்வுக் கட்டுரைகள் ஏற்புடையதாகும் அமைச்சுக்களுக்கும் இடையில் சிறந்த தொடர்பினை ஏற்படுத்தும் முகமாக, குறித்த அமைச்சின் உத்தியோகத்தரொருவரை நியமிப்பதன் மூலம் குறித்த ஆய்வுக் கட்டுரைகள் மூலம் அமைச்சின் எதிர்கால அபிவிருத்திச் செயற்பாடுகள் மற்றும் நடைமுறை இலக்குகளை பூர்த்தி செய்யக் கூடிய விதத்திலான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமன இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.192/ '13

100.

கௌரவ புத்திக பதிரண,— 18 வயது நிரம்பியவுடன் தேருநர் இடாப்புகளில் பெயரைச் சேர்த்தல்,— தேர்தல்கள் திணைக்களத்தினால் வருடாந்தம் தேருநர் இடாப்புகளைத் திருத்தும் திகதிக்கு பின்னர் அல்லது முன்னரான திகதியில் 18 வயதை பூர்த்தி செய்யும் ஆட்களுக்கு உரிய வயது நிரம்பிய திகதியிலேயே தேருநர் இடாப்புகளில் தமது பெயரை சேர்க்கக் கூடிய விதத்தில் நடைமுறைச்சாத்தியமான வேலைத்திட்டமொன்று ஏற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.193/ '13

101.

கௌரவ ரவி கருணாநாயக்க,— "தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சிமுறையொன்றை உருவாக்கல்",— சுகாதார பராமரிப்பு முகாமைத்துவத்திற்கு இன்றுள்ள நிலைமையை விட அதிகளவான வழிகாட்டலும் முக்கியத்துவமும் வழங்கப்பட வேண்டியுள்ளதால் பிரதம அமைச்சருக்கு அறிக்கையிடுவதற்கும் நிரல் அமைச்சில் ஊடுருவிச் சென்று உச்ச பயனைப் பெறாத நிலைமையை இல்லாதொழிக்கவும் தேசிய சுகாதாரப் பேரவை பணித்துறை ஆட்சி முறை" ஒன்றை உருவாக்க வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.195/ '13

102.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு விலக்களித்தல்,— இந்நாட்டின் விதிக்கப்பட்டுள்ள வரிகள் விசேடமாக இறுதியான நன்மைகள் மீதான வரிகள் மிகவும் சீரற்றதாகவுள்ளதாலும், ஊழியர்கள் கடின உழைப்பின் பின்னர் பெறும் அவர்களின் ஓய்வு பெற்று அவர்கள் பெறும் பணிக்கொடையானது 36% வரிக்கு உட்படுவதாலும் ஓய்வூதிய பணிக்கொடை மீது விதிக்கப்படும் வரிகளுக்கு முழுமையான விலக்களிப்பு அளிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.196/ '13

103.

கௌரவ ரவி கருணாநாயக்க,— ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்ள இந்தியாவுக்கு உதவுதல்,— இந்தியா இலங்கையின் நட்பு நாடு என்ற வகையில் ஐக்கிய நாடுகள் சபையில் நிரந்தர ஆசனம் ஒன்றைப் பெற்றுக்கொள்வதற்கு இந்தியாவுக்கு உதவ வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.197/ '13

104.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையினுள் சேலைன் உற்பத்திக்கான முறையான வேலைத்திட்டமொன்றை உருவாக்குதல்,— இலங்கையினுள் வருடாந்தம் பாரியளவில் சேலைன் பயன்படுத்தப்படுவதுடன், சேலைன் இறக்குமதிக்காக பாரியளவு நிதி வருடாந்தம் வெளிநாட்டுக்கு பாய்ச்சப்படுவதால், மேற்படி வெளிநாட்டுச் செலாவணியை நாட்டினுள் சேமிக்கும் நோக்கத்துடன், இலங்கையினுள் காணப்படுகின்ற உள்நாட்டுத் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி சேலைன் உற்பத்தி செய்வதற்கு அரச, தனியார்துறை அல்லது கூட்டுறவுத்துறையை இணைத்துக் கொண்டு முறையானதொரு வேலைத்திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் உருவாக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.198/ ’13

105.

கௌரவ புத்திக பதிரண,— தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்டு புதிய உற்பத்திகளை உருவாக்குதல்,— இலங்கையில் வருடாந்தம் பெருமளவில் தேங்காய் நீர் விரயமாவதால், நவீன தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தின் கீழ் தேங்காய் நீரை அடிப்படையாகக் கொண்ட புதிய உற்பத்திகளை உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு சந்தையை இலக்காகக் கொண்டு உருவாக்குவதற்கான முறையியலொன்று அமுல்படுத்தப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.199/ ’13

106.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— ஏற்றுமதி சந்தைக்காக தூரியான் பயிர்செய்தல்,— அதிக விலைமதிப்புள்ளதும் ஏற்றுமதிச் சந்தையில் மிகுந்த கேள்வியைக் கொண்டதுமான பிரபல்யமான தூரியான் பழத்தை, நாடு கணிசமான அளவு வெளிநாட்டு செலாவணியை ஈட்டக்கூடியவாறு வர்த்தக ரீதியில் பயிர்செய்வதற்கு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.200/ ’13

107.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டுத் திட்டம்,— “மும்மொழி இலங்கைக்கான பத்தாண்டு திட்டம் 2012-2021” எனும் பத்தாண்டு கால அமைச்சரவைத் தீர்மானத்தை வரவேற்பதுடன் பன்மொழிப் பேசும் பல்லின மக்களின் முழு ஆதரவைப் பெற்று முழு நாட்டுக்கும் பயன்பெறக்கூடிய முறையில் அரச நிறுவனங்கள் தனிப்பட்ட நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் இத்திட்டம் விரிவாக விரைவில் முன்னெடுக்கப்பட வேண்டும் என்று இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 77/ ‘10

108.

கௌரவ புத்திக பதிரண,— அரச சேவையைச் சேர்ந்த ஓய்வூதியம் பெறுபவர்களின் சம்பள முரண்பாட்டினை நீக்குதல்,— 2006/6 சம்பள மீள்திருத்த சுற்றறிக்கையின் பிரகாரம் 2006.06.01 ஆம் திகதியிலிருந்து அமுலாகின்றவாறு அரச ஊழியர்களுக்கு சம்பள மாற்றம் வழங்கப்பட்டமையால் 2006.06.01 ஆம் திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற மற்றும் அதன் பின்னர் ஓய்வுபெற்ற அரச ஊழியர்களுக்கிடையில் பாரிய சம்பள முரண்பாடு நிலவுவதால் அதனை நீக்குவதற்கான ஒரு தேசிய வேலைத்திட்டம் தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

பா.201/’ 14

109.

கௌரவ புத்திக பதிரண,— கடலில் புதிய வளங்களை ஆய்வு செய்தல்,— மிகப் பெரிய கடற் பிராந்தியத்தைக் கொண்டுள்ளதொரு நாடான இலங்கை, மீன்பிடிக் கைத்தொழிலுக்கு மாத்திரம் முன்னுரிமையளித்துள்ளதோடு, கடல் சார்ந்ததாக பெருமளவு இயற்கை வளங்கள் காணப்படுவதால், நாட்டுக்கு பெரும் எண்ணிக்கையிலான தொழில்வாய்ப்புகளையும், செல்வத்தையும் ஈட்டும் நோக்கத்துடன் கடல் வளங்கள் தொடர்பாக முறைசார்ந்த மேலதிக ஆய்வொன்றை மேற்கொள்ள வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.202/' 14

110.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் மீன் வளத்தை வெளிநாட்டவர்கள் பிடிப்பதைத் தடுத்தல்,— இலங்கையின் மீனவர்களுக்கு பொருளாதார ரீதியில் பாரிய பாதிப்பினை ஏற்படுத்துகின்ற வகையில் இலங்கை கடற் பிராந்தியத்திலுள்ள மீன் வளம் வெளிநாட்டவர்களினால் பிடிக்கப்படுவதால், இலங்கை கடற் பிராந்தியத்தில் மீன் பிடிப்பதையும், வெளிநாட்டுப் படகுகள் மீன் பிடிப்பதற்கான இறங்குதுறையாக பயன்படுத்துவதையும் தடுப்பதற்கான முறைசார்ந்த வேலைத் திட்டம் ஒன்றை அரசாங்கம் தயாரித்து நடைமுறைப்படுத்த வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.203/' 14

111.

கௌரவ புத்திக பதிரண,— பலா உற்பத்தியை அதிகரிக்கச் செய்து அது சார்ந்த உற்பத்திகளை ஏற்றுமதி செய்தல்,— மிகவும் சுவையானதும், மருத்துவக் குணம் கொண்டதும், இரசாயனப் பதார்த்தங்கள் இன்றி பயிரிடக் கூடியதுமான பலாச் செய்கையை விஸ்தரிப்பதன் ஊடாக அது சார்ந்த உற்பத்திகளை அதிகரிக்கச் செய்து அவற்றை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணியை எமது நாட்டினால் ஈட்டிக்கொள்ள முடியுமாயுள்ளதால், அது தொடர்பில் அரசாங்கத்தின் தலையீட்டுடன் முறைசார்ந்த வேலைத் திட்டமொன்று தயாரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.204/' 14

112

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்றை வருடாந்தம் ஒழுங்குசெய்தல்,— ஒரு நாடு முன்னேற்றமடைய வேண்டுமெனில், முக்கியமாக கமத்தொழிலில் செழிப்புற்றிருத்தல் வேண்டுமென்பதால், நாட்டை வளப்படுத்தும் கமக்காரர்களுக்கு தமது தொழில் தொடர்பாக அபிமானம் ஏற்படும் வகையில் முறைசார்ந்ததொரு ஒழுங்கமைப்புக் கட்டமைப்பின் ஊடாக நடைமுறைப்படுத்தப்படும் கமக்காரர் விருது வழங்கல் விழாவொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் வருடாந்தம் ஒழுங்கு செய்யப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.205/' 14

113.

கௌரவ புத்திக பதிரண,— சலுகை விலையில் LED மின்குமிழிகளை நுகர்வோருக்கு வழங்குதல்,— இல்லங்களை ஒளியூட்டுவதற்காக பயன்படுத்தப்படும் தரம் மிக்க LED மின்குமிழிகளின் விலை அதிகம் என்பதால், மின்சார சபை தலையிட்டு சலுகை விலையிலும் தவணைக் கொடுப்பனவு முறையிலும் இந்த மின் குமிழிகளை நுகர்வோருக்கு பெற்றுக் கொடுத்து தேசிய ரீதியில் பெருமளவில் மின்சாரத்தை சேமிப்பதற்கும், LED மின்குமிழிகளை மக்கள் மத்தியில் பிரபலப்படுத்துவதன் மூலம் மின்சார சபைக்கு மேலதிக வருமானத்தை ஈட்டிக்கொள்வதற்கும் இயலுமானவாறு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.206/' 14

114.

கௌரவ புத்திக பதிரண,— சிறிய அளவிலான விளையாட்டுப் பொருட்கள் தொழிற்சாலைகளை விஸ்தரித்தல்,— இலங்கையினுள் விளையாட்டுப் பொருட்களுக்கு பாரியதொரு சந்தை காணப்பட்ட போதிலும், நாட்டினுள் அவை சிறிய அளவிலேயே உற்பத்தி செய்யப்படுகின்ற அதேவேளை, அதற்காக சீனா முதற்கொண்ட ஏனைய நாடுகளுக்கு பெருந்தொகை வெளிநாட்டுச் செலாவணி பாய்ச்சப்படுவதால், சிறியதொரு செலவினத்தை ஏற்க வேண்டியதான இக் கைத்தொழிலை கிராமியப் பிரதேசங்களில் விஸ்தரிக்கும் பொருட்டு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்று வகுக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.208/ ’14

115.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையில் மருந்தாக்கல் தொழிற்சாலைகளை ஆரம்பித்தல்,— இலங்கையில் மருந்தாக்கலானது தற்போது ஆகக் குறைந்த மட்டத்தில் காணப்படுவதாலும், மருந்துகளின் இறக்குமதிக்கென வருடமொன்றில் பெருந்தொகையான வெளிநாட்டுச் செலாவணி செலவிடப்படுவதாலும், முன்னேற்றமடைந்த மனித வளத்தைக் கொண்டதொரு நாடு என்ற வகையில் இலங்கைக்கு அத்தியாவசியமான மருந்து வகைகளை நாட்டினுள்ளேயே உற்பத்தி செய்வதற்கான வசதிகளை அரசாங்கத்தின் தலையீட்டுடன் பெற்றுக்கொடுத்து மருந்தாக்கல் தொழிற்சாலைகள் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.209/’ 14

116.

கௌரவ புத்திக பதிரண,— பாடசாலை பாடத்திட்டத்தில் உளவியல் பாடத்தைச் சேர்த்தல்,— பாடசாலை மாணவர் சமுதாயத்தை ஆரோக்கியமான மனநிலை கொண்ட, சாதுரியமான முடிவுகளை எடுக்கக் கூடியவர்களாக தயார்படுத்தும் பொருட்டு ஆறாம் தரத்திலிருந்து அமுலுக்கு வரும் வகையில் பௌத்த உளவியல் மற்றும் மேலைத்தேய உளவியல் ஆகிய இரண்டு பாடங்களையும் ஒருங்கிணைத்து முறையாக தயாரிக்கப்பட்ட “உளவியலும் தியானமும்” என்ற பெயரில் ஒரு பாடத்தை பாடசாலை பாடத்திட்டத்தில் சேர்க்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.210/’ 14

117.

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைத்தல்,— ஓய்வு பெற்றவர்களுக்கான உளவள ஆலோசனைச் சேவைகள், மருத்துவ வசதிகள் மற்றும் பகல்நேர காப்பக சேவைகள் ஆகிய வயோதிகர்களுக்குத் தேவையான பல்வேறு நலன்புரிச் சேவைகளை ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்தில் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்களை அமைப்பதற்கும், மேற்படி நிலையங்களை மையப்படுத்தி ஏதேனும் உற்பத்தி நடவடிக்கையில் ஓய்வு பெற்றவர்களை ஈடுபடுத்துவதன் ஊடாக அவர்களின் வாழ்க்கைக்கு நிவாரணத்தை பெற்றுக்கொடுக்கின்ற அதேவேளை, மேலதிக வருவாயை ஈட்டிக்கொள்ளக் கூடிய வகையிலும் அரசாங்கத்தின் தலையீட்டுடன் நாடு முழுவதிலும் ஓய்வு பெற்றவர்களுக்கான உதவி நிலையங்கள் அமைக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.211/’ 14

118.

கௌரவ புத்திக பதிரண,— ஓய்வுபெற்றவர்களின் பொருளாதாரத்தைப் பலப்படுத்துவதற்காக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்தல்,— ஓய்வு பெற்றுள்ள அரசாங்க ஊழியர்களின் சம்பள முரண்பாட்டை நீக்குவதற்கும், அவர்களுடைய நலன்புரி நடவடிக்கைகளுக்குத் தேவையான பணத்தைப் பெற்றுக் கொள்வதற்குமாக புதிய லொத்தர் சீட்டு ஒன்றை அறிமுகம் செய்ய அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.213/’14

119.

கௌரவ ரவி கருணாநாயக்க,— உயர் பதவி வகிக்கும் அராங்க அதிகாரிகளுக்கான தண்டனை,— தமது சுயாதீனமான பதவிகளை துஷ்பிரயோகம் செய்து அரசியல் மயப்படுத்தும் உயர் பதவி வகிக்கின்ற அரசாங்க அதிகாரிகள் குற்றவாளியாகக் கண்டுபிடிக்கப்பட்டவுடன் தண்டிக்கப்படவும் அபராதம் விதிக்கப்படவும் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 214/ '14

120.

கௌரவ புத்திக பதிரண,— சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவித்தல்,— சுற்றுலாப் பயணிகளுக்கு பயன்மிக்கதும், கண்ணியம் மிக்கதுமான சேவையை வழங்குபவர்களாக ஆக்குவதற்கும் மேலும் இவர்களது வாழ்க்கைத் தொழில் மட்டத்தை உயர்த்துவதற்குமாக சுற்றுலாத் துறை வழிகாட்டுநர்களைப் பயிற்றுவிப்பதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றைத் தயாரித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 215/ '14

121.

கௌரவ புத்திக பதிரண,— காணி தொடர்பில் வலுவிலுள்ள சட்டங்களைத் திருத்துதல்,— இலங்கையில் தற்போது போலியான உறுதிகளைத் தயாரித்து காணிகளை விற்பனை செய்யும் மோசடிச் செயலொன்று நடைபெற்று வருவதோடு, இவ்விடயம் தொடர்பில் சட்டம் நடைமுறைப்படுத்தப்படுதல் மிகவும் குறைந்த மட்டத்தில் காணப்படுவதால், காணி உரிமை பற்றிய பாதுகாப்பு மேம்படுத்தப்படும் வகையிலும், தவறாளிகளுக்கு கடுமையான தண்டனைகளை வழங்கக்கூடிய வகையிலும் வலுவிலுள்ள சட்ட முறைமை திருத்தப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.216/'14

122.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் பவளப்பாறைகளை பாதுகாத்தல்,— இலங்கையை சூழவுள்ள கடற்பரப்பில் அமைந்துள்ள பவளப்பாறைகள் மனிதர்களின் செயற்பாடுகளால் அழிவுறும் அச்சுறுத்தலை எதிர்கொண்டுள்ளதால், மேற்படி பவளப்பாறைகளை பாதுகாப்பதற்காக மனித செயற்பாடுகளை கட்டுப்படுத்துவதற்கேற்றவாறு தனிநபர் மனப்பாங்கு ரீதியான மாற்றத்தையும் சட்ட வரையறையில் மாற்றத்தையும் ஏற்படுத்துவதற்காக கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக பொருத்தமான வேலைத்திட்டமொன்று திட்டமிடப்பட்டு செயற்படுத்தப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.217/'14

123.

கௌரவ புத்திக்க பதிரண,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான்களில் பெண்களை சேவைக்கு அமர்த்துதல்,— பாடசாலை மாணவர்களை ஏற்றிச் செல்லும் வான் சேவையின் தரத்தை உயர்த்துவதற்கும் மேற்படி வான்களில் பயணிக்கின்ற பிள்ளைகளின் பாதுகாப்பைக் கருதியும் சகல பாடசாலை வான்களிலும் பணியாற்றுவதற்கு பெண்கள் அமர்த்தப்படுவதை கட்டாயமாக்குவதற்கான சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.218/'14

124.

கௌரவ புத்திக பதிரண,— மருந்துப் பொருட்களின் விலையை குறைத்தல்,— இலங்கையினுள் தேசிய ஔடதக் கொள்கையினை பிரகடனப்படுத்தி, ஔடதங்களின் பெயரில் மருந்துப் பொருட்கள் விற்பனை செய்யப்படுவதை துரிதமாக ஆரம்பிப்பதன் மூலம் மருந்துப் பொருட்களின் விலையை குறைப்பதற்கு அரசாங்கம் தலையிடுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.219/'14

125.

கௌரவ புத்திக பதிரண,— இணையத் தளத்தின் ஊடாக நடைபெறுகின்ற மருந்துப் பொருட்கள் விற்பனை உள்ளிட்ட மோசடிச் செயல்களைத் தடுத்தல்,— தற்போது இணையத் தளத்தின் ஊடாக தரமற்ற மருந்துப் பொருட்கள், மருத்துவ உபகரணங்கள் மற்றும் மேனிவணப்புப் பொருட்களின் உற்பத்திகள் பாரியளவில் விற்பனை செய்யப்படுவதுடன், இத்தகைய மோசடிச் செயல்கள் எமது நாட்டு மக்களின் ஆரோக்கியத்துக்கும் நல்லிருப்புக்கும் பாரியதொரு அச்சுறுத்தலாகும் என்பதால், இவற்றைத் தடுப்பதற்கான உரிய வேலைத் திட்டமொன்றை தயாரித்து நடைமுறைப்படுத்துதல் உகந்ததாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.220/ '14

126.

கௌரவ புத்திக பதிரண,— விவசாய இரசாயனப் பொருட்களின் பாவனையின்றி பயிர்ச் செய்கை செய்தல்,— அதிக நச்சுத்தன்மையுடைய விவசாய இரசாயனப் பொருட்களை இலங்கையில் தடை செய்து, பழைமைவாய்ந்த முறையில் சூழலுக்குகந்த பயிர்ச்செய்கை முறையொன்றை நாட்டில் அறிமுகம் செய்வதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கு விவசாய விஞ்ஞானிகள் மற்றும் சூழலியலாளர்களை உள்ளடக்கிய குழுவொன்றை நியமித்து அவர்களிடமிருந்து பெறப்படும் பரிந்துரைகளின் ஊடாக மக்களுக்கு நச்சுத்தன்மையற்ற ஆரோக்கியமான உணவை பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.221/ '14

127.

கௌரவ புத்திக பதிரண,— போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாவதிலிருந்து பாடசாலை மாணவர்களை மீட்டெடுத்தல்,— தற்போது இலங்கையில் பாடசாலை மாணவர்கள் போதைப் பொருள் பாவனைக்கு அடிமையாகின்ற போக்கு அதிகரித்துள்ளதால், பாடசாலை மாணவர்களை போதைப் பொருள் பாவனையிலிருந்து மீட்டெடுப்பதற்காக அரசாங்கம் தலையிட்டு முறைசார்ந்ததொரு வேலைத்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 222/'14

128.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை நியமித்தல்,— அரசாங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற உற்பத்தித்திறன் நிகழ்ச்சித் திட்டங்களின் போது தமது நிறுவனங்களை மிகஉயர்ந்த உற்பத்தித்திறன் மட்டத்தை நோக்கி வழிநடாத்தியுள்ள நிறுவனத் தலைவர்களை இனங்கண்டு அவர்களின் அறிவையும், அனுபவங்களையும் பயன்படுத்திக் கொள்ளக்கூடிய வகையில், அந்நிறுவனங்களில் அமுல்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் மற்றும் முறையியல்களை ஏனைய நிறுவனங்களுக்கு ஏற்றவகையில் பதிலீடு செய்யக்கூடியவாறு மேற்படி நிறுவனத் தலைவர்களை உள்ளடக்கியதாக தேசிய உற்பத்தித்திறன் குழுவொன்றை தாபித்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா. 223/'14

129.

கௌரவ புத்திக பதிரண,— சமுதாய மருத்துவமுறை பற்றிய நிபுணத்துவச் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய பிரிவொன்றான சமுதாய மருத்துவமுறை தொடர்பான நிபுணத்துவத்துறையை மேம்படுத்துவதற்குத் தேவையான திட்டங்களைத் தயாரிப்பதற்கும், அத்துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து துரிதமாக தீர்த்து வைப்பதற்கும் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.224/'14

130.

கௌரவ புத்திக பதிரண,— ஆங்கிலேயர்களால் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்ட இலங்கையர்களை தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல்,— 1815 ஆம் ஆண்டு தொடக்கம் 1948 ஆம் ஆண்டு சுதந்திரம் பெறுதல் வரையான காலப்பகுதியில் ஆங்கிலேயர்களுக்கெதிராக நாட்டுக்காகவும் மக்களுக்காகவும் உயிரையும் பொருட்படுத்தாது போராடிய இலங்கையர்கள் தேசத் துரோகிகளாக வர்ணிக்கப்பட்டுள்ளதோடு, இவர்கள் அனைவரையும் விசேட வர்த்தமானப் பத்திரிகையொன்றின் மூலம் தேசிய வீரர்களாக பிரகடனம் செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.225/'14

131.

கௌரவ புத்திக பதிரண,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்கள் சந்தைக்கு வருவதைத் தடுக்க நடவடிக்கை எடுத்தல்,— நுகர்வுக்குப் பொருத்தமற்ற உணவுப் பொருட்களை உற்பத்தி செய்கின்ற, சந்தைப் படுத்துகின்ற மற்றும் அதற்குப் பக்கபலமாக உள்ள ஆட்கள் மற்றும் நிறுவனங்களை சுற்றிவளைப்பதற்கு நுகர்வோர் அலுவல்கள் அதிகாரசபையின் விசேட சுற்றிவளைப்புப் பிரிவுக்குக் காணப்படுகின்ற பிரச்சினைகளைத் தீர்த்து, தேவையான வசதிகளை குறைவின்றி பெற்றுக்கொடுப்பதற்கும், குற்றவாளிகளுக்கு அதிகபட்ச தண்டனை வழங்கக் கூடிய வகையில் வலுவிலுள்ள சட்ட முறைமையை திருத்துவதற்கும் நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.226/'14

132.

கௌரவ புத்திக பதிரண,— நச்சுத்தன்மையற்ற உணவுற்பத்தியை ஊக்குவித்தல்,— உணவுடன் தொடர்புடைய உற்பத்தி நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ள உள்நாட்டு உற்பத்தியாளர்களை இலக்காகக் கொண்டு, தரத்தில் உயர்ந்ததும், ஆரோக்கியமானதுமான உணவுகளை நுகர்வோருக்கு வழங்குவதன் மூலம் நாட்டுக்கு ஆற்றக்கூடிய சேவை தொடர்பாக விழிப்புணர்வூட்டி, மனோபாவ ரீதியான மாற்றத்தை ஏற்படுத்துவதற்கும், அவ்வாறு நச்சுத்தன்மையற்ற உணவுகளை உற்பத்தி செய்கின்ற தொழில்முயற்சியாளர்களுக்கு கௌரவப் பட்டத்துடன்கூடிய விருது வழங்கி அவர்களை ஊக்குவிப்பதற்குமான வேலைத் திட்டமொன்று அரசாங்கத்தின் தலையீட்டுடன் மேற்கொள்ளப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.227/'14

133.

கௌரவ புத்திக பதிரண,— முறைகேடான விதத்தில் கைப்பற்றப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகளை விடுவித்தல்,— இலங்கையில் பிரகடனப்படுத்தப்பட்டுள்ள சரணாலயங்களுக்குச் சொந்தமான காணிகள் பல்வேறான ஆட்கள் மற்றும் அமைப்புகளால் சட்ட விரோதமான முறையில் கைப்பற்றப்பட்டுள்ளதால், மேற்படி காணிகளை மீளப் பெற்றுக்கொள்வதற்கு அரசாங்கம் துரிதமாக தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.228/'14

134.

கௌரவ புத்திக பதிரண,— ஆதிவாசி மக்களின் மேம்பாட்டுக்கான திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல்,— இலங்கையினுள் தற்போது வசிக்கும் ஆதிவாசி மக்கள் பற்றிய தனியானதொரு தொகை மதிப்பீட்டை மேற்கொண்டு, அவர்கள் உயிர் வாழ்வதில் தற்போது எதிர்நோக்கும் சிரமங்களை முறைசார்ந்த விதத்தில் இனங்கண்டு, அவர்கள் கௌரவமாக வாழக் கூடிய ஒரு சூழலை அமைத்துக் கொடுப்பதற்குத் தேவையான சாதகமானதொரு திட்டத்தை, ஆதிவாசிகளின் தலைவர்களும் உள்ளடங்கிய விதத்தில் நியமிக்கப்பட்ட கல்விமான்கள் குழுவொன்றின் ஊடாக நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.229/'14

135.

கௌரவ புத்திக பதிரண,— வடக்கு மற்றும் கிழக்குப் பிரதேசங்களில் யுத்தத்தினால் சேதமடைந்த தொல்பொருட்களை பாதுகாத்தல்,— முப்பது ஆண்டு கால யுத்தம் காரணமாக வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் காணப்பட்ட தொல்பொருட்கள் பெருமளவில் அழிவடைந்ததோடு, இருப்பிலுள்ள தொல்பொருட்கள் பற்றிய மதிப்பீடொன்றை மேற்கொண்டு தகவல்களை திரட்டுவதையும், குறித்த தொல்பொருட்களை உறுதி செய்தல், பாதுகாத்தல் மற்றும் புனரமைப்பதையும் நோக்கமாகக் கொண்டு தொல்பொருளியலாளர்களை உள்ளடக்கிய கல்விமான்கள் குழுவொன்றை நியமித்தல் உசிதமாகுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.230/'14

136.

கௌரவ புத்திக பதிரண,— பயிர்ச் செய்கைக்கான உள்நாட்டு விதைகளை பிரபல்யப்படுத்துதல்,— விவசாய இரசாயனப் பொருட்கள் பயன்படுத்தப்படாது உள்நாட்டு சேதனப் பசளைகளைப் பயன்படுத்தி பயிரிடக்கூடிய உள்நாட்டு விதை வகைகளை இனங்கண்டு அத்தகைய விதைகளை துரிதமாக நாடுபூராவும் பரவலாக்கி இரசாயன நச்சுத்தன்மையற்ற உணவுப் பொருட்களை மக்களுக்குப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான ஆராய்ச்சிகள், தொழில்நுட்பம் மற்றும் உற்பத்தியை அதிகரிக்கச் செய்வதற்குத் தேவையான திட்டங்கள் வகுக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.231/'14

137.

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாட்டு மொழிகள் கற்கைக்கான வசதிகளை வழங்கல்,— தனி நபர் அறிவாற்றலை தீர்மானிப்பதற்கு அவரிடமுள்ள மொழியறிவு முதன்மையான காரணியாக அமைவதால் ஆங்கில மொழி தவிர்ந்த ஏனைய முதன்மையான அந்நிய மொழிகளை கற்பதற்குத் தேவையான வசதிகளை விஸ்தரிப்பதற்குத் தேவையான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.232/'14

138.

கௌரவ புத்திக பதிரண,— அனைத்து தேர்தல் பிரச்சார நடவடிக்கைகளுக்கும் செலவிடப்படுகின்ற நிதியை மட்டுப்படுத்தல்,— இலங்கையினுள் நடைபெறுகின்ற அனைத்து தேர்தல்களின் போதும் சில வேட்பாளர்கள் பாரியளவில் நிதியை செலவிடுவதுடன், நிதி செலவிட முடியாத போதிலும், நாட்டுக்கு சேவையாற்றக்கூடிய கல்விமான்கள் சிலருக்கு இதனால் பாதகமான நிலைமை ஏற்படுவதன் காரணமாக தேர்தல்களுக்கு செலவிடப்படுகின்ற நிதியின் அளவை மட்டுப்படுத்தக்கூடியவாறு சட்டங்கள் ஆக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.233/'14

139.

கௌரவ புத்திக பதிரண,— காலனித்துவ ஆட்சிக்காலத்தில் இலங்கையிலிருந்து எடுத்துச் செல்லப்பட்ட தொல்பொருட்களை மீண்டும் பெற்றுக் கொள்ளல்,— இலங்கை காலனித்துவ நாடாக காணப்பட்ட காலத்தில் எமது நாட்டிலிருந்து போர்த்துக்கள், ஒல்லாந்து மற்றும் பெரிய பிரித்தானியாவுக்கு எடுத்துச் செல்லப்பட்ட தொல்லியல் பெறுமதிமிக்க பொருட்கள் பற்றிய ஆய்வொன்றை நடாத்தி அப்பொருட்களை மீண்டும் எமது நாட்டுக்குப் பெற்றுக் கொள்ளத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ள அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.234/'14

140.

கௌரவ புத்திக பதிரண,— பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல்,— பிக்குமார்களின் பாதுகாப்பு மற்றும் கௌரவத்தை பேணிப்பாதுகாப்பதற்காக அவர்கள் தொடர்பான நீதிமன்ற விடயங்களுக்காக தனியான பிக்குமார் நீதிமன்றமொன்றை தாபித்தல் வேண்டுமெனவும் அந்த நீதிமன்றத் தீர்ப்புகளுக்கு சட்ட ரீதியிலான அதிகாரத்தைப் பெறக்கூடிய வகையில் மேற்படி பிக்குமார் நீதிமன்றம் தாபிக்கப்பட வேண்டுமெனவும் இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.235/'14

141.

கௌரவ புத்திக பதிரண,— நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்றை நியமித்தல்,— பாராளுமன்றம் உள்ளிட்ட மக்கள் பிரதிநிதித்துவ நிறுவனங்களுக்கு ஆலோசனைகள் மற்றும் வழிகாட்டல்களை வழங்குவதற்கும் கட்டளைச் சட்டங்களுக்கு திருத்தங்களை முன்வைக்கக் கூடியதுமான சட்ட அதிகாரமுள்ள பிக்குமார்களின் இணக்கப்பாட்டுடன் நியமிக்கப்பட்ட பொதுநிர்வாகம், சட்டம், வெளிநாட்டலுவல்கள் மற்றும் சமூக செயற்பாடுகள் தொடர்பாக சிறந்த அறிவையும் அனுபவத்தையும் கொண்டுள்ள கல்விமான்களான பிக்குமார்களை உள்ளடக்கிய நியதிச்சட்ட பிக்குமார் சபையொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.236/'14

142.

கௌரவ புத்திக பதிரண,— நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கையில் காணப்பட்ட நீர்ப்பாசனத் தொழில்நுட்பத்திற்கும், வாவிகள் தொழில்நுட்பத்திற்கும் புத்துயிரூட்டி பேணிப் பாதுகாத்தல் மற்றும் மேம்படுத்துவதற்குத் தேவையான ஆய்வுகளை மேற்கொள்வதற்கும், கற்கை நெறிகள் மூலம் மேற்படி விடயம் தொடர்பில் அறிவு நிறைந்தவர்களை உருவாக்க இயலுமான வகையில் "நீர்ப்பாசனக் கலாசார கற்கை நிலையம்" என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் தலையீட்டுடன் ஆரம்பிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.237/'14

143.

கௌரவ புத்திக பதிரண,— மகாவம்ச கற்கைக்கான நிறுவனமொன்றைத் தாபித்தல்,— இலங்கை வரலாற்றின் சுவடாக விளங்கும் மகாவம்சத்தைக் கற்பதற்காக பிக்குமாரின் தலையீட்டுடன் "மகாவம்சக் கற்கை ஆய்வு தேசிய நிறுவனம்" என்ற பெயரில் நிறுவனமொன்றை அரசாங்கத்தின் அனுசரணையுடன் தாபிக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.238/'14

144.

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த விரோத செயற்பாடுகளை தடுத்தல்,— அற நூல்கள் மற்றும் வெளியீடுகளை ஆய்வு செய்யும் மேன்மையான அறிவைக் கொண்ட சட்ட அதிகாரத்துடன் கூடிய கற்றோர்களைக் கொண்ட சங்க சபையொன்றை தாபிப்பதன் மூலம், ஏதேனுமொரு ஆக்கத்தை வெளியிடுவதற்கு முன்னர் அதனை மேற்படி சபைக்கு சமர்ப்பித்ததன் பின்னர், சமூகமயமாக்குவதற்கு தகுதியில்லை எனில், திருத்தங்களை சமர்ப்பிப்பதற்கேற்றவாறான பொறிமுறையொன்றை உருவாக்குவதன் மூலம் பௌத்த விரோத செயற்பாடுகள், வெளியீடுகள் இயற்றப்படுதல் மற்றும் பௌத்த தர்மத்தை தொடர்புபடுத்தி பொய்யான வரைவிலக்கணங்கள் தோற்றம் பெறுவதை தடுப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.239/'14

145.

கௌரவ புத்திக பதிரண,— தேசப்பற்றுடைய கலைப் படைப்புகளை பாராட்டுதல்,— தேசத்தின் மீது அன்பு மற்றும் சுயமரியாதை ஏற்படும் வகையில் சுதேச மற்றும் கலாசார விழுமியங்களுடன் கூடிய கலைப் படைப்புகளை வருடாந்தம் கௌரவிப்பதற்கான வேலைத்திட்டமொன்றை தயாரிப்பதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.240/'14

146.

கௌரவ புத்திக பதிரண,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களின் ஒழுக்கத்தை வளர்ப்பதற்கான நடவடிக்கைகளை மேற்கொள்ளல்,— இலங்கையின் பாடசாலை மாணவ மாணவியர்களை ஆரோக்கியமான, உடல் நலம்மிக்க மற்றும் உடலுறுதி கொண்ட பிரஜைகளாக சமூகமயப்படுத்தும் நோக்கத்துடன் அவர்கள் தாம் விரும்பும் ஒரு விளையாட்டில் ஈடுபடுவதற்கும், நடைமுறை ரீதியிலான ஒழுக்கப் பயிற்சியில் ஈடுபடுத்துவதற்கும் தேவையான நடவடிக்கைகள் வகுக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.241/'14

147.

கௌரவ புத்திக பதிரண,— பௌத்த கலாசார தகவல் நிலையமொன்றை ஆரம்பித்தல்,— இலங்கையினுள் அமைந்துள்ள பௌத்த மதத் தலங்கள், அதனுடன் இணைந்த இடைநேர்விளைவான பிரிவுகள் மற்றும் பௌத்த தேரர்கள் பற்றிய தகவல்களை சேகரித்து, முறைசார்ந்த ரீதியில் கணனிமயப்படுத்தி, நவீன தொழில்நுட்ப கருவிகள், போதியளவு மனித மற்றும் பௌதீக வளங்கள் நிறைந்த "பௌத்த கலாசார தகவல் நிலையம்" எனும் பெயரிலான நிறுவனமொன்று அரசின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.242/'14

148.

கௌரவ புத்திக பதிரண,— அறநெறிப் பாடசாலை பாடநூல்களை காலத்திற்கேற்ப திருத்துதல்,— பரீட்சையை இலக்காகக் கொண்ட,— அறிவை மட்டும் மையப்படுத்திய பாடநூல்களுக்குப் பதிலாக செய்முறைப் பயிற்சியை அடிப்படையாகக் கொண்ட, அறிவை வளர்க்கக்கூடியதான, நாகரிகமானதொரு சமூகம் உருவாக்கப்படுவதை இலக்காகக் கொண்ட பாடநூல்களை புத்திஜீவிகளை உள்ளடக்கிய சபையொன்றின் ஊடாக தொகுத்து அறநெறிப் பாடசாலைகளுக்கு வழங்குதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீமானிக்கின்றது.

பா.243/'14

149.

கௌரவ புத்திக பதிரண,— சர்வதேச பாடசாலைகளின் ஒழுங்குமுறையாக்கலுக்கான சபையொன்றை நியமித்தல்,— இலங்கையின் கலாசாரத்திற்கும், பண்பாட்டுக்கும், சமூக நல்லிருப்புக்கும் பொருந்தக்கூடிய வகையில் சர்வதேச பாடசாலைகளின் விடயப்பரப்புகளை தேவைக்கேற்ப ஒழுங்குமுறையாக்கக்கூடிய முழுமையான அதிகாரத்துடன் கூடிய சபையொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.244/'14

150.

கௌரவ புத்திக பதிரண,— தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல்,— சுதேச வரலாற்று அறிவு, பண்பாடுமிக்கதன்மை, உற்பத்திச் சாத்தியத்தன்மை, அறிவுடைமை, பாரம்பரிய அறிவு, தேசப்பற்று, ஆரோக்கியம், திறமைமிக்கதன்மை மற்றும் சிறந்த மனப்பாங்குகளைக் கொண்டிருத்தல் ஆகிய பண்புகளின் மூலம் பூரணத்துவம்மிக்க வெற்றிகரமான பிரசைகளை உருவாக்கக்கூடியவாறு அமைக்கப்பட்ட தேசிய கொள்கையின் ஊடாக ஒட்டுமொத்த கல்வித் திட்டத்திலும் மாற்றத்தை ஏற்படுத்துவதற்காக தேசிய கல்வி ஆணைக்குழுவை மென்மேலும் முனைப்புடன் செயற்படச் செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.245/'14

151.

கௌரவ புத்திக பதிரண,— குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்தல்,— சுகாதார சேவையின் அத்தியாவசிய அம்சமொன்றான குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணத்துவத் துறையில் தற்போது காணப்படுகின்ற பிரச்சினைகளை அவதானித்து அவற்றை துரிதமாக தீர்த்துவைப்பதற்குத் தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்வதற்கும், மேற்படி குடும்ப மருத்துவம் பற்றிய நிபுணர் சேவையை மேம்படுத்துவதற்குமான திட்டங்களை வகுப்பதற்கும் பொருட்டு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.246/'14

152.

கௌரவ புத்திக பதிரண,— ஆயுர்வேத மருத்துவர்களின் சேவையை வெளிநாடுகளுக்கு வழங்குதல்,— ஆயுர்வேத மருத்துவப் பட்டப்படிப்பை நிறைவுசெய்யும் பட்டதாரிகளுக்கு வெளிநாடுகளில் தொழில் வாய்ப்புகளைப் பெற்றுக்கொடுப்பதற்காக முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை அமைத்து நடைமுறைப்படுத்தல் உசிதமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.247/'14

153.

கௌரவ புத்திக பதிரண,— ஆயுர்வேத மருத்துவச் சட்டத்தை திருத்துதல்,— தற்போது வலுவிலுள்ள காலம் கடந்த ஆயுர்வேத மருத்துவச் சட்டம் மீதான திருத்தமொன்றைக் கொண்டு வந்து ஆயுர்வேத மருத்துவர்களின் தொழில் சார்ந்த பிரச்சினைகளைத் தீர்த்து, அந்த தொழிலுக்குரிய கௌரவத்தையும், மகத்துவத்தையும் பாதுகாக்க புதிய ஆயுர்வேத மருத்துவச் சட்டமொன்றை துரிதகதியில் கொண்டுவர நடவடிக்கை எடுக்க வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.248/'14

154.

கௌரவ புத்திக பதிரண,— புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்குதல்,— இலங்கையில் புகையிரத பாதுகாப்பு முறைமையை உருவாக்கிய புத்தாக்குநர்களையும், அத் துறையுடன் தொடர்புடைய கல்விமான்களையும், புகையிரதத் திணைக்களத்தின் சகல துறைகளினதும் விற்பன்னர்களையும் உள்ளடக்கிய குழுவொன்றின் மூலம் புகையிரத பாதுகாப்பு முறைமையொன்றை உருவாக்கி நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.249/'14

155.

கௌரவ புத்திக பதிரண,— பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்தல்,— பேருந்து பயணிகள் போக்குவரத்து சேவையின் தரத்தை மேம்படுத்துவதன் மூலம், வருடாந்தம் அச் சேவையை நிராகரிக்கின்ற சுமார் 1% - 2% பயணிகளை தக்க வைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுப்பதன் மூலம், அச் சேவையின் இருப்புக்கு நீண்ட கால அடிப்படையில் ஏற்படக்கூடிய ஆபத்தை குறைப்பதற்கு முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் பொருத்தமாகுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.250/'14

156.

கௌரவ புத்திக பதிரண,— சிங்கள மொழிக்கு நியதியொன்றை வகுத்தல்,— சிங்கள மொழியில் எழுத்து வழக்கு மற்றும் பேச்சு வழக்கு இரு வகைகளை கொண்டுள்ளதோடு, ன, ண, ල, ළ வேறுபாடு, மெல்லின, வல்லின எழுத்துக்களை பயன்படுத்தல் மற்றும் சொல் வகைப்பாடு ஆகியன விவாதத்துக்குரியவையாக உள்ளதால் சிங்கள மொழிக்கென நியதியொன்றை வகுப்பதற்கு கல்விமான்கள் சபையொன்றை நியமித்து காலத்துக்கேற்ப ஏற்படும் மாற்றங்களையும் கவனத்திற்கொண்டு மொழியின் நிலைத்திருத்தலை உறுதிப்படுத்தக்கூடிய செயற்பாடொன்று வகுக்கப்பட வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.251/'14

157.

கௌரவ புத்திக பதிரண,— உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்களின் மூலம் சுற்றாடல் மாசடைவதைக் கட்டுப்படுத்துதல்,— பீடை கொல்லிகள் மற்றும் கைத்தொழில் செயற்பாடுகளிலிருந்து வெளியேறும் உக்கிப்போகாத சேதனக் கழிவுப்பொருட்கள் (Persistent Organic Pollutants – POPs ) பன்னிரண்டு வகை மாசாக்கல் காரணிகளை உள்ளடக்கியுள்ளதுடன், இவை மனிதனின் உடல் நலத்துக்கு மிகவும் பாதகமாயுள்ளதால், குறித்த இரசாயனப் பதார்த்தங்கள் சுற்றாடலுக்கு வெளியேற்றப்படுவதைக் கட்டுப்படுத்துவதற்கு முறைசார்ந்த ஒரு வேலைத்திட்டம் திட்டமிடப்பட்டு நடைமுறைப்படுத்தப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.252/'14

158.

கௌரவ புத்திக பதிரண,— அரசாட்சியில் பௌத்த தத்துவங்களை சேர்த்தக்கொள்ளல்,— சப்த அபரிஹானீய தர்ம, தச ராஜ தர்ம, ராஜோவாத ஜாதகய, குரு தர்ம ஜாதகய, கண்ட நிந்துக ஜாதகய, தெசதுர ஜாதகய, தேவதர்ம ஜாதகய, சதர சங்ரஹ வஸ்து, சக்கவத்தீ சிஹநாத சூத்ரய மற்றும் தர்ம பிரதீபிகாவ ஆகிய பௌத்த கற்பித்தல்கள் தொடாபில் பாராளுமன்றம், மாகாண சபை மற்றும் பிரதேச மட்டத்திலான சகல ஆளும்கட்சி மற்றும் எதிர்க்கட்சி உறுப்பினர்களை விழிப்புணர்வூட்டுவதன் ஊடாக நாட்டின் நல்லாட்சிக்கு அவர்களது வகிபாக பங்களிப்பினை பெற்றுக்கொள்ளக் கூடிய விதத்திலான ஒரு வேலைத்திட்டத்தை தயாரித்து நடைமுறைப்படுத்துவதற்கு அரசாங்கம் தலையீடு செய்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.253/'14

159.

கௌரவ புத்திக பதிரண,— இலத்திரனியல் கழிவுகளை அகற்றுதல்,— புளோரசன்ட் மின்குமிழ், தொலைபேசி, கையடக்கத் தொலைபேசி, மின் உபகரணங்கள், பட்டரி, கனணி மற்றும் அவற்றின் பாகங்கள் கழிவுப் பொருட்களாக சுற்றாடலுக்கு விடுவிக்கப்படுகையில் ஆசனிக், கட்மியம், பாதரசம் மற்றும் ஈயம் ஆகிய கன உலோகங்கள் சுற்றாடலில் சேர்க்கப்படுவதால், குறித்த இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கான முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை தயாரித்து சுற்றாடலை பாதுகாப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுதல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.254/'14

160.

கௌரவ புத்திக பதிரண,— நாட்டில் நல்லாட்சியை தாபித்தல்,— சீரற்ற ஆட்சியின் பண்புகளான தான்தோன்றித்தனமான கொள்கையாக்கம், அதிகாரவாதம், அமுலாக்கப்படாத மற்றும் அநீதியான சட்டங்கள், நிறைவேற்று அதிகாரத்தை துஷ்பிரயோகம் செய்தல், அரசியலில் பிரஜைகளின் பங்களிப்பு குறைவடைதல் மற்றும் ஊழல் பரவுதல் ஆகிய விடயங்களை எமது நாட்டில் குறைவின்றிக் காணக்கூடியதாக உள்ளதோடு, இதன் காரணமாக நாட்டில் சீரற்ற ஆட்சி நிலவுகின்றமை தென்படுகின்றமையால், நாட்டில் நல்லாட்சியை கட்டியெழுப்புவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.255/'14

161.

கௌரவ புத்திக பதிரண,— வெளிநாடுகளிலுள்ள இலங்கைக்கு சொந்தமான சுவடிகளை மீளப்பெற்றுக்கொள்ளல்,— இலங்கைக்கு சொந்தமான பெறுமதியான பல சுவடிகள் ஐரோப்பிய நாடுகள் உள்ளிட்ட உலகின் பல நாடுகளில் காணப்படுவதுடன், இவற்றில் உள்ளடங்கியுள்ள அறிவை தற்போதைய இலங்கை சமூகம் இழந்துள்ளமையால், மேற்படி சுவடிகளை எமது நாட்டுக்கு மீளப் பெற்று இவற்றில் அடங்கியுள்ள புராதன அறிவை சமூகமயமப்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்றை திட்டமிட்டு நடைமுறைப்படுத்துதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது

பா.256/'14

162.

கௌரவ புத்திக பதிரண,— உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதற்காக கமத்தொழிலின் பங்களிப்பைப் பெறுதல்,— தனிப் பயிர்ச்செய்கை முறைக்கு பதிலாக பல்வகைப் பயிர்ச்செய்கை முறை மற்றும் கலப்புப் பயிர்ச்செய்கை முறையை பிரபல்யபடுத்தல், உயிர் பல்வகைத்தன்மைக்கு கேடு விளைவிக்கும் இரசாயன பதார்த்தங்களை கமத்தொழிலிருந்து நீக்குதல் மற்றும் ஒன்றிணைந்த பீடை முகாமைத்துவ முறைமைகளை பயன்படுத்தல் ஆகியவற்றின் ஊடாக நாட்டில் உயிர் பல்வகைத்தன்மையை பாதுகாப்பதில் விவாசாயிகளை ஈடுபடுத்துகின்றதான வேலைத்திட்டமொன்றை நடைமுறைப்படுத்தல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.257/'14

163.

கௌரவ புத்திக பதிரண,— மக்களின் உணவு கிடைக்கும் உரிமையை பாதுகாத்தல்,— ஐக்கிய நாடுகள் அமைப்பின் மனித உரிமைகள் கட்டமைப்புக்களுக்கு அமைய உணவு கிடைப்பதற்கான அடிப்படை உரிமையை இலங்கை மக்கள் இழக்கும் நிலைமை, அரசாங்க கொள்கை வகுத்தல் மற்றும் அமுல்படுத்துவதில் காணப்படுவதாலும், மேற்படி சமவாயங்களுக்கு அமைய நாட்டு மக்களின் உணவுப் பிரச்சினையை தீர்த்து வைக்கும் பொறுப்பு முற்றாக அரசாங்கத்திற்குப் பொறுப்பளிக்கப்பட்டுள்ளதாலும் அரசாங்கம் தலையீடு செய்து உணவுப் பொருட்களின் விலையைக் கட்டுப்படுத்துகின்ற மற்றும் சுகாதார ரீதியில் பாதுகாப்பான உணவு நாட்டு மக்களுக்குக் கிடைப்பதை உறுதிசெய்கின்ற முறைசார்ந்த வேலைத்திட்டமொன்றை வகுத்து மக்களின் உணவு கிடைக்கும் அடிப்படை உரிமையை உறுதி செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.258/'14

164.

கௌரவ புத்திக பதிரண,— அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்தல்,— அசேதனப் பொருட்களை மீள்சுழற்சிக்கு உள்ளாக்குதலும், அசேதனப் பொருட்களின் உபயோகத்தைக் குறைப்பதும், உபயோகத்திலிந்து நீக்கப்படுகின்ற அசேதனப் பொருட்களை சேகரிப்பதற்குமான பொறிமுறையொன்றை அமைத்தல் மற்றும் அசேதனப் பொருட்களை பயன்படுத்துவதற்கான சுற்றாடல் சட்ட, விதிகளை ஒழுங்குமுறைப்படுத்துவதன் மூலம் நாட்டின் சுற்றாடல் முறைமையின் பாதுகாப்பு மற்றும் நன்நிலைத்திருத்தலுக்காக அசேதனப் பொருட்களை முகாமைத்துவம் செய்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

பா.259/'14

165.

கௌரவ புத்திக பதிரண,— சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டல்,— ஆரோக்கியமான தேசமொன்றைக் கட்டியெழுப்பல் மற்றும் சுதேச ஆயுர்வேதத்தின் நன்நிலைத்திருத்தலை அடிப்படை நோக்கமாகக் கொண்டு சுதேச மருந்து வகைகள் மற்றும் கைமருந்துகள் பற்றி முறைசார்ந்த விடய விளக்கங்களைக் கொண்ட பாடமொன்றை பாடசாலை பாடத்திட்டத்தில் உள்ளடக்குவதன் மூலம் சுதேச மருந்துகள் மற்றும் கைமருந்துகள் பற்றி பாடசாலை மாணவர்களை விழிப்புணர்வூட்டுவதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

* 166.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.1),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 14 ஆம் திகதிய 1875/30 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 167.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.2),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 ஓகத்து 22 ஆம் திகதிய 1876/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 168.

பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சரும்,— விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் கட்டளை (இல.3),— அரசியலமைப்பின் 44 (2) ஆம் உறுப்புரையுடன் சேர்த்து வாசிக்கப்படும் 2007 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்க, விசேட வியாபாரப் பண்ட அறவீட்டுச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் கீழ், சனாதிபதியால் விசேட வியாபாரப் பண்ட அறவீடு தொடர்பாக ஆக்கப்பட்டு, 2014 செத்தெம்பர் 04 ஆந் திகதிய 1878/42 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.19 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 169.

வலு, சக்தி அமைச்சர்.— இலங்கை மின்சாரச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 2009 ஆம் ஆண்டின் 20 ஆம் இலக்க, இலங்கை மின்சாரச் சட்டத்தின் 54 ஆம் பிரிவின் கீழ் மின்வலு, சக்தி அமைச்சரால் இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் சிபாரிசுகளின் பேரில் மின்சார (அனுமதிப்பத்திரம் தொடர்பில் விண்ணப்பித்தலும் விலக்களிப்பும்) தொடர்பில் ஆக்கப்பட்டு, 2014 ஒற்றோபர் 10 ஆம் திகதிய, 1883/12 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2014.11.24 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 170.

ஆட்சியுரிமை (விசேட ஏற்பாடுகள்) சட்டமூலம் — விவாதம் ஒத்திவைக்கப்பட்ட விடயம் (2014, ஓகத்து 07) [1].

* 171.

குற்றச்செயல்களுக்குப் பலியாக்கப்பட்டோருக்கும் சாட்சிகளுக்குமான உதவி மற்றும் பாதுகாப்புச் சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 172.

சுரங்கங்கள், கனிப்பொருட்கள் (திருத்தச்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* 173.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.1),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் குவைட் நாட்டரசின் அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங் களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 நவெம்பர் மாதம் 05 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாகவுள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 174.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல.2),— முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் பாதுகாப்பு என்பவற்றுக்கான இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கம் மற்றும் வியட்நாம் சோசலிச குடியரசு அரசாங்கம் ஆகியவற்றுக்கிடையேயான ஒப்பந்தம், அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டிணைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2009 ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும் 2011.09.07 ஆம் திகதி சமர்ப்பிக்கப் பட்டதுமான ஒப்பந்தமானது அது தேசியப் பொருளாதார அபிவிருத்திக்கு அவசியமாக உள்ளதென இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 175.

வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்,— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் கீழ் தீர்மானம் (இல. 3),— இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு அரசாங்கத்திற்கும் செக் குடியரசு அரசாங்கத்திற்கும் இடையே முதலீட்டு ஊக்குவிப்பு மற்றும் இருவயினொத்த முதலீட்டுப் பாதுகாப்பு ஒப்பந்தம், அத்தகைய அத்தகைய வெளிநாட்டு அரசினாலும், அதன் சுதேசிகளினாலும் அல்லது அத்தகைய அரசின் சட்டங்களின் கீழ் கூட்டிணைக்கப்பட்ட அல்லது கூட்டியமைக்கப்பட்ட கூட்டுத்தாபனங்களினாலும், கம்பனிகளினாலும், ஏனைய கழகங்களினாலும் இலங்கையில் முதலீடு செய்யப்பட்ட முதலீடுகளை மேம்படுத்துவதற்கும் காப்பதற்குமாக 2011 மார்ச் 28 ஆம் திகதியன்று கைச்சாத்திடப்பட்டதும், 2014.08.05 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒப்பந்தமானது தேசிய பொருளாதார அபிவிருத்திக்கு அத்தியவசியமாகவுள்ளதென இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 157 ஆம் உறுப்புரையின் கீழ் அங்கீகரிக்கப்படுதல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 176.

போக்குவரத்து அமைச்சர்,— மோட்டார் வாகனச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— (203 ஆம் அத்தியாயமான) மோட்டார் வாகனச் சட்டத்தின் 5 ஆம் பிரிவின் (2) ஆம் உட்பிரிவுடனும் 19 ஆம் உட்பிரிவுடனும் சேர்த்து வாசிக்கப்படும் அச் சட்டத்தின் 237 ஆம் பிரிவின் கீழ் போக்குவரத்து அமைச்சரினால் ஆக்கப்பட்டு, 2013 யூலை மாதம் 31 ஆந் திகதிய 1821/31 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.11.22 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

* 177.

தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்,— ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— காலத்துக்குகாலம் திருத்தப்பட்டவாறான 1958 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க, ஊழியர் சகாய நிதியச் சட்டத்தின் 46 ஆம் பிரிவின் கீழ் தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு 2013 மே மாதம் 13 ஆந் திகதிய 1810/20 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2013.06.21 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 178.

காணி, காணி அபிவிருத்தி அமைச்சர்,— உரித்துப் பதிவுச் சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1998 ஆம் ஆண்டின் 21 ஆம் இலக்க, உரித்துப் பதிவுச் சட்டத்தின் 60 ஆம் மற்றும் 62 ஆம் பிரிவுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் அச்சட்டத்தின் 67 ஆம் பிரிவின் கீழ் காணி, காணி அபிவிருத்தி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2009 ஒகத்து மாதம் 24 ஆந் திகதிய 1616/23 ஆம் இலக்க, அதிவிசேட வர்த்தமானியில் வெளியிடப்பட்டதும் 2010.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

(அமைச்சரவையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது)

* 179.

வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சர்,— தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ் கட்டளை,— (469 ஆம் அத்தியாயமான) தாவர விலங்கினப் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 2 ஆம் பிரிவின் (1) ஆம் உட்பிரிவின் கீழ் கமநல சேவைகள், வனசீவராசிகள் அமைச்சரால் ஆக்கப்பட்டு, 2011 திசெம்பர் மாதம் 06 ஆந் திகதிய 1735/21 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டதும் 2011.12.13 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான கட்டளை அங்கீகரிக்கப்படுமாக.

180.

ஸ்ரீ லங்கா மகளிர் சம்மேளனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

181.

தற்காப்புக் கலைகளுக்கான நிறுவகம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

182.

த இன்ஸ்ரிரியூட் ஒவ் சேர்டிபைட் பப்ளிக் எக்கவுன்டன்ஸ் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

183.

மெடிசினா ஓல்டனேடிவா நிறுவனம் (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — பரிசீலனை.

184.

உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் (திருத்தச்) சட்டமூலம் — பரிசீலனை.

185.

அல் ஜாமியாத்துல் கவ்ஸிய்யா (கூட்டிணைத்தல்) சட்டமூலம் — இரண்டாம் மதிப்பீடு.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.

---

[1] “சட்டமூலம் இப்பொழுது இரண்டாம் முறையாக மதிப்பிடப்பெறுமாக” எனப் பிரேரணை கொண்டுவரப்பட்டு எடுத்தியம்பப்பெற்றது.

# 2015 சனவரி 20, செவ்வாய்க்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2691/ '12

1\.

கௌரவ சஜித் பிரேமதாச,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) பேராதனைப் பல்கலைக்கழகத்தில் காணப்படுகின்ற மனித வள மற்றும் பௌதீக வள பற்றாக்குறைகள் யாவையென்பதையும்;

(ii) இப்பற்றாக்குறைகளையும் குறைபாடுகளையும் பூர்த்தி செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) தற்போது பேராதனைப் பல்கலைக்கழகத்தில் கல்வி பயிலும் மொத்த மாணவர் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் உள்ள பீடங்களின் எண்ணிக்கை எத்தனை என்பதையும்;

(iii) 2012 ஆம் ஆண்டுக்காக மேற்படி பல்கலைக்கழகத்திற்கு ஒதுக்கட்டுள்ள நிதி ஏற்பாடுகளின் மொத்தப் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி பணத் தொகையானது, 2011 ஆம் ஆண்டுக்காக இதன் பொருட்டு ஒதுக்கப்பட்ட பணத் தொகைக்கு ஒப்பீட்டளவில் அதிகரித்துள்ள அல்லது குறைவடைந்துள்ள அளவு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3313/ '12

2\.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் இன்றுள்ளவாறாக நட்சத்திர வகுப்பு அடிப்படையிலுள்ள ஹோட்டல் அறைகளின் எண்ணிக்கையினையும்;

(ii) வருடத்திற்கான அறை இரவுகளின் எண்ணிக்கையினையும்;

(iii) வருடாந்த அடிப்படையில் கடந்த 3 வருடங்களிற்கான கடந்துசெல்லல் வருகைகளின் எண்ணிக்கையினையும்;

(iv) சுற்றுலாப் பயணி ஒருவரினால் இலங்கையில் செலவழிக்கப்பட்டும் சராசரித் தொகையினையும்

அவர் இச்சபைக்கு அறியத்தருவாரா?

(ஆ) (i) சுற்றுலாப் பயணிகளின் வருகைகளின் போது விதிக்கப்படும் சகல வரிகளையும்;

(ii) கடந்த 3 வருடங்களில் ஒவ்வொரு வரியினாலும் ஈட்டப்பட்ட தொகையினை வெவ்வேறாக வருடாந்த அடிப்படையிலும்

அவர் கூறுவாரா

(இ) இன்றேல், ஏன்?

3824/ '13

3.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (4)

(அ) (i) சுகாதார அமைச்சின் கீழுள்ள போதனா ஆஸ்பத்திரிகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு ஆஸ்பத்திரியிலும் பணியாற்றும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆஸ்பத்திரிகளில் உள்ள நோயாளர்கள் சார்பில் துப்பரவேற்பாட்டு தொழிலாளர்கள் நிறைவேற்றுகின்ற கடமைப்பொறுப்பு யாதென்பதையும்;

(iv) ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டுத் தொழிலாளர் களுக்காக கொடுப்பனவுகள் உட்பட சம்பளமாக வழங்கப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012ஆம் ஆண்டில், ஒவ்வொரு போதனா ஆஸ்பத்திரியிலும் துப்பரவேற்பாட்டு நடவடிக்கைகளுக்காக தனியார் துறைக்கு செலுத்தப்பட்டுள்ள பணத்தொகை வெவ்வேறாக யாதென்பதையும்;

(ii) மேற்படி பணம் செலுத்தப்பட்டுள்ள தனியார் நிறுவனங்களின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4087/ '13

4.

கௌரவ புத்திக பத்திரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக அலுவலகமொன்று பேணிவரப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஆமெனில், அவ்வலுவலகத்தில் சேவையாற்றுகின்ற பதவியணியினரின் பெயர்கள், முகவரிகள், பதவிகள் மற்றும் அவர்களின் கல்வி மற்றும் பிற தகைமைகள் யாவை;

(ii) அப்பதவியணிக்காக அவ்வலுவலகம் ஆரம்பிக்கப்பட்ட தினத்தில் இருந்து இற்றைவரை செலுத்தப்பட்ட கொடுப்பனவுகள் தனித்தனியாக யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்தின் ஆலோசனைப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) இக்கருத்திட்டத்திற்கான கணனி வன்பொருள்களைக் கொள்வனவு செய்வதற்காக இற்றைவரை செலவிடப்பட்டுள்ள பணத்தொகை யாது;

(iii) அக்கருத்திட்டத்தின் மென்பொருள்களைத் தயாரிக்கும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(iv) இற்றைவரை மென்பொருள்களைத் தயாரிப்பதற்காக அந்நிறுவனத்திற்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4176/ '13

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற கொலான்னாவ பிரதான சேவை நிலைய உபகரண வேலைத் தளத்தின் மேற்பார்வை நடவடிக்கைகள் எவ்வுத்தியோகத்தரின் கீழ் நடைபெறுகின்றதென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) 2005 ஆம் ஆண்டு தொடக்கம் 2013 யூன் மாதம் வரையிலான காலப்பகுதியில் இவ்வேலைத்தளத்தில்,

(i) பம்பிகளைக் கொள்வனவு செய்வதற்கு, உதிரிப் பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு மற்றும் எரிபொருள் நிரப்பு நிலையங்களைத் திருத்துவதற்கு செலவு செய்யப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்,

(ii) உதிரிப் பாகங்களை விற்பனை செய்ததன் ஊடாக ஈட்டப்பட்ட பணத்தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) 2013 யூன் மாதம் இறுதியளவில் இவ்வேலைத்தளத்தில் பணிபுரிந்த ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும் அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4465/ '13

6.

கௌரவ அனுர திஸாநாயக்க,— சிவில் விமானச்சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,—(3)

(அ) (i) வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனி 2010/2011 ஆம் ஆண்டில் பெற்ற தேறிய நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) அந்த ஆண்டின் கணக்குகள் தொடர்பாக கணக்காய்வை மேற்கொண்ட பட்டயக் கணக்காய்வாளர்களான 'பிரய்ஸ் வோட்டர் ஹவுஸ் கூப்பர்ஸ்' நிறுவனம் மிஹின் லங்கா கம்பனியின் இருப்பு தொடர்பானதொரு கருத்தை முன்வைத்துள்ளதா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அந்நிறுவனம் முன்வைத்துள்ள கருத்தில் 'ஒரு வருடத்தில் மிஹின் லங்கா கம்பனி ரூபா 940.49 மில்லியன் நட்டத்தைக் காட்டியுள்ளதுடன், நடைமுறைப் பொறுப்புக்கள் ரூபா 1,083.92 மில்லியனால் நடைமுறைச் சொத்துக்களைத் தாண்டிச் சென்று ருபா 3,814.45 மில்லியன் எதிர் மறையான தேறிய பெறுமானத்தைக் காட்டுவதன் மூலம் கம்பனியை இயங்கும் நிலையிலான தொழில் முயற்சியொன்றாக தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கான ஆற்றல் தொடர்பில் சந்தேகமான நிலையை காட்டுகிறது' எனக் குறிப்பிடப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) இந்நிலைமையில் வ/ப மிஹின் லங்கா (தனியார்) கம்பனியைத் தொடர்ந்தும் கொண்டு நடாத்துவதற்கு பொதுமக்களின் பணத்தை ஈடுபடுத்துவது பயனற்றதென்பதை அரசு ஏற்றுக்கொள்கிறதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4584/ '13

7\.

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க,— வெளிநாட்டு வேலைவாய்ப்பு ஊக்குவிப்பு, நலனோம்புகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகத்தினால் வெளிநாடு சென்றுள்ள ஊழியர்களின் பங்களிப்புத் தொகையில் நடைமுறைப்படுத்தப் படுகின்ற கட்டாய காப்புறுதித் திட்டமொன்று அறிமுகம் செய்து வைக்கப்பட்டுள்ளதென்பதையும்;

(ii) ஆரம்பத்தில், இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் நடைமுறைப் படுத்தப்பட்டு பிற்பட்ட காலத்தில் வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியொன்றுக்கு ஒப்படைக்கப்பட்ட மேற்படி காப்புறுதி நடவடிக்கைகள் குறிப்பிட்ட கம்பனியினால் தரகர் நிறுவனமொன்றின் ஊடாக எம்.பீ.எஸ்.எல். காப்புறுதிக் கம்பனிக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) வெளிநாட்டு வேலைவாய்ப்பு முகவர் கம்பனியினால் குறிப்பிட்ட தரகர் நிறுவனத்திலிருந்து சேவைகளைப் பெறுதல் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது;

(ii) வெளிநாடு சென்றுள்ள ஊழியர் ஒருவரிடமிருந்து அறவிடப்படுகின்ற தவணைத் தொகையிலிருந்து அந்த தரகர் கம்பனிக்கு செலுத்தப்படும் சதவீதம் எவ்வளவு;

(iii) இன்றுவரை அந்த கம்பனிக்கு செலுத்தப்பட்டுள்ள மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(iv) இலங்கை காப்புறுதிக் கூட்டுத்தாபனத்தினால் மேற்படி காப்புறுதித் திட்டத்தை நடைமுறைப்படுத்துகின்ற போது தரகர்களின் சேவை பெறப்பட்டதா;

(v) தரகர் ஒருவரின் சேவை பெற்றுக்கொள்ளப்பட்டதன் மூலம் கிடைத்த நன்மை யாது;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) தரகர் சேவைகளுக்காக செலுத்தப்பட்ட கட்டணங்களைப் பெற்ற தரகர் கம்பனியின் பிரதிநிதி யார்;

(ii) அந்த பிரதிநிதி மேற்கூறிய கட்டணம் செலுத்தப்பட்ட ஒட்டுமொத்த காலகட்டம் முழுவதிலும் மேற்படி கம்பனியில் சேவையில் ஈடுபட்டிருந்தாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4767/ '14

8\.

கௌரவ அசோக் அபேசிங்ஹ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) வருடாந்தம் இந்நாட்டிற்கு இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமையின் அளவு எவ்வளவென்பதையும்;

(ii) அதன் பெறுமதி எவ்வளவென்பதையும்;

(iii) வருடாந்தம் இறக்குமதி செய்யப்படுகின்ற கோதுமை மாவின் அளவு எவ்வளவென்பதையும்;

(iv) நாளொன்றிற்கு எவ்வளவு பாண் நுகர்வு செய்யப்படுகின்றது என்பதையும்;

(v) பாண் நுகர்வைக் குறைப்பதற்காக நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4941/ '14

9.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) ஆரம்பிக்கப்பட்ட திகதியிலிருந்து வருடா வருடம் ஒவ்வொரு உயர் கல்வி நிறுவன ரீதியாகவும் மஹபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு புலமைப் பரிசில் மூலம் நிதி உதவி பெறும் மாணவர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(ii) 1981 முதல் இதுவரையில் மஹபொல உயர் கல்வி நம்பிக்கைப் பொறுப்பு புலமைப் பரிசிலின் கீழ் நிதி உதவி பெற்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் சபாபீடத்தில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) மஹபொல உயர் கல்வி புலமைப் பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியத்துக்கு பங்களிப்புத் தொகைகள் கிடைக்கப்பெறும் வழிவகைகள் யாவை;

(ii) மஹபொல புலமைப் பரிசில் வழங்குவதற்காக குறைந்த வருமானம் பெறும் மாணவர்களைத் தேர்ந்தெடுத்தல் திருப்தியடையக்கூடிய உரிய முறையியலொன்றுக்கு அமைய நடைபெறுகின்றதா;

(iii) ஆமெனில், மேற்படி முறையியல் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) உயர் கல்வியை பூர்த்தி செய்த மஹபொல புலமைப்பரிசில் பயனாளிகள் இதிலிருந்து பெற்றுக்கொள்ளும் பயன்கள் தொடர்பில் பின்னாய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5035/ '14

10.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தெங்கு அபிவிருத்தி, மக்கள் தோட்ட அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தூய்மையான தேங்காய் எண்ணெய்க்கு (Virgin Coconut Oil) சர்வதேச சந்தையில் உயர் கேள்வி நிலவுகின்றது என்பதையும்;

(ii) அதிக விலைகளின் கீழ் விற்பனை செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யை ஏற்றுமதி செய்வதன் மூலம் பெருமளவு வெளிநாட்டுச் செலாவணியை ஈட்டுவதற்கான வாய்ப்பு உள்ளது என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) இந்நாட்டில் தூய்மையான தேங்காய் எண்ணெய்யை உற்பத்தி செய்கின்ற தொழில்சாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) வருடாந்தம் உற்பத்தி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iii) 2013 ஆம் ஆண்டு தூய்மையான தேங்காய் எண்ணெய் ஏற்றுமதியின் மூலம் பெறப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி கைத்தொழிலாளர்களுக்கு அரசாங்கத்தினால் வழங்கப்பட்டுள்ள அனுசரணைகள் யாவை என்பதையும்;

(v) இலங்கையிலிருந்து ஏற்றுமதி செய்யப்படுகின்ற தூய்மையான தேங்காய் எண்ணெய்யின் தரத்தை உயர் மட்டத்தில் பேணிவருவதற்காக அங்கீகரிக்கப்பட்ட தரக் கட்டுப்பாட்டு முறையியலொன்று அறிமுகம் செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5196/ '14

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) இலங்கையில் தற்சமயம் இயங்கும் நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) அந்த மின் உற்பத்தி நிலையங்களின் பெயர்கள் யாவை என்பதையும்;

(iii) புதிதாக நிர்மாணிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ள நிலக்கரி மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மின் உற்பத்தி நிலையங்கள் தாபிக்கப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(v) மேற்படி நிர்மாணிப்புகளுக்குத் தேவையான காணிகளை பெற்றுக்கொள்ளும் முறையியல் யாதென்பதையும்;

(vi) நுரைச்சோலை அனல் மின் நிலையத்திலிருந்து தற்போது உற்பத்தி செய்யப்பட்டுள்ள மின் அலகுகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(vii) இது இலங்கையின் மின்சாரத் தேவையில் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5259/ '14

12.

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள், கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தெல்தொட்ட – பல்லேகம பிரதான வீதி நீண்டகாலமாக கடுமையாக சிதைவடைந்துள்ளதால் இவ்வீதியை பயன்படுத்துகின்ற மக்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்;

(ii) மழை காலத்தில் மேற்படி வீதியை பயன்படுத்துகின்ற பாடசாலை மாணவர்கள் பெரும் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) தெல்தொட்ட மற்றும் பல்லேகம பிரதேசத்தில் வாழும் மக்களின் நலனுக்காக மேற்படி பிரதான வீதியை மிகத் துரிதமாக மறுசீரமைத்துக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5359/ '14

13.

கௌரவ அ. விநாயகமூர்த்தி,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (3)

(அ) (i) பலாலி விமான நிலையத்தின் நிர்மாண வேலைகள் எப்போது பூர்த்தியடையுமென்பதையும்;

(ii) பொதுமக்கள் பாவனைக்காக அது எப்போது திறக்கப்படுமென்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

2693/ '12

14.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— உயர் கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கிழக்கு பல்கலைக்கழகம் ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) மேற்படி பல்கலைக்கழகத்தில் தற்போது கல்வி பயிலும் மாணவர்களின் எண்ணிக்கை மற்றும் பணியாற்றும் கல்வி சார் பணியாட்டொகுதி உறுப்பினர்களின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்

(iii) மேற்படி பல்கலைக்கழகத்தின் கீழுள்ள பீடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iv) அந்த பீடங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கிழக்கு பல்கலைக்கழகத்தில் நிலவும் மானிட மற்றும் பௌதீக வளங்களின் பற்றாக்குறைகள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி பற்றாக்குறைகள் மற்றும் குறைபாடுகளை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் திகதி யாது என்பதையும்;

(iii) மேற்படி பல்கலைக்கழகத்துக்கான அபிவிருத்தி திட்டம் ஒன்று உள்ளதா என்பதையும்;

(iv) அவ்வாறெனின் அது தொடர்பான விபரங்கள் யாவை என்பதையும்;

(v) அந்தத் திட்டத்தை நடைமுறைப்படுத்த எவ்வளவு பணம் செலவாகும் என்பதையும்;

(vi) மேற்படி திகதி ஏற்பாட்டை வழங்க அரசு நடவடிக்கை எடுக்கும் காலம் கட்டம் யாது என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3319/ '12

15.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 5 வருடங்களுக்கு முன்னர் பெற்றுக்கொண்ட மாதாந்த சம்பளத்துடன் ஒப்பீடு செய்து, இன்றுள்ளவாறு அரசாங்க ஊழியர்களின் "மெய் கொள்வனவுச் சக்தி" என்னவென்பதை ஒவ்வொரு வருடத்திற்குமான பணவீக்கத்துடன் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரசாங்க ஊழியர்களுக்கான வாழ்க்கை செலவுப் படியின் பெறுமதி என்னவென்பதையும்;

(ii) இது மாதாந்தம் செலுத்தப்படுகிறதா என்பதையும்;

(iii) இதனை இறுதியாக செலுத்திய திகதி அல்லது மாதம் எது என்பதையும்;

(iv) வாழ்க்கைச் செலவுப் படி செலுத்தப்படாவிடின் அதற்கான காரணங்கள் யாது என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 சனவரி 21, புதன்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2695/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அம்பாந்தோட்டை மாவட்டத்தில் சூரியவெவ பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தில் மஹபெலெஸ்ஸ கிராமத்தை அண்டியதாக உலகில் பிரசித்தி பெற்ற மதுநாகல வெந்நீர் ஊற்றுக்கள் அமைந்துள்ளன என்பதையும்;

(ii) மேற்படி வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசம் சுற்றுலா வலயமாக அபிவிருத்தி செய்யப்பட்டதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி பிரதேசத்திற்கு உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகள் அதிகளவில் வருகை தருகின்றனர் என்பதையும்;

(iv) வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய பிரதேசத்தில் அபிவிருத்தி செய்யப்பட்ட சுற்றுலாத்துறை வசதிகள் தற்போது வீழ்ச்சியடைந்து வருகின்றன என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மதுநாகல வெந்நீர் ஊற்றுக்களை அண்டிய சுற்றுலா வலயத்தில் காணப்படும் குறைபாடுகளை நிவர்த்தி செய்வதற்கு இலக்கிடப்பட்ட நிகழ்ச்சித் திட்டமொன்றை நடைமுறைப்படுத்துவாரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அதற்கான திகதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3323/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010 ஆம் ஆண்டிலிருந்து இற்றை வரைக்கும்,

(i) பியர் மற்றும் மதுபானத்தின் தனித்தனியான நுகர்வு எவ்வளவு என்பதையும்;

(ii) இலங்கையில் உற்பத்தி செய்யப்பட்ட பியர் மற்றும் மதுபானத்தின் அளவு எவ்வளவு என்பதனையும்;

(iii) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட பியர் மற்றும் மதுபானத்தின் அளவு எவ்வளவு என்பதனையும்;

(iv) பியர் மற்றும் மதுபானத்தின் உள்ளூர் உற்பத்தி மற்றும் இறக்குமதிகள் மீது விதிக்கப்பட்ட எல்லா வகையான வரிகள் மூலமும் அரசாங்கம் ஈட்டிய வருமானம் எவ்வளவு என்பதையும்

ஆண்டின் அடிப்படையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) கடந்த மூன்று வருடங்களில் இடம்பெறும் சட்டரீதியற்ற மதுபான வடித்தலின் மதிப்பிடப்பட்ட அளவை வருடாந்த அடிப்படையில் அவர் குறிப்பிடுவாரா??

(இ) இன்றேல், ஏன்?

4088/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு ,— (3)

(அ) (i) நாடு முழுவதிலும் அமைந்துள்ள அஞ்சல் அலுவலகங்களை வலையமைப்பு செய்வதற்கான கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதென்பதை அறிவாரா;

(ii) இதற்கான உடன்படிக்கை செய்துகொள்ளப்பட்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(iii) அவ்வுடன்படிக்கையை கைச்சாத்திடுவதற்கு முன்னர் சாத்தியவள ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டதா;

(iv) சம்பந்தப்பட்ட உடன்படிக்கையின் பிரதியொன்றினை இச்சபைக்குச் சமர்ப்பிக்க நடவடிக்கை எடுப்பாரா;

(v) அவ்வுடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட திகதி யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) அஞ்சல் அலுவலக வலையமைப்புக் கருத்திட்டத்திற்காக செலவிட எதிர்பார்த்துள்ள பணத்தொகை யாது;

(ii) அக்கருத்திட்டத்தின் காலவரையறை யாது;

(iii) வலையமைப்பாக்கபட்ட அஞ்சல் அலுவலகங்களின் எண்ணிக்கை கட்டங்கட்டமாக தனித்தனியாக எவ்வளவு

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4091/ '13

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2013 ஆம் ஆண்டில் சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் செயலற்றுப் போன நாட்கள் இருந்தனவா;

(ii) அவ்வாறு செயலற்றுப்போகச் செய்தமைக்கு ஏதுவான காரணங்கள் யாவை;

(iii) மசகெண்ணையை உரிய வகையில் பெற்றுக்கொள்ள இயலாமல் போனமையால் சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டுள்ளதா;

(iv) அந்நாட்கள் யாவை;

(v) மசகெண்ணெய் இன்மை காரணமாக சுத்திகரிப்பு நிலையம் மூடப்பட்டதால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் மொத்தமாக எவ்வளவு;

(vi) மசகெண்ணெய் பற்றாக்குறை தொடர்பாக விசாரணையொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா;

(vii) ஆமெனில் அவ்விசாரணையில் தவறாளிகளாக காணப்பட்டவர்களுக்கு எதிராக ஒழுக்காற்று நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4297/ ’13

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க களஞ்சியங்களிலுள்ள மேலதிக நெல் இருப்புகளை விலங்கு உணவுக்காக குறைந்த விலைக்கு விற்பனை செய்யத்தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், நெல் இருப்புகளை குறைந்த விலையில் விலங்குகளுக்கான உணவாக விற்பனை செய்வதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iii) அரசாங்க களஞ்சியங்கள் நெல்லைக் கொள்வனவு செய்யும் போது ஈரத்தன்மையுடனான நிறை பரிசீலிக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) கொள்வனவு செய்யும் போது நெல் இருப்புகளில் காணப்பட வேண்டிய ஈரத்தன்மையுடனான நிறை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4656/ ’13

6.

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 1994 ஆம் ஆண்டு முதல் 2014 ஆம் ஆண்டு வரையான 20 வருட காலப்பகுதிக்குள் அரச நிறுவனங்கள் தனியார்மயப்படுத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி நிறுவனங்களை கொள்வனவு செய்துள்ள நிறுவனங்கள் அல்லது தரப்பினர்கள் யாவர் என்பதையும்;

(iv) அரச நிறுவனங்களை தனியார்மயப்படுத்துதல் அரசாங்கத்தின் கொள்கைக்கு முரணானதாக இல்லையா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4676/ ’13

7.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச வைத்தியசாலைகளுக்கு மருந்து கொள்வனவு செய்யும் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை யாது;

(ii) இவற்றில் உள்நாட்டு மற்றும் வெளிநாட்டு ரீதியில் பதிவு செய்யப்பட்ட கம்பனிகளின் எண்ணிக்கை வெவ்வேறாக யாது;

(iii) பதிவுசெய்யப்பட்ட வெளிநாட்டுக் கம்பனிகளின் உள்நாட்டு பிரதி நிதிகளின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) (i) அரச வைத்தியசாலைகளுக்கு மருந்து கொள்வனவு செய்யப்படும் நாடுகள் யாவை;

(ii) கொள்வனவு செய்யும் மருந்துகளின் அளவுகளுக்கமைய முறையே அந்நாடுகளின் பெயர்கள் யாவை;

(iii) மேற்படி நாடுகளில் தரத்தில் குறைந்த மருந்துகளை உற்பத்தி செய்யும் நாடுகள் யாவை

என்பதை அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) கடந்த மூன்று ஆண்டுகளில் அரச வைத்தியசாலைகளுக்கு வழங்கப்பட்ட மருந்துகளில் உரிய தரம் இன்மையினால் வருடாந்தம் நீக்கப்பட்ட மருந்து வகைகளின் எண்ணிக்கை வெவ்வேறாக எவ்வளவு;

(ii) மருந்துப் பொருட்களுக்கான கொள்வனவுக் கட்டளை விடுக்கப்படுவதற்கு முன்னர் அரச ஆய்வுகூடங்களில் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டு அறிக்கை பெறப்படுகின்றதா;

(iii) கடந்த இரண்டு ஆண்டுகளில் தரத்தில் குறைந்த மருந்து வகைகளை இறக்குமதி செய்து கரைநிரல் பட்டியலில் (Black list) இடப்பட்டுள்ள நிறுவனங்களின் எண்ணிக்கை மற்றும் அவற்றின் பெயர்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4769/ '14

8\.
கௌரவ அசோக் அபேசிங்ஹ,— தபால் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) குருநாகல் மாவட்டத்தில் நிரந்தர சேவையில் ஈடுபட்டுள்ள உப தபால் அதிபர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) அரச ஊழியர்களுக்குரிய சிறப்புரிமைகளை உப தபால் அதிபர்களுக்கும் வழங்குவாரா என்பதையும்;

(iii) சனிக்கிழமை நாட்களில் கடமையாற்றுவதற்காக உப தபால் அதிபர்களுக்கு மேலதிக கொடுப்பனவொன்றை வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் இச் சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4943/ '14

9\.
கௌரவ (திருமதி) அனோமா கமகே,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரச நிறுவனங்களுக்கு கடன் வழங்கியுள்ள அரச மற்றும் அரச சார்பற்ற வங்கிகள் மற்றும் நிதி நிறுவனங்கள் யாவை என்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டு தொடக்கம் 2014 ஆம் ஆண்டின் இன்றுவரை கடன் பெற்றுள்ள அரச நிறுவனங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) மேற்படி (அ) இன் பிரகாரம் கடன் பெற்றுள்ள ஒவ்வொரு நிறுவனத்தினதும் பெயர் (அமைச்சு, திணைக்களம், அரச கூட்டுத்தாபனம் மற்றும் வேறு நிறுவனங்கள்), கடன் வழங்கிய நிறுவனத்தின் பெயர் (வங்கி/நிதி நிறுவனம்), பெற்றுக்கொள்ளப்பட்ட கடன் அளவு, கடன் பெற்றமைக்கான காரணம் அல்லது தேவைப்பாடு உள்ளடங்கிய பட்டியலொன்றையும் அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) அரச நிறுவனங்களுக்கு மேலே கூறப்பட்டவாறு கடன் வழங்கும் போது அறவிடப்படும் வட்டி வீதம் எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி வட்டி வீதம், கடன் பெற்றுக்கொள்ளப்படும் காரணத்தின் அடிப்படையில் வேறுபடுகின்றதா என்பதையும்

(iii) ஆமெனின், இவ்வேறுபாடுகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5097/ '14

10.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— தொலைத்தொடர்புகள், தகவல் தொழில்நுட்பவியல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தயட்ட கிருள 2014 கண்காட்சிக்கு இணைந்ததாக வடமேல் மாகாணத்தில் விருத்தி செய்யப்பட்ட சிறு நீர்ப்பாசனத் திட்டங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி கண்காட்சிக்கு இணைந்ததாக புதிதாக உருவாக்கப்பட்ட நீர்ப்பாசன கருத்திட்டங்கள் உள்ளனவா என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு கருத்திட்டத்துக்கும் செலவிடப்பட்ட பணத்தொகைகள் எவ்வளவென்பதையும்

அவர் இச்பைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5199/ '14

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— காணி, காணி அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் அடிப்படைக் குறிக்கோள்கள் யாவை என்பதையும்;

(ii) நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட தீர்ப்பொன்றுக்கு முரணான வகையில் 'பிம் சவிய' நிகழ்ச்சித்திட்டத்தின் கீழ் காணிகளை அளவை செய்வதற்கு இயலுமாயுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி காணி அளவையானது எந்த சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் மேற்கொள்ளபட்டதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) ஹோமாகம மாவட்ட நீதிமன்றத்தில், வழக்கு எண் 2061 என்ற பிரிவிடல் வழக்கின் தீர்ப்பிற்கு இணங்க 3 பகுதிகளாக பிரிக்கப்பட்ட காணியொன்றை மேற்படி தீர்ப்பிற்கு முரணாக 'பிம் சவிய' உத்தியோகத்தர்கள் 2 பகுதிகளாக பிரித்துள்ளனரென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) மேற்படி காணியை இவ்வாறு பிரித்தமைக்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

2731/ '12

12.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) கோதுமை மா விலை அதிகரிப்பைத் தொடர்ந்து பல்வேறு பிரதேசங்களில் பல்வேறு விலை மட்டங்களின் கீழ் பாண் விற்பனை செய்யப்படுகின்றதென்பதையும்;

(ii) பாண் ஒன்றின் இருக்க வேண்டிய நிறை 450 கிராமாக இருக்க வேண்டிய போதிலும் தற்போது சந்தையில் விற்பனை செய்யப்படுகின்ற பாணில் உரிய நிறை கிடையாதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) பாண் ஒன்றில் இருக்க வேண்டிய உரிய நிறை மற்றும் பாண் ஒன்றுக்கான உரிய விலை பற்றி சம்பந்தப்பட்ட அலுவலர்களால், பேக்கரி உரிமையாளர்களும் பாண் விற்பனையாளர்களும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) உரிய நிறையற்ற மற்றும் உரிய விலையைப் பார்க்கிலும் அதிக விலைக்குப் பாண் விற்பனை செய்பவர்களை சட்டத்தின் பிடியில் சிக்கவைத்தல் தொடர்பாக மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3324/ '12

13.

கௌரவ ரவி கருணாநாயக்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் நாட்டில் பதிவு செய்யப்பட்ட பயணிகள் கார்கள், வேன்கள், லொறிகள், முச்சக்கர வண்டிகள் மற்றும் மோட்டார் சைக்கிள்கள் ஆகியவற்றின் மொத்த எண்ணிக்கை தனித்தனியாக இச்சபையில் அவர் தெரிவிப்பாரா?

(ஆ) பதிவுத் திகதியின் அடிப்படையில் மேற்குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பிரிவுகளிலும் தற்போது காணப்படும் வாகனங்களின் எண்ணிக்கையை,

(i) இரண்டு வருடங்களுக்கு குறைந்தவை;

(ii) 2 - 5 வருடங்கள் வரையானவை;

(iii) 5 - 10 வருடங்கள் வரையானைவை;

(iv) 10 - 20 வருடங்கள் வரையானவை;

(v) 20 வருடங்களுக்கு மேலானவை

ஆகிய வகைகளின் கீழ் அவர் கூறுவாரா?

(இ) மேற்படி 'அ' வில் குறிப்பிடப்பட்டுள்ள வருடங்களில் வினியோகித்த வாகன வருமான உத்தரவுப் பத்திரம் மூலம் அரசாங்கத்தினால் அல்லது மாகாண சபையினால் ஈட்டப்பட்ட வருமானம் எவ்வளவு என்பதையும் அவர் கூறுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4467/ '13

14.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமெரிக்காவின் இலங்கை தூதரகம் Patton Boggs எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில்அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4813/ '14

15.

கௌரவ புத்திக்க பத்திரண,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை முதலீட்டுச் சபையின் கீழ் பதிவு செய்யப்பட்டு தற்போது சுதந்திர வர்த்தக வலயத்தில் வாகனங்களை பொருத்தி விற்பனை செய்யும் தொழில்முயற்சியொன்றை நடத்திவரும் வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்தினால் விற்பனை செய்யப்படும் மோட்டார் வாகனங்கள் ஒரு மாதத்தினுள் பதிவு செய்யப்படுமென மோட்டார் போக்குவரத்து ஆணையாளரினால் வழங்கப்பட்ட கடிதமொன்று கொள்வனவாளர்களுக்கு காண்பிக்கப்படுகின்றது என்பதையும்;

(ii) எனினும், மேற்படி நிறுவனத்தினால் விற்பனை செய்யப்பட்ட வாகனங்கள் பதிவு செய்யப்படுவதை மோட்டார் போக்குவரத்து திணைக்களம் நிராகரிக்கின்றதென்பதையும்;

(iii) இதனால், மேற்படி நிறுவனத்திலிருந்து மோட்டார் வாகனங்களை கொள்வனவு செய்துள்ள பெரும் எண்ணிக்கையான வாடிக்கையாளர்கள் தமது வாகனங்கை செலுத்த முடியாது கடும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) வ/ப வெஹிகல்ஸ் லங்கா தனியார் நிறுவனத்திலிருந்து கொள்வனவு செய்யப்பட்ட வாகனங்களை, மோட்டார் வாகன போக்குவரத்து திணைக்களத்தில் பதிவு செய்வதற்கான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பாரா என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 சனவரி 22, வியாழக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2763/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) "தாதியர் தினம்" கொண்டாட்ட விழாவுக்காக செலவிடப்பட்ட மொத்தப் பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(ii) அரசாங்க ஆஸ்பத்திரிகளில் காணப்படுகின்ற தாதிமார்களுக்கான வெற்றிடங்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) தேவையான அளவு தாதிமார் இல்லாதமையினால் சிலவேளைகளில் ஒரு நாளில் 18 மணித்தியாலங்கள் போன்ற காலப்பகுதிகூட கடமையாற்ற தாதிமார்களுக்கு நேரிடுகின்றதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) இந்த நிலைமையைத் தவிர்ப்பதற்கு எதிர்வரும் காலத்தில் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3325/ '12

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் வரவு செலவுத் திட்ட உரைகளினூடாக ஊடகவியலாளர்களுக்கு பிரேரிக்கப்பட்ட நன்மைகளையும்;

(ii) அவற்றில், 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் ஊடகவியலாளர்களுக்கு வழங்கிய நன்மைகளையும்;

(iii) மேற்சொன்ன நன்மைகளின் மொத்தப் பெறுமதியையும்

அவர் கூறுவாரா?

(ஆ) கார் கடன்கள் வழங்கப்பட்ட ஊடகவியலாளர்களின் பெயர்களை அவர்கள் பிரதிநிதித்துவம் செய்யும் ஊடக நிறுவனத்துடன் அவர் மேலும் தெரிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4424/ '13

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) திருகோணமலை சீனத் துறைமுகம் சார்ந்ததாக புதிய சீமெந்து தொழிற்சாலை ஒன்றை ஆரம்பிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி உத்தேச தொழிற்சாலையை நிர்மாணித்தல் தொடர்பில் சுற்றாடல் அறிக்கையொன்று பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி அறிக்கையின் உள்ளடக்கத்தை இச்சபைக்கு சமர்ப்பிக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலையை நிர்மாணிப்பதால், மீன் வளம் அழியக்கூடிய அச்சுறுத்தல் உருவாகுமென முறைப்பாடுகள் அல்லது எதிர்ப்புகள் எழுந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4529/ '13

4.

கௌரவ புத்திக பத்திரண,— கல்விச் சேவைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2013 வரவு - செலவுத் திட்டத்தின் மூலம்,

(i) தனிமைப்படுத்தப்பட்ட பாடசாலைகள் சிறுவர்நேய சூழலுடையதாக அபிவிருத்தி செய்யப்படுமெனவும்;

(ii) மேற்படி பாடசாலைகளுக்கு அனுமதிக்கப்படுகின்ற ஒவ்வொரு பிள்ளைக்கும் இலவசமாக தானியம், முட்டை மற்றும் பாலுடனான உணவை வழங்குவதாகவும்;

(iii) மேற்படி பாடசாலைப் பிள்ளைகளுக்கு ஒரு சோடி பாதணிகளையும் வருட மத்தியில் மேலதிக சீருடையொன்றையும் இலவசமாக பெற்றுத் தருவதாகவும்

முன்மொழியப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) தற்போது அபிவிருத்தி செய்யப்பட்டுள்ள சிறுவர்நேய பாடசாலைகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி (அ) (ii) மற்றும் (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ள முன்மொழிவுகள் தற்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(v) அவ்வாறெனில், மேற்படி முன்மொழிவுகள் நடைமுறைப்படுத்தப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4573/ '13

5.

கௌரவ அனுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) இலங்கையில் வருடாந்த பால் மற்றும் பால் சார்ந்த உற்பத்திகளுக்கு தேவைப்படும் திரவப் பாலின் அளவு எவ்வளவென்பதை அவர் கூறுவாரா?

(ஆ) (i) இறக்குமதி செய்யப்படும் 01 கிலோ கிறாம் பால்மாவிற்கு அறவிடப்படும் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விலை, இறக்குமதி செய்யப்பட்ட பால்மாவை உள்நாட்டு சந்தையில் விற்பனை செய்யும் விலையின் சதவீதமாக கொள்ளப்படுகின்றபோது பெறுமதி எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல் ஏன்?

4657/ '13

6.

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 250 கிலோ கிறாம் அளவான பாரியளவு ஹெரோயினை இந்நாட்டுக்கு கொண்டுவந்துள்ளதாக கண்டுபிடிக்கப்பட்ட கொள்கலன்களை நிவாரண முறையில் விடுவித்துக் கொள்வதற்காக கௌரவ பிரதம அமைச்சரின் ஆலோசனையின் பேரில் கடிதமொன்று வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடிதத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) பிரதம அமைச்சர் அலுவலகத்தின் கடிதத் தலைப்புடன் கடிதங்களை வழங்குகின்றபோது அதன் பொறுப்பை பிரதம அமைச்சர் ஏற்றுக் கொள்கின்றாரா என்பதையும்;

(iv) மேற்படி ஹெரோயின் தொகையை கொண்ட கொள்கலனை விடுவித்துக் கொள்வதற்காக வழங்கப்பட்ட கடிதத்தில் கையொப்பமிட்டுள்ள அலுவலர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4677/ '13

7.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் அறிக்கையிடப்பட்டுள்ள டெங்கு நோயாளர் எண்ணிக்கையின் வளர்ச்சி 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) மேலே குறிப்பிடப்பட்ட ஆண்டுகளில் டெங்கு நோய் காரணமாக இறந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) மேற்படி ஆண்டுகளில் டெங்கு நோயினாலான மரணங்கள் அதிகளவில் அறிக்கையிடப்பட்ட மாவட்டங்களை ஒழுங்கு வரிசைப்படி அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) டெங்கு ஒழிப்புக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் யாவையென்பதையும்;

(ii) அதற்கென கடந்த மூன்றாண்டுகளில் செலவிட்டுள்ள பணத் தொகை யாதென்பதையும்;

(iii) அதன் மூலம் அடையப்பெற்றுள்ள பெறுபேறுகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) டெங்கு ஒழிப்புக்கான பிரீஜ (BTI) பற்றீரியா இறக்குமதி செய்யப்பட்ட நாடுகள் யாவை என்பதையும்;

(ii) குறித்த பற்றீரியாவை இறக்குமதி செய்வதற்காக 2011, 2012 மற்றும் 2013 ஆம் ஆண்டுகளில் செலவிட்டுள்ள பணத் தொகை தனித்தனியாக யாதென்பதையும்;

(iii) பிரீஜ பற்றீரியாவை இலங்கையில் உற்பத்திச் செய்ய முடியுமா என்பதையும்;

(iv) அவ்வாறு செய்ய முடியுமாயின், இலங்கையில் பிரீஜ பற்றீரியாவைப் பயன்படுத்தாதிருப்பதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

4772/ '14

8\.

கௌரவ அசோக் அபேசிங்க,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகள் மற்றும் தனியார் பேருந்துகளுக்காக ஒருங்கிணைந்த நேரசூசி முறையொன்று நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) இலங்கை போக்குவரத்துச் சபையின் பேருந்துகளின் எண்ணிக்கையானது தனியார் பேருந்துகளின் எண்ணிக்கையை விட குறைவாக உள்ளதால் மேற்படி ஒருங்கிணைந்த நேரசூசி முறையின் மூலம் பாரதூரமான நட்டம் இலங்கைப் போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்றதா என்பதையும்;

(iii) ஆமெனில், இலங்கை போக்குவரத்துச் சபைக்கு ஏற்படுகின்ற நட்டத்தை தவிர்த்துக்கொள்வதற்காக ஏதேனும் நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5022/ '14

9\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், துறைமுககங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா – மிரிஸ்வத்த தொடக்கம் வத்துருகம வரையிலான வீதி விஸ்தரிப்பு கருத்திட்டத்திற்கு செலவாகும் மொத்தப் பணத் தொகை எவ்வளவு;

(ii) மேற்படி கருத்திட்டத்துக்காக தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டின் பிரதியொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதியை விஸ்தரிப்பதற்கான ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொண்ட நிறுவனத்தின் பெயர் யாது;

(ii) மேற்படி நிறுவனத்தை தெரிவுசெய்வதற்காக அங்கீகரிக்கப்பட்ட கேள்விப் பத்திர நடைமுறைகள் பின்பற்றப்பட்டனவா;

(iii) முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறைகள் பின்பற்றப்படவில்லை எனில், அதற்கான காரணம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி வீதியை விஸ்தரிப்பதற்காக காணிகள் சுவீகரிக்கப்பட்ட வருடம் யாது;

(ii) சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு நட்டஈடு செலுத்தப்பட்டுள்ளதா;

(iii) ஆமெனில், அந்த நட்டஈடு செலுத்தப்பட்ட வருடம் யாது;

(iv) தற்போது மேலே குறிப்பிட்டவாறு சுவீகரிக்கப்பட்ட அனைத்து காணிகளுக்கும் நட்டஈடு செலுத்தி முடிக்கப்பட்டுள்ளதா;

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5105/ '14

10\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— சுற்றாடல், புதுப்பிக்கத்தக்க சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) இலங்கையின் அநேகமான பிரதேசங்களில் இராட்சத தொட்டாற்சிணுங்கி என்ற பெயரில் அழைக்கப்படும் ஆக்கிரமிப்புத் தாவர இனமொன்று பரவி வருவதை அவர் அறிவாரா?

(ஆ) (i) இலங்கையினுள் இராட்சத தொட்டாற் சிணுங்கி தாவரம் எவ்வாறு பரவியது என்பது கண்டறியப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) தற்போது இராட்சத தொட்டாற் சிணுங்கி தாவரம் அதிகளவில் பரவியுள்ள பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி தாவரம் பரவுவதால் ஏற்படக்கூடியதாக இனங்காணப்பட்டுள்ள பாதகமான தாக்கங்கள் யாவை என்பதையும்;

(iv) இலங்கையினுள் தற்போது பரவி வருகின்ற வேறு ஆக்கிரமிப்புத் தாவர வகைகளின் பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) இராட்சத தொட்டாற்சிணுங்கி தாவரம் பரவுவதை தடுப்பதற்கு எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) இவ்வாறான பாதகமான ஆக்கிரமிப்புத் தாவரங்கள் நாட்டினுள் பரவுவதை தடுப்பதற்கு எடுக்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5144/ '14

11.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) மஹரகம நகரசபையின் கீழ் நிருவகிக்கப்படுகின்ற பொது நூலகங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி நூலகங்களில் தற்போது பொது மக்களுக்காக திறக்கப்பட்டுள்ள நூலகங்கள் அமைந்துள்ள இடங்கள் யாவையென்பதையும்;

(iii) மேற்படி நூலகத்தின் மூலம் வாசிப்பதற்கான வசதிகளை வழங்குதலும் புத்தகங்களை இரவல் கொடுக்கின்றதுமான செயற்பாடு நடைபெறுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மஹரகம நகர சபையின் கீழுள்ள பொது நூலகங்களுக்கு நூலகர்களும் ஏனைய ஊழியர்களும் நியமிக்கப்பட்டுள்ளனரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி ஒவ்வொரு பதவிக்கான சம்பளம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி சம்பளம் செலுத்துவதற்கு நகர சபைக்கு வருடாந்தம் கிடைக்கின்ற நிதி ஏற்பாடு எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) (i) மேற்படி நூலகக் கட்டடங்களிலுள்ள வசதிகள் யாவையென்பதையும்;

(ii) அதன் பராமரிப்புக்காக நகர சபை மாதாந்தம் ஒதுக்கியுள்ள நிதித் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி நூலகங்களுக்கு புதிதாக புத்தகங்கள் வழங்கப்படுகின்றனவா என்பதையும்;

(iv) தற்போது மேற்படி நூலகங்களில் உள்ள நூல்கள் தொடர்பாக மதிப்பாய்வொன்று நடைபெறுகின்றதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5202/ '14

12\.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அரசாங்க சேவையில் ஈடுபட்டுள்ள முஸ்லிம் சமய பக்தர்கள் உம்ரா மற்றும் ஹஜ் யாத்திரைக்காக வெளிநாடு செல்வதற்கு அனுமதி பெற்றுக் கொள்வதற்காக சமர்ப்பிக்கின்ற விண்ணப்பப்படிவத்துடன் முன்வைக்க வேண்டிய ஆவணங்கள் யாவை என்பதையும்;

(ii) ஏற்புடைய நபர் ஒரு ஆசிரியராக இருக்கும் பட்சத்தில், இவருக்கு மேற்படி யாத்திரைக்கு சம்பளத்துடனான லீவு உரித்தாகுமா என்பதையும்;

(iii) உம்ரா யாத்திரை மற்றும் ஹஜ் யாத்திரைக்கு வெளிநாடு செல்பவர்களுக்கு எளிமையான விண்ணப்பப்படிவம் மற்றும், வீசா வழங்கும் முறையியலொன்று உருவாக்கப்பட வேண்டும் என்பதை ஏற்றுக் கொள்வாரா என்பதையும்;

(iv) ஆமெனில், அதற்கான தலையீடு மேற்கொள்ளப்படுமா என்பதையும்;

(v) மேற்படி யாத்திரையில் ஈடுபடுகின்ற அரசாங்க ஊழியர்களுக்கு அனுமதிக்கப்படுகின்ற லீவு நாட்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(vi) மேற்படி லீவு நாட்கள் போதுமானதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5226/ '14

13\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2014.05.27 ஆம் திகதி இரத்மலான, அத்திடிய பிரதேசத்தில் சந்தைக்கு வழங்குவதற்குத் தயாராக வைக்கப்பட்டிருந்த ரூபா 50 கோடிக்கும் அதிகமான பெறுமதியைக்கொண்ட காலாவதியான மருந்துகள் நுகர்வோர் அதிகாரசபையினால் கைப்பற்றப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி மருந்துகள் வைக்கப்பட்டிருந்த களஞ்சியம் எந்த மருந்துக் கம்பனிக்குச் சொந்தமானது என்பதையும்;

(ii) அக்கம்பனியின் பதிவு இலக்கம் மற்றும் பதிவு செய்யப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி மருந்துத் தொகையில் உள்ளடங்கியிருந்த மருந்து வகைகளின் பெயர்கள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) 2014.05.27 ஆம் திகதியளவில் மேற்படி காலாவதியான மருந்துத் தொகையில் ஓரளவு மருந்துகள் சந்தைக்கு வழங்கப்பட்டிருந்ததா என்பதையும்;

(ii) ஆமெனில், அது தொடர்பாக எடுக்கப்பட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) மேலே பெயர் குறிப்பிடப்பட்ட மருந்துக் கம்பனிக்கு எதிராக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5421/ '14

14\.
கௌரவ அஜித் குமார,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளிலிருந்து இன்று வரை பெற்றோலிய இறக்குமதியின் மூலமும் எண்ணெய் சுத்திகரிப்பின் மூலமும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பெற்றுள்ள இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி காலகட்டத்தில் எதிர்பார்க்கப்பட்ட இலாபம் அல்லது நட்டம் எவ்வளவு என்பதையும்;

(iii) இன்றளவில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானதாக உள்ள மூலதனத்தின் அளவு மற்றும் ஒதுக்கத்தின் அளவு எவ்வளவு என்பதையும்;

(iv) மேற்படி நிறுவனத்தில் சேவையாற்றுகின்ற நிரந்தர மற்றும் அமய ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(v) மேற்படி நிறுவனத்தில் ஊழியர் பற்றாக்குறை அல்லது மிகை காணப்படுகின்றதா என்பதையும்;

(vi) குறித்த பணியாட்டொகுதியினருக்காக ஆண்டொன்றில் செலவிடப்படும் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான மிதவையில் திருத்தம் அல்லது நவீனமயப்படுத்தல் மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அதன் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(iii) திருத்தத்தின் பின்னர் மேற்படி மிதவைக்கு பாதிப்பு ஏற்பட்டதா என்பதையும்;

(iv) ஆமெனில், மேற்படி பாதிப்பு எவ்வாறானது என்பதையும்;

(v) மேற்படி பாதிப்பு காரணமாக கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டம் எவ்வளவு என்பதையும்;

(vi) மேற்படி நட்டம் மிதவையை திருத்தியமைத்த நிறுவனத்திலிருந்து அறவிடப்பட்டதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5640/ '14

15\.
கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2015 ஆம் ஆண்டு முதல் அரச பாடசலைகளில் தரம் 06 முதல் தரம் 10 வரையிலான பாடவிதானத்தை மாற்றுவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த புதிய பாடவிதானம் யாதென்பதையும்;

(iii) மேற்படி புதிய பாடவிதானத்திற்கு ஏற்புடையதாக ஆசிரியர்களுக்கு பயிற்சியளித்தல் ஆரம்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி பயிற்சிக்கான காலகட்டம் யாதென்பதையும்;

(vi) பயிற்றுவிக்கப்படுகின்ற ஆசிரியர்களுக்கு ஆசிரியர் கைநூல்களையும், மாணவர்களுக்கு பாடப்புத்தகங்களையும் உரிய காலத்தில் வழங்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vii) மேற்படி பாடப்புத்தகங்ளை அச்சிடுவதற்கு செலவிடப்படும் பணத்தொகை எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# 2015 சனவரி 23, வெள்ளிக்கிழமை
# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2764/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,—(1)

(அ) (i) பெந்தரை மக்களுக்கு நீர் விநியோகிக்கப்படுகின்ற பிரதானமான குழாயொன்றுக்கு ஏற்பட்டிருந்த சேதத்தை நீர் வழங்கல், வடிகாலமைப்பு சபையினால் மூன்று வருடங்களாக கண்டுபிடிக்க முடியாமல் போனதற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நீர்க் குழாய்க்கு சேதம் விளைவித்த தனியார் தொலைபேசிக் கம்பனியிலிருந்து போதியளவு நட்ட ஈட்டினை அறவிடுவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(iii) இதற்கமைய, கிடைக்கின்ற நட்ட ஈட்டுத் தொகையில் ஒரு பகுதியை பிரதேசத்தில் பாதிக்கப்பட்டுள்ள நீர்ப் பாவனையாளர்களுக்கு பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3547/ '13

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையின் தற்போதைய பாராளுமன்றத்தின் பாராளுமன்ற உறுப்பினர்களின் எண்ணிக்கையும்;

(ii) மக்கள் பணிகளை செயலாற்றுவதில் இலகுபடுத்துவதற்காக 2000 ஆம் ஆண்டிலிருந்து நம்பிக்கைப் பொறுப்புக்களை உருவாக்கியுள்ள பாராளுமன்ற உறுப்பினர்களின் பெயர்களையும்;

(iii) மேற்படி நம்பிக்கைப் பொறுப்புக்களின் பெயர்களையும் அவைகள் கூட்டிணைக்கப்பட்ட திகதிகளையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே கூறப்பட்ட நம்பிக்கைப் பொறுப்புக்களுக்காக வரிகள் செலுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(ii) அவ்வாறு இல்லையாயின், வரிகளின் பிரயோகமற்ற விடயங்கள் என்ன என்பதையும்;

(iii) நம்பிக்கைப் பொறுப்புக்களை கூட்டிணைத்ததன் நிமித்தமாக வருமானத்தில் ஏற்பட்டுள்ள ஒட்டுமொத்த இழப்பு என்ன என்பதையும்;

(iv) ஒவ்வொரு நம்பிக்கைப் பொறுப்பினதும் குறித்தக் காட்டப்பட்ட இலக்குகள் தற்போதைய சூழ்நிலையில் அமுல்படுத்தப்படுகின்றனவா என்பதையும்;

(v) மேற்படி நம்பிக்கைப் பொறுப்புகள் தொடர்பில் ஏதாவது துஷ்பிரயோகம் நடைபெறுகிறதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4265/ '13

3.

கௌரவ புத்திக பதிரண,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) தென் அதிவேகப் பாதையை மாத்தறை, கொடகம தொடக்கம் அம்பாந்தோட்டை, மத்தல வரை நீடிப்பதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றதென்பதையும்;

(ii) திஹகொடை, கிரிந்த மற்றும் தெவிநுவர பிரதேச செயலாளர் பிரிவுகளுக்கு மிகவும் அண்மித்ததான தென் அதிவேகப் பாதைக்கு நுழைவிடமாக அப்பரெக்க வீதியை முன்மொழிந்து அளவை நடவடிக்கைகள்கூட மேற்கொள்ளப்பட்டுள்ளன என்பதையும்;

(iii) உத்தேசிக்கப்பட்ட அப்பரெக்க நுழைவுப் பாதையை மாற்றி அதனை கிரிந்த புஹுல்வெல்ல பிரதேச செயலாளர் பிரிவின் வலகந்த பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு திட்டமிடப்பட்டுள்ளது என்பதையும்;

(iv) நுழைவுப்பாதையானது மேற்படி (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றத்திற்கு உள்ளாக்கப்படுமெனில் அதிகளவிலான மக்களுக்கு அனுகூலங்கள் கிடைப்பதற்குள்ள வாய்ப்பு குறைவடையும் என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில், தென் அதிவேகப் பாதைக்கான நுழைவிடத்தை மேற்படி அ (iii) இல் குறிப்பிடப்பட்டுள்ளவாறு மாற்றியமைக்காதிருக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4469/ '13

4.

கௌரவ அனுர திஸாநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) 2010, 2011 மற்றும் 2012 ஆம் ஆண்டுகளில் ஐக்கிய அமைரிக்காவின் இலங்கை தூதரகம் Qorvis Communications எனும் கம்பனியுடன் கொடுக்கல் வாங்கல் மேற்கொண்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொடுக்கல் வாங்கல் இடம்பெற்றுள்ள காலப்பகுதி யாதென்பதையும்;

(iii) மேற்படி கொடுக்கல் வாங்கல் மூலமாக நிறைவேற்றப்பட்டுள்ள பணி அல்லது பணிகள் யாவையென்பதையும்;

(iv) அதன் மூலம் கிடைத்துள்ள நன்மைகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி பணிகளுக்காக மேற்கொள்ளப்பட்டுள்ள கொடுப்பனவுகளின் பெறுமதி யாதென்பதையும்;

(vi) அதற்காக நிதி ஒதுக்கப்பட்ட செலவுத் தலைப்பு யாதென்பதையும்;

(vii) மேற்படி கம்பனிகளுடன் உடன்படிக்கைகள் கைசாத்திடப்பட்டிருப்பின், அந்த உடன்படிக்கைகளை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4487/ '13

5.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— பொதுநிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) அரச கனிஷ்ட ஊழியர்களை பதவியுயர்த்துவதற்காக இறுதியாக 2012 ஆம் ஆண்டிலேயே பரீட்சை நடாத்தப்பட்டதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டு நடைபெற்ற மேற்படி பரீட்சைக்கு தோற்றியவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேற்படி பரீட்சையில் சித்தியடைந்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) சித்தியடைந்தவர்களில் நேர்முகப் பரீட்சைக்கு அழைக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அதற்கேற்ப நியமனம் வழங்கப்பட்டுள்ளவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(v) 2013 ஆம் ஆண்டில் மேற்படி பரீட்சையை நடாத்துதல் தாமதமடைந்துள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4678/ '13

6.

கௌரவ பி. ஹரிசன்,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் புகைத்தல் காரணமாக நாளாந்தம் மற்றும் ஆண்டுதோறும் மரணிப்பவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக யாதென்பதையும்;

(ii) 2013 ஆம் ஆண்டில் புகைத்தல் காரணமாக மரணித்தவர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) புகைத்தல் காரணமாக ஆண்டுதோறும் நோய்வாய்ப்படுவோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iv) அரசாங்கம் புகைத்தல் பொருட்கள் இறக்குமதியின் மூலம் ஈட்டும் வருடாந்த வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் குறிப்பிடுவாரா?

(ஆ) கடந்த ஐந்தாண்டுகளில்,

(i) புகைத்தல் காரணமாக நோய்வாய்ப்பட்டுள்ளோரின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) புகைத்தல் பொருட்கள் இறக்குமதியின் மூலம் அரசாங்கம் ஈட்டியுள்ள வருமானம் யாதென்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) புகைத்தலை குறைப்பதற்காக அரசாங்கம் மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) புகைத்தலினால் ஏற்படும் பாதிப்புக்களைக் காண்பிக்கும் விளம்பரங்களைத் தாங்கிய புகைத்தல் பொருள் பொதிகளை சந்தைக்கு வழங்கும் திகதி யாதென்பதையும்;

(iii) அதற்குத் தடைகள் எவையேனுமிருப்பின், அவை யாவை என்பதையும்;

(iv) அவ்வாறானதொரு புகைத்தல் பொருள் பொதியை அறிமுகம் செய்வதன் மூலம் புகைத்தல் பொருள் பாவனையைக் குறைப்பதற்கான இயலுமை உண்டா என்பதையும்;

(v) ஆமெனின், அது எவ்வாறு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4946/ '14

7.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது கமக்காரர் ஓய்வூதியத் திட்டத்திற்காக பங்களிப்புச் செய்துள்ள விவசாயிகளின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(ii) மேற்படி நபர்களில் தற்போது ஓய்வூதிய நன்மைகளைப் பெறுவதற்கு தகைமை பெற்றுள்ளவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்;

(iii) மேற்படி எண்ணிக்கையில் தற்போது மேற்படி ஓய்வூதியத்தை பெறுகின்றவர்களின் எண்ணிக்கை எத்தனையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5023/ '14

8.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா புகையிரத நிலையத்தின் அபிவிருத்திப் பணிகளை மேற்கொள்ளும் ஒப்பந்த நிறுவனத்தின் பெயர் யாதென்பதையும்;

(ii) குறித்த நிறுவனம் தெரிவு செய்யப்பட்ட அடிப்படை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) அந்த நிறுவனத்தால் மேற்கொள்ளப்படும் மேற்படி புகையிரத நிலையத்தின் அபிவிருத்திக்கான உத்தேச திட்டத்தை சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(ii) குறித்த அபிவிருத்திப் பணிகளுக்காக செலவாகும் பணத் தொகை யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5107/ '14

9

கௌரவ அக்கில விராஜ் காரியவசம்,— தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் நெனோ தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் நெனோ தொழில்நுட்பத்தை மேம்படுத்துவதற்காக ஒதுக்கப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தற்போது உள்நாட்டில் நெனோ தொழில்நுட்பம் பயன்படுத்தப்படுகின்ற கைத்தொழில்கள் அல்லது வேறு துறைகள் யாவை என்பதையும்;

(iv) நெனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தவதிலுள்ள நன்மைகள் யாவை என்பதையும்;

(v) உள்நாட்டு அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்காக இயலுமான எல்லாச் சந்தர்ப்பங்களிலும் நெனோ தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துதல் தொடர்பில் அதிகாரிகளின் கவனத்தைக் கோருவதற்கு நடவடிக்கை மேற்கொள்வாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5205/ '14

10\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) அவுஸ்திரேலியாவின், கென்பராவில் உள்ள இலங்கை உயர் ஸ்தானிகர் அலுவலகத்திற்கு மேலதிகமாக மெல்பன் நகரத்தில் இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகமொன்றும் பேணிவரப்படுகின்றதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகம் எத்தேதியில் திறக்கப்பட்டதென்பதையும்;

(iii) மெல்பன் நகரத்தில் இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகமொன்று திறக்கப்பட்டதன் நோக்கம் யாதென்பதையும்;

(iv) தற்போது மேற்படி அலுவலகத்தின் ஊடாக இலங்கைக்கு கிடைத்துள்ள அனுகூலங்கள் யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) மெல்பனிலுள்ள இலங்கை கொன்சியுலர் நாயகத்தின் அலுவலகத்தில் கொன்சியுலராக செயற்படுபவரின் பெயர் மற்றும் தொழில்சார் தகைமைகள் யாவையென்பதையும்;

(ii) அங்கு பணியாற்றும் ஏனைய உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு உத்தியோகத்தரினதும் பெயர், பதவி, தொழில்சார் தகைமைகள், வழங்கப்பட்டுள்ள பொறுப்புகள் வெவ்வேறாக யாவையென்பதையும்;

(iv) கொன்சியுலர் உள்ளிட்ட மேற்படி உத்தியோகத்தர்களுக்கு அந்தந்த பதவிகளுக்கேற்ப வழங்கப்படுகின்ற சம்பள அளவுகள் யாவையென்பதையும்;

(v) மேற்படி உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்டுள்ள உத்தியோகபூர்வ வாகனங்கள் உள்ளிட்ட மேலதிக வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் யாவையென்பதையும்

(vi) மாதாந்தம் மேற்படி அலுவலகத்திற்காக இலங்கை அரசினால் உறப்படுகின்ற மொத்த செலவுகள் யாவையென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5312/ '14

11\.

கௌரவ அஜித் பீ. பெரேரா,— வெளிநாட்டலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) லக்ஷ்மன் ஹுளுகல்ல என்பவர் இலங்கை வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சுக்குரிய ஒரு பதவியை வகிக்கின்றாரா என்பதையும்;

(ii) ஆமெனில், குறித்த பதவி யாதென்பதையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(அ) (i) இராஜதந்திர அலுவல்கள மற்றும்/ அல்லது வெளிநாட்டலுவல்கள் தொடர்பில் லக்ஷ்மன் ஹுளுகல்ல என்பவருக்கு உள்ள தகைமைகள் யாவை என்பதையும்;

(ii) குறித்த நபர் கொண்டுள்ள க.பொ.த (சாதாரண தர) மற்றும் (உயர் தர) தகைமைகளும் ஏனைய கலை மற்றும் தொழில்சார் தகைமைகளும் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5422/ '14

12.
கௌரவ அஜித் குமார,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குருநாகல் பொது வைத்தியசாலையின் சீ.ரீ. ஸ்கேனர் இயந்திரம் குறிப்பிடத்தக்களவு காலமாக சீர்கெட்டுள்ளதென்பதையும்;

(ii) ஸ்கேனர் இயந்திரம் சீர்கெட்டுள்ளதனால் வைத்தியசாலைக்கு வருகை தருகின்ற நோயாளர்கள் அச்சேவையைப் பெற்றுக் கொள்வதற்காக தனியார் நிறுவனங்களுக்குச் செல்ல வேண்டி நேரிட்டுள்ளதால் பெரும் தொகைப் பணத்தை செலவிட வேண்டி நேரிடுகின்றதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்படி ஸ்கேனர் இயந்திரத்தை திருத்தியமைப்பதற்கு அல்லது புதியதொரு ஸ்கேனர் இயந்திரத்தைப் பொருத்துவதற்கு ஏற்கனவே ஏதேனும் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் என்பதையும்;

(iii) இதற்காக அமைச்சு ஏற்கும் செலவினம் எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5423/ '14

13.
கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— வெகுசன ஊடக, தகவல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய திரைப்படக் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியொன்றுக்கு டீ. கருணாரத்ன என்பவர் நியமிக்கப்பட்டுள்ளாரா என்பதையும்;

(ii) திரைப்படக் கூட்டுத்தாபன சட்டத்தின் பிரகாரம் பணிப்பாளர் சபையில் செயற்பாட்டுப் பணிப்பாளர் பதவியொன்று உள்ளதா என்பதையும்;

(iii) ஆமெனின், இவ்வாறான ஒருவரை நியமிக்க முடியுமா என்பதையும்;

(iv) மேற்படி நபருக்கு செயற்பாட்டுப் பணிப்பாளர் என்ற வகையில் கிடைக்கின்ற கொடுப்பனவுகள் மற்றும் சிறப்புரிமைகள் யாவை என்பதையும்;

(v) இந்நபருக்கு ஒப்படைக்கப்பட்டுள்ள கடமைகள் திருப்தியளிக்கக் கூடிய வகையில் உச்ச அளவில் நிறைவேற்றப்படுகின்றதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5438/ '14

14.
கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தமிழ் மொழி பேசும் பெரும்பாலான மக்கள் வாழும் கல்முனை பிரதேச செயலாளர் பிரிவில் பாண்டிருப்பு மேட்டுவட்டைக் கிராமத்திலுள்ள வீதிகளுக்கருகாமையில் சுனாமியினால் பாதிக்கப்பட்ட சுமார் 75 குடும்பங்கள் மீளக்குடியேறியுள்ளனர் என்பதையும்;

(ii) சுனாமி அனர்த்தம் நிகழ்ந்து சுமார் 10 வருடங்கள் கடந்திருப்பினும், மேற்படி கிராமத்தின் வீதிகள் மறுசீரமைக்கப்படவில்லை என்பதையும்;

(iii) மழை காலத்தில் இக்கிராமத்திற்கு அருகில் ஏற்படும் வெள்ளப்பெருக்கு மற்றும் வீதிகளின் சிதைவுற்ற நிலைமைகள் காரணமாக தமது போக்குவரத்து வசதிகளை ஏற்பாடு செய்துகொள்கின்ற போது இக்கிராமவாசிகள் சிரமங்களை எதிர்கொள்கின்றனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேலே பெயர் குறிப்பிட்ட கிராம மக்களின் போக்குவரத்து வசதிகளை மேம்படுத்துவதற்காக இங்குள்ள வீதிகளை மறுசீரமைக்க நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5567/ '14

15.

கௌரவ நிரோஷன் பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புத்தளம் மாவட்டத்தில் கீரியன்கள்ளி - ஆண்டிகம வீதியை நிர்மாணிப்பதற்கு மதிப்பீடு செய்யப்பட்ட நிதித் தொகை யாது;

(ii) மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ள நிறுவனம் யாது;

(iii) மேற்குறிப்பிட்ட நிறுவனத்துக்கு நிர்மாணப் பணிகள் ஒப்படைக்கப்படுகின்ற போது முறைசார்ந்த கேள்விப்பத்திர நடைமுறை பின்பற்றப்பட்டுள்ளதா

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்ட வீதியின் நிர்மாணப் பணிகள் இடைநிறுத்தப்பட்டமையால், மக்கள் பாரிய அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர் என்பதை அறிவாரா;

(ii) மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகள் மீண்டும் ஆரம்பிக்கப்படும் திகதி யாது;

(iii) மேற்படி வீதியின் நிர்மாணப் பணிகள் நீண்டகாலமாக நிறுத்தப்பட்டிருந்தமையால் போக்குவரத்து நடவடிக்கைகளின் போது பாதிப்புக்கு உள்ளாகியுள்ள மக்களுக்கு நிவாரணங்களை வழங்க நடவடிக்கை மேற்கொள்வாரா

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# எழுத்துமூல விடைக்கான வினாக்கள்
## (2015 சனவரி 23, வெள்ளிக்கிழமை)

2905/ '12

1.

கௌரவ ரவி கருணாநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (5)

(அ) (i) சுதந்திரம் பெற்றதிலிருந்து இற்றைவரை இலங்கையை மாறி மாறி ஆட்சி செய்துகொண்டு வருகின்ற அரசாங்கங்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) மேலே (i) இல் குறிப்பிடப்படும் ஒவ்வொரு அரசாங்கத்தினதும் அமைச்சரவையின் அங்கத்தவர்களின் எண்ணிக்கை தனித்தனியாக ஆரம்பம் முதல் முடிவு வரை எத்தனை என்பதையும்;

(iii) 1985, 1995, 2005 மற்றும் 2012ஆம் ஆண்டுகளில் ஒவ்வொரு அமைச்சருக்குமான சராசரிச் செலவு தனித்தனியாக எவ்வளவு என்பதையும்

அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) (i) மாகாண சபைச் சட்டத்தில் மேற்கொள்ளப்பட்டுள்ளவாறு அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கை சட்டத்தின் மூலம் ஏன் மட்டுப்படுத்தப்படவில்லை என்பதையும்;

(ii) அமைச்சரவையிலுள்ள அமைச்சர்களின் எண்ணிக்கையின் அதிகரிப்பு நாட்டுக்கு உதவியுள்ளதா அல்லது நாட்டின் மீது மேலும் சுமையைச் சுமத்தியுள்ளதா என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

---

# 2015 பெப்புருவரி 05, வியாழக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2765/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உயர்தர வகுப்புகளுக்காக ஒரு தேசிய பாடசாலையிலிருந்து இன்னொரு தேசிய பாடசாலைக்குச் செல்வதை தடுக்கின்ற வகையில் கல்வி அமைச்சினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையின் காரணமாக பல ஏழைப்பிள்ளைகளுக்கு சிரமங்கள் ஏற்பட்டுள்ளதென்பதையும்,

(ii) கொழும்பு றோயல் கல்லூரி மற்றும் கொட்டாஞ்சேனை மத்திய மகா வித்தியாலயம் என்பன "தேசிய பாடசாலைகள்" என்றழைக்கப்பட்டாலும், அவ்விரு பாடசாலைகளிலுமுள்ள வசதிகளுக்கிடையில் பாரிய வித்தியாசம் காணப்படுகின்றன என்பதையும்

அவர் ஏற்றுக்கொள்வாரா?

(ஆ) ஆமெனில் மேற்படி சுற்றறிக்கையை உடனடியாக நீக்குவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

3548/ '13

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) 2009 ஆம் ஆண்டிலிருந்து 2013 ஆம் ஆண்டு வரை,

(i) திறைசேரி முறிகளை அல்லது திறைசேரி உண்டியல்களை வாங்கிய கம்பனிகள், நிறுவனங்கள் அல்லது கைத்தொழில் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்;

(ii) மேற்படி கடன் கருவிகள் விற்கப்பட்ட விகிதம், காலப்பகுதி என்ன என்பதையும்;

(iii) திறைசேரி உண்டியல்களை அல்லது திறைசேரி முறிகளை வாங்குபவர்களுக்கு நாணயமாற்றத்தின் உயர்வு காரணமாக இழப்பு ஏற்படும்பொழுது அதை அரசாங்கம் தாங்கிக்கொள்ளும் எனக்கூறி ஏதாவது உத்தரவாதம் வழங்கப்பட்டள்ளதா என்பதையும்;

(iv) அரசாங்கக் கடன் கருவிகளை வாங்கிய ஐந்து பெரிய முதலீட்டாளர்கள் அல்லது கைத்தொழில் முதலீட்டாளர்கள் யார் என்பதையும்;

(v) அரசாங்கத்தால் குறுங்காலம், இடைக்காலம், நீண்ட காலம் என்ற அடிப்படையில் விற்கப்பட்ட மொத்தக் கடன் கருவிகளை, அவற்றின் பெறுமானம் மற்றும் காலப்பகுதியை என்பவற்றுடனும்,

வருடாந்த அடிப்படையில் அவர் சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4080/ '13

3.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— பெற்றோலியக் கைத்தொழில்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) சப்புகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்திற்கு அவசியமான மசகெண்ணெய் உரிய நேரத்தில் இறக்குமதி செய்யப்படாமை காரணமாக 2013.05.14 ஆந் திகதியில் இருந்து எண்ணெய் சுத்திகரிப்பை நிறுத்திவிட நேர்ந்துள்ளதென்பதை அறிவாரா;

(ii) இவ்வாறு சுத்திகரித்தலை நிறுத்திவிட நேர்ந்த 2013.05.14 ஆந் திகதிக்கு முன்னர் இறுதியாக மசகெண்ணெய் இறக்குமதி செய்யப்பட்ட திகதி யாது;

(iii) சப்புகஸ்கந்த சுத்திகரிப்பு வளவிலுள்ள, மசகெண்ணெய் களஞ்சியப்படுத்தக்கூடிய தாங்கிகளின் எண்ணிக்கை எவ்வளவு;

(iv) மேற்படி தாங்கிகளில் மசகெண்ணெய் களஞ்சியப்படுத்தக்கூடிய கொள்ளளவு எவ்வளவு;

(vi) மேற்படி உச்சஅளவிலான கொள்ளளவு கொண்ட மசகெண்ணெய் சுத்திகரிப்புக்காக எடுக்கின்ற நாட்களின் எண்ணிக்கை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி சுத்திகரிப்பு நிலையத்தில் மசகெண்ணெய் சுத்திகரிப்பினை நிறுத்திவிட வேண்டிய நிலையேற்படும்வரை மசகெண்ணெய் இறக்குமதி செய்ய முடியாதிருந்தமைக்கான காரணம் யாது;

(ii) மேற்படி தாமதத்திற்கு பொறுப்புக்கூற வேண்டிவர்களுக்கு எதிராக இதுவரை மேற்கொண்டுள்ள நடவடிக்கைகள் யாவை;

(iii) எண்ணெய் சுத்திகரித்தல் நிறுத்தப்பட்டமையால் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு நாளொன்றுக்கு விளைந்த நட்டம் எவ்வளவு;

(iv) இனிவருங்காலங்களில் இத்தகைய நட்டத்தை தடுப்பதற்காக எடுத்துள்ள நடவடிக்கைகள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4530/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உடலூனமுற்ற இராணுவ வீரர்களை சுயதொழில்களுக்கு ஆற்றுப்படுத்துவதற்காக "ரணவிரு திவி நெகும" எனும் விசேட கடன் திட்டமொன்று ஆரம்பிக்கப்பட்டதென்பதை அறிவாரா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி கடன் திட்டத்தின் கீழ் கடன் வழங்கப்படும் சுயதொழில்கள் யாவையென்பதையும்;

(iii) சுயதொழிலொன்றை ஆரம்பிப்பதற்காக வழங்கப்படுகின்ற குறைந்தபட்ச மற்றும் கூடியபட்ச கடன் தொகை யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) "ரணவிரு திவி நெகும" கடன் திட்டத்தின் கீழ் கடன் பெறுவதற்காக பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்;

(ii) அதற்காக நிறைவேற்ற வேண்டிய பிணை, நிபந்தனைகள் மற்றும் கடன் தொகைக்காக அறவிடப்படும் வட்டி வீதம் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4582/ '13

5.

கௌரவ அநுர திசாநாயக்க,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) குடிநீர் மாசடைவதற்கு எதிராக வெலிவேரிய ரத்துபஸ்வல மக்கள் நடாத்திய ஆர்ப்பாட்டத்தின்போது துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்ளப்பட்டதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி துப்பாக்கிப் பிரயோகத்தின் காரணமாக காயமடைந்தவர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) காயமடைந்தவர்களின் பெயர்கள், முகவரிகள் மற்றும் உயிரிழந்தவர்களின் பெயர்கள் மற்றும் இறுதியாக வசித்து வந்த முகவரிகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி துப்பாக்கிப் பிரயோகம் தொடர்பாக விசாரணை நடாத்தப்பட்டதா என்பதையும்;

(v) அதற்கமைய துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொள்வதற்கு கட்டளையிட்ட அதிகாரிகள் மற்றும் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்டவர்கள் இனங்காணப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(vi) ஆமெனில், இவர்கள் யாவர் என்பதையும்;

(vii) இவர்களுக்கு தண்டனை வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4683/ '13

6.

கௌரவ பீ. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கைக்கு இறக்குமதி செய்யப்படும் விவசாய இரசாயனப் பொருட்களின் (பீடை கொல்லிகள் மற்றும் களை கொல்லிகள்) எண்ணிக்கை யாது;

(ii) மேற்படி பீடை கொல்லிகளை இறக்குமதி செய்யும் நிறுவனங்களின் பெயர்கள் யாவை;

(iii) 2013ஆம் ஆண்டில் இறக்குமதி செய்யப்பட்ட கிருமிநாசினிகள் மற்றும் களை கொல்லிகளின் அளவு லீற்றரில் யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) 1995ஆம் ஆண்டு முதல் 2013ஆம் ஆண்டு வரையிலான காலப் பகுதியினுள் இறக்குமதி செய்யப்பட்ட பீடை கொல்லிகளில் தற்போது தடை செய்யப்பட்டுள்ள எண்ணிக்கை;

(ii) தடை செய்யப்பட்ட பீடை கொல்லிகளின் பெயர்கள்;

(iii) அவ்வாறு தடை செய்யப்பட்ட பீடை கொல்லிகளை இறக்குமதி செய்த கம்பனிகளின் பெயர்ப் பட்டியல்;

ஆகியவற்றை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) பீடை கொல்லியொன்றை தடை செய்வதற்காக பின்பற்றப்படும் முறையியலை குறிப்பிடுவாரா;

(ii) இதற்கு அமைச்சரவை அங்கீகாரம் தேவைப்படுகின்றதா;

(iii) பீடை கொல்லிகளை தடை செய்தல் தொடர்பில் வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்படுகின்றதா;

(iv) 2013ஆம் ஆண்டில் கமத்தொழில் அமைச்சரினால் தடை செய்யப்பட்ட பீடைகொல்லி வகைகளின் எண்ணிக்கை யாது;

(v) இது தொடர்பில் வர்த்தமானி அறிவித்தல் வெளியிடப்பட்டிருப்பின், அதன் திகதி யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5020/ '14

7\.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கம்பஹா நகரில் பிரதான வீதி, சிரிகுறுச வீதி மற்றும் மங்கள வீதி ஆகிய ஒவ்வொரு பாதையையும் விஸ்தரிப்பதற்காக இறுதியாக காணிகள் சுவீகரிக்கப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை;

(ii) அவ்வாறு சுவீகரிக்கப்பட்ட காணிகளுக்கு தற்போது நட்டஈடு செலுத்தப்பட்டிருப்பின், அந்த ஒவ்வொரு வீதி தொடர்பாகவும் நட்டஈடு செலுத்தப்பட்ட ஆண்டுகள் வெவ்வேறாக யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி வீதிகளின் அபிவிருத்திப் பணிகளுக்காக சுவீகரிக்கப்பட்ட சகல காணிகளும் பௌதீக ரீதியில் பயணிகளின் பயன்பாட்டுக்கு பயன்படுத்தப்பட்டுள்ளதா;

(ii) மேற்படி வீதிகளின் அபிவிருத்திக்காக சுவீகரிக்கப்பட்டுள்ள போதிலும், இதுவரை மக்களின் பயன்பாட்டுக்காக பயன்படுத்தப்படாத காணிகள் உள்ளனவா;

(iii) ஆமெனில், அத்தகைய காணிகள் உள்ள பாதைகள் யாவை

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5106/ '14

8\.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கையில் சாதாரண பாடசாலைக் கல்வி தொடர்பிலான ஆய்வுப் பணிகள் தொடர்பாக செயலாற்றுவதற்கு தேசிய கல்வி ஆய்வுச் சபையொன்று நிறுவப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆம் எனின், அதில் அங்கத்துவம் வகிப்பவர்கள் யாவரென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014 ஆம் ஆண்டுக்காக கல்வி ஆய்வு நடவடிக்கைகளுக்காக ஒதுக்கப்பட்டுள்ள நிதி ஏற்பாட்டுத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாண்டில் நிறைவு செய்யப்பட்டுள்ள பிரதானமான கல்வி ஆய்வுக் கருத்திட்டங்கள் யாவை என்பதையும்;

(iii) இறுதியாக கல்வி ஆய்வரங்கொன்று (Symposium) நடத்தப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iv) கல்வி ஆய்வுகளுக்கு தொழில்சார் நிபுணத்துவ புலமைவாய்ந்தவர்களை ஊக்குவிப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5204/ '14

9.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— நிதி திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தேசிய சேமிப்பு வங்கியின் ஊழியர்கள் சிலருக்கு 2013.07.01 ஆம் திகதி முதல் அமுலுக்கு வரும் வகையில் 111-11 தரத்திற்கு பதவி உயர்வு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி பதவி உயர்வு பெற்றவர்களின் பெயர்ப் பட்டியலொன்றை சபையில் சமர்ப்பிப்பாரா என்பதையும்;

(iii) மேற்படி பதவி உயர்வை வழங்கும் போது பதவி உயர்வு பெறவேண்டிய சிலர் கைவிடப்பட்டுள்ளனர் என்பதை அறிவாரா என்பதையும்;

(iv) குறித்த திகதிக்கு முன்னர் ஓய்வுபெற்ற ஊழியர்கள் சிலரும் மேற்படி பதவி உயர்வை வழங்குவதற்கு ஏற்புடையவர்களாக்கிக் கொள்ளப்பட்டுள்ளார்களா என்பதையும்;

(v) மேலே (iv) இற்கு அமைய பதவி உயர்வு வழங்குவதற்கான இயலுமை இல்லையென்பதை அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5207/ '14

10.

கௌரவ (அல் ஹாஜ்) ஏ.எச். எம். அஸ்வர்,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) முல்லைத்தீவு, மாந்தை கிழக்கு பிரதேச செயலாளர் ஆளுகைப் பிரதேசத்தின், வன்னிவிலாங்குளம், பாலைபானி, கொம்புவைத்தகுளம் ஆகிய கிராமங்களில் வதியும் நூற்றுக்கும் அதிகமான குடும்பங்கள் பயன்படுத்துகின்ற சுமார் 11.05 கிலோ மீற்றர் நீளமான பிரதான வீதியின் இருபுறங்களிலும் காடு படர்ந்து பயணிக்க முடியாத பயங்கரமான நிலை ஏற்பட்டுள்ளதென்பதை அவர் அறிவாரா?

(ஆ) ஆமெனில், மேற்படி பிரதான வீதியை மீண்டும் பயன்படுத்தக்கூடிய விதத்தில் புனரமைத்துத் தருவதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5249/ '14

11.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்ளூராட்சித் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக ஆணைக்குழுவொன்று நியமிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி ஆணைக்குழு நியமிக்கப்பட்ட திகதி யாதென்பதையும்;

(iii) மேற்படி ஆணைக்குழுவின் அங்கத்தவர்களது பெயர்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) உள்ளூராட்சித் தொகுதிகளின் எல்லைகளை நிர்ணயிப்பதற்காக நியமிக்கப்பட்ட ஆணைக்குழுவின் அறிக்கையைத் தயாரிக்கும்போது அடிப்படையாகக் கொள்ளப்பட்ட விடயங்கள் யாவை என்பதையும்;

(ii) தற்போது குறித்த அறிக்கை தயாரிக்கப்பட்டு முடிவடைந்துள்ளதா அல்லது சமர்ப்பிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iii) இது வரை குறித்த அறிக்கை சமர்ப்பிக்கப்படவில்லையெனின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி அறிக்கையைத் தயாரிக்கும்போது பிரதான அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் பெறப்பட்டுள்ளனவா என்பதையும்;

(v) ஆமெனில், அதற்காக பயன்படுத்தப்பட்ட முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) (i) மேலே குறிப்பிடப்பட்ட எல்லை நிர்ணயம் நிறைவுபெற்றிருப்பின், அது தொடர்பாக பொதுமக்களுக்கு விழிப்புணர்வூட்டும் திகதி யாதென்பதையும்;

(ii) அதற்காக மேற்கொள்ளப்படும் நடவடிக்கை யாதென்பதையும்;

(iii) மேற்படி அறிக்கை தேர்தல் ஆணையாளர் மற்றும் ஏனைய அரசியல் கட்சிகளுக்கு வழங்கப்படும் திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5313/ '14

12.

கௌரவ அஜித் பீ. பெரேரா,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தெற்கு அதிவேகப் பாதையிலிருந்து களுத்துறை - ஹொரணை நெடுஞ்சாலைக்கு ஒரு உட்பிரவேசப் பாதையை வழங்குவதற்காக இயலுமை காணப்படுகின்றதா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அலுவல்கள் பற்றிய ஆலோசனைக் குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்ட 3619 ஆம் இலக்க பிரேரணையின் பிரகாரம் அறிவிக்கப்பட்டுள்ளவாறு இடைமாறலொன்றை நிர்மாணிப்பது தொடர்பில் முழுமையான ஆய்வொன்று மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) இன்றேல், இதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5520/ '14

13.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— சுகாதார அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இந்நாட்டில் தயாரிக்கப்படும் திறிபோஷாவை இலவசமாகப் பெற்றுக் கொள்பவர்கள் யார்;

(ii) இவர்களுக்கு மாதாந்தம் வழங்கப்படும் திறிபோஷா பக்கெற்றுகளின் எண்ணிக்கை யாது;

(iii) திறிபோஷா பெற்றுக் கொள்பவர்களின் திறிபோஷா தேவைப்பாட்டை இனம்காண்பதையும், அவற்றை விநியோகிப்பதையும் மேற்கொள்ளும் பிரதேச நிறுவனங்கள் யாவை;

(iv) திறிபோஷா நிகழ்ச்சித்திட்டத்தின் மேற்பார்வை மற்றும் முகாமைத்துவத்தை மேற்கொள்ளும் நிறுவனம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) வருடாந்த திறிபோஷா உற்பத்தியானது தற்போது உள்ள கேள்வியை நிறைவு செய்வதற்குப் போதியதாக உள்ளதா;

(ii) 2012, 2013 மற்றும் 2014 ஆம் ஆண்டுகளில் உற்பத்தி செய்யப்பட்டுள்ள திறிபோஷாவின் அளவு வருடாந்தம் வெவ்வேறாக யாது;

(iii) திறிபோஷா நிகழ்ச்சித்திட்டத்திற்கு வருடாந்தம் செலவிடப்படும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) (i) திறிபோஷா உற்பத்திக்குத் தேவையான சோயா போஞ்சி மற்றும் சோளத்தை உள்நாட்டில் உற்பத்தி செய்வதற்கு விவசாயிகளுக்கு நிவாரணங்கள் வழங்கப்படுகின்றதா;

(ii) ஆமெனில், மேற்படி நிவாரணங்கள் யாவை;

(iii) சோயா போஞ்சி, சோளம் ஆகியவற்றைத் தவிர திறிபோஷா உற்பத்திக்காக பயன்படுத்தப்படும் ஏனைய மூலப்பொருட்கள் யாவை;

(iv) மேற்படி மூலப் பொருட்கள் உள்நாட்டிலிருந்து பெறப்படுகின்றதா;

(v) இன்றேல், இவை பெற்றுக்கொள்ளப்படும் விதம் யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5641/ '14

14.

கௌரவ தலதா அத்துகோரல,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில்நுட்பவியல் என்ற பெயரில் க.பொ.த. (உத) தொடர்பாக புதியதொரு பாடத்துறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், அந்த புதிய பாடத்துறையை கற்கின்ற முதலாவது மாணவர் குழு க.பொ.த. (உயர் தர) பரீட்சைக்குத் தோற்றும் ஆண்டு யாதென்பதையும்;

(iii) தற்போது மேற்படி பாடத்துறையின் கீழ் பிரதானமான பாடங்களுக்கான பாடவிதானங்களும் பாடநெறிகளும் தயாரித்து முடிக்கப்பட்டுள்ளதா என்பதையும்;

(iv) ஆமெனில், அத்திகதி யாதென்பதையும்;

(v) மேற்படி பாடங்களைக் கற்பிக்கின்ற ஆசிரியர்களுக்கு உரிய பயிற்சிகளை வழங்குதல் முடிவடைந்துள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) குருணாகல் மாவட்டம் தவிர்ந்த நாட்டின் ஏனைய பிரதேசங்களில் தற்போது தொழில்நுட்பவியல் பாடத்துறை கற்பிக்கப்படுகின்ற பாடசாலைகளின் பெயர்களை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5648/ '14

15.

கௌரவ கயந்த கருணாதிலக,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளை கவர்ந்துள்ள மாது கங்கையில் அமைந்திருக்கின்ற மாதூவ தீவுக்கு பிரவேசிப்பதற்காகவுள்ள சுமார் 30 வருடங்கள் பழமைவாய்ந்த பழைய பாலத்தின் பக்கக் கட்டுகள் உக்கிப் போயுள்ளதோடு சில இடங்கள் கீழிறங்கி சேதமடைந்துள்ளது என்பதையும்;

(ii) மேற்படி தீவில் வசிக்கின்ற சுமார் 220 குடும்பங்களைச் சேர்ந்த மக்களின் பிரவேசப் பாதையும் மேற்படி பலத்தினூடாகவே அமைந்துள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி பாலம் உக்கிப்போய் பயன்படுத்த முடியாத நிலைக்கு உள்ளாவதற்கு முன்னர் திருத்தியமைப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 பெப்புருவரி 06, வெள்ளிக்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2766/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கல்வியியற் கல்லூரிகளின் பயிலுனர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் போது ஏற்படும் தாமதத்திற்கான காரணங்கள் யாவையென்பதையும்;

(ii) மேற்படி நியமனங்களை வழங்குவதற்காக, தற்போதுள்ள ஆசிரியர் வெற்றிடங்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(iii) குறிப்பிட்ட வெற்றிடங்கள் துரிதமாக நிரப்பப்படாமையினால் கல்வியியல் கல்லூரிகளின் பயிலுனர்களுக்கும் அதேபோன்று ஆசிரியர் பற்றாக்குறையினால் பாதிக்கப்பட்டுள்ள மாணவர்களுக்கும் பெரும் பாதிப்பு ஏற்படுகின்றதென்பதை அவர் ஏற்றுக்கொள்வாரா என்பதையும்;

(iv) அவ்வாறாயின், குறிப்பிட்ட ஆசிரியர் வெற்றிடங்களை நிரப்ப உடனடியாக நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பரா?

(ஆ) இன்றேல், ஏன்?

3562/ '13

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 மற்றும் 2013ஆம் ஆண்டுகளுக்கான துறைசார் நிபுணர், ஆலோசகர் அல்லது இவ்வகையான வேறு அதிகாரி எவரேனும் கல்வி அமைச்சில் அல்லது அவ்வமைச்சின் கீழுள்ள வேறு ஏதேனும் நிறுவனத்தில்/ அலுவலகத்தில் நியமிக்கப்பட்டனரா என்பதையும்;

(ii) அவ்வாறாயின், அவ்வாறு நியமிக்கப்பட்டவர்களின் பெயர்கள் மற்றும் அவர்கள் எப்போதிருந்து நியமிக்கப்பட்டனர் என்பதையும்;

(iii) அவர்களின் நியமனங்களின் நோக்கம்;

(iv) ஒரு மாதத்திற்கு அவர்களுக்காக ஏற்படும் மொத்த செலவு ஆகியவற்றையும்

அவர் கூறுவாரா?

(ஆ) (i) மேலே (அ)(i) இன்படி 2009 ஆம் ஆண்டு தொடக்கம் 2011ஆம் ஆண்டு வரை ஏதேனும் நியமனம் வழங்கப்பட்டதா என்பதையும்;

(ii) அவர்கள் இப்போதும் பணிபுரிகின்றார்களா என்பதையும்;

(iii) அவ்வாறாயின், அவர்களை நியமிப்பதற்கு கருத்திற் கொள்ளப்பட்ட தொழில்சார் தகுதிகள் அல்லது வேறு தகவுதிறன்கள் யாவை என்பதையும்

அவர் கூறுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

4427/ '13

3\.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— கூட்டுறவு, உள்நாட்டு வர்த்தக அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஆம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 31 ஆம் திகதி கொழும்பு வொக்ஸோல் வீதியில் அமைந்துள்ள சதொச செயலகத்தில் 7 ஆம் மாடியில் ஏற்பட்ட தீ விபத்து பற்றி மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் அறிக்கையொன்று உள்ளதா என்பதையும்;

(ii) மேற்படி அறிக்கையின் படி தீ விபத்து ஏற்படுவதற்குரிய காரணம் யாதென்பதையும்;

(iii) தீயினால் அழிந்த ஆவணங்களின் அளவு பற்றி கணிப்பிடப்படுள்ளதா என்பதையும்;

(iv) மேற்படி தீ விபத்து காரணமாக ஏற்பட்ட நட்டம் எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4474/ '13

4\.

கௌரவ புத்திக பத்திரன,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை புகையிரதத் திணைக்களத்தின் போக்குவரத்து உப திணைக்களத்துக்கு புகையிரதப் பணி உதவியாளர், துப்பரவு ஏற்பாட்டுத் தொழிலாளர், மற்றும் அலுவலகத் தொழிலாளர் ஆகிய பதவிகளுக்காக 200905.15 ஆம் திகதி மற்றும் 2009.11.17 ஆம் திகதிய நியமனக் கடிதங்கள் மூலம் சிலர் ஆட்சேர்க்கப்பட்டுள்ளனர் என்பதையும்;

(ii) இதுவரை இவர்களின் சேவை நிரந்தரமாக்கப்படவில்லை என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) மேற்குறிப்பிட்டவாறு ஆட்சேர்க்கப்பட்ட ஊழியர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) இவர்கள் நிரந்தரமாக்கப்படுவார்களாயின் அத்திகதி யாதென்பதையும்;

(iii) இதற்காக கடைப்பிடிக்கப்படும் முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4658/ '13

5\.

கௌரவ சுஜீவ சேனசிங்ஹ,— தாவரவியல் பூங்காக்கள், பொதுப் பொழுதுபோக்கு அலுவல்கள் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொதுநலவாய நாடுகளின் தலைவர்களது மாநாட்டுக்கு சமாந்திரமாக பத்தரமுல்லை கிராமியக் கலைகள் நிலையம் அமைந்துள்ள வளவில் மிருகக்காட்சிசாலையொன்று நிர்மாணிக்கப்பட்டதா என்பதையும்;

(ii) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட விலங்குகள் பெற்றுக் கொள்ளப்பட்ட நிறுவனம் யாது என்பதையும்;

(iii) மேற்படி மிருகக் காட்சிசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்ட விலங்கு வகைகள் யாவை என்பதையும்;

(iv) மேற்படி ஒவ்வொரு விலங்கு வகை மற்றும் அவ் எண்ணிக்கைகள் தனித்தனியே யாவையென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி மிருகக்காட்சிசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டதன் பின்னர்,

(i) உயிரிழந்த விலங்குகளின் எண்ணிக்கை;

(ii) பறந்து சென்றுள்ள பறவைகளின் எண்ணிக்கை;

ஒவ்வொரு இனத்துக்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

4684/ '13

6.

கௌரவ பீ. ஹரிசன்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஐந்து வருட காலப்பகுதியினுள், உர மானிய நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் ஒரு ஹெக்டெயார் வயலில் பயிர்ச் செய்கைக்காக வழங்கப்பட்ட உரத்தின் அளவு வருடாந்த ரீதியில் வெவ்வேறாக எவ்வளவு;

(ii) கடந்த ஐந்து வருட காலப் பகுதியினுள் ஒரு ஹெக்டெயார் வயலுக்கு உர மானியம் வழங்குவதற்காக வருடாந்தம் செலவழிக்கப்பட்ட பணத்தொகை வெவ்வேறாக யாது;

(iii) உர மானியத்தின் கீழ் வடமத்திய மாகாணத்தில் ஒரு ஹெக்டெயார் வயலில் பயிரிடுவதற்கு செலவாகும் மொத்த பணத்தொகை யாது;

(iv) மேற்படி ஒரு ஹெக்டெயார் வயலிலிருந்து எத்தனை கிலோ நெல் விளைச்சல் பெறப்படுகின்றது;

(v) மேற்படி விளைச்சல் ரூபா 35 வீதம் மற்றும் ரூபா 32 வீதம் விற்பனை செய்யப்பட்டிருப்பின் இதிலிருந்து பெறப்படும் வருமானம் வெவ்வேறாக யாது;

(vi) மேற்படி வருமானத்திலிருந்து செலவினைக் கழித்ததன் பின்னர் கிடைக்கும் இலாபம் வெவ்வேறாக யாது

என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) இரசாயன உரம் இடப்படாது பயிரிடப்பட்ட ஒரு ஹெக்டெயார் வயலிலிருந்து பெறப்படும் விளைச்சல் யாது;

(ii) மேற்படி விளைச்சலை ரூபா 32 அல்லது ரூபா 35 வீதம் விற்பனை செய்கின்றபோது பெறப்படும் வருமானம் யாது;

(iii) அனைத்து செலவுகளையும் கழித்ததன் பின்னர், மேற்படி ஒரு ஹெக்டெயார் வயலிலிருந்து விவசாயி ஒருவருக்கு மீதமாகும் பணத்தொகை யாது

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5021/ '14

7.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கிராம அடிப்படையில் 'ஜன சபா' வேலைத்திட்டம் நடைமுறையில் உள்ளதா;

(ii) அவ்வாறு இல்லையேல், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) கிராம மட்டத்தில் மேற்கொள்ளப்பட வேண்டிய அபிவிருத்திப் பணிகளின் முன்னுரிமையை இனங்காண்பதற்காக முறைசார்ந்த செயன்முறையொன்று தயாரிக்கப்பட்டுள்ளதா;

(ii) ஆமெனில், அதனை இச்சபைக்குச் சமர்ப்பிப்பாரா;

(iii) முன்னுரிமையை இனங்காண்பதற்கு முறைசார்ந்த செயன்முறையொன்று தயாரிக்கப்படவில்லையெனில், அதற்கான காரணங்கள் யாவை

என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5310/ '14

8.

கௌரவ அஜித் பி. பெரேரா,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒரு கிலோகிராம் திரவ இறப்பர் பாலின் சந்தை விலை பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ளது என்பதையும்;

(ii) திரவ இறப்பர் பாலின் விலை குறைவடைவதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2014.01.01 ஆம் திகதி முதல் 2014.05.31 ஆம் திகதி வரையில் இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட இறப்பர் பாலின் அளவு யாது என்பதையும்;

(ii) இறப்பர் பாலுக்கு அதிக விலையை நிர்ணயிப்பதற்காக தற்போது எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(iii) இது தொடர்பில் எதிர்காலத்தில் மேற்கொள்வதற்கு எதிர்பார்க்கப்படும் நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5338/ '14

9.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— தொழில்நுட்பம், ஆராய்ச்சி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2012 நவம்பர் மாதம் 27 ஆம் திகதி விண்ணில் செலுத்தப்பட்ட சுப்ரீட் செட் 1 செய்மதி தொடர்பில் இலங்கைக்கு உள்ள உரிமை யாதென்பதையும்;

(ii) மேற்படி செய்மதி மூலம் இலங்கைக்கு கிடைக்கும் அனுகூலங்கள் யாவை என்பதையும்;

(iii) தற்போது மேற்படி செய்மதியின் இயங்குநிலை மற்றும் முன்னேற்றம் யாதென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) சுப்றீட் செட் 1 செய்மதி விண்வெளி கருத்திட்டத்திற்கு செலவிடப்பட்ட மொத்த பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி செலவினத்தில் சீனாவின் நிதியுதவியாக பெற்றுக்கொள்ளப்பட்ட பணத் தொகை மற்றும் இலங்கை ஏற்ற பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(iii) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் இரண்டாம் கட்டமாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள பல்லேகெலே முதலீட்டு வலயத்தில் விண்வெளித்தளம் (Teleports) மற்றும் விண்வெளி விஞ்ஞான பீடத்தை நிர்மாணித்தல் பூர்த்தியடைந்துள்ளதா என்பதையும்;

(iv) இதற்கென செலவிடப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(v) தற்போது மேற்படி கருத்திட்டத்தின் மூன்றாம் கட்ட பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்;

(vi) இதன் செயற்பாடு மற்றும் செலவிடப்படவுள்ள பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(vii) மூன்றாம் கட்டத்திற்குரிய சுப்றீட் செட் 1 செய்மதியை விண்ணில் செலுத்தத் திட்டமிட்டுள்ள திகதி யாதென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5350/ '14

10.

கௌரவ அனோமா கமகே,— கைத்தொழில், வாணிப அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) நாடு முழுவதிலும் "கைத்தொழில்பேட்டை" என்ற பெயரில் பேணிவரப்படுகின்ற இடங்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி இடங்கள் ஏதேனும் விடேச துறையொன்று தொடர்பாக ஆரம்பிக்கப்பட்டுள்ளனவா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) மேற்படி ஒவ்வொரு கைத்தொழில் பேட்டையும், ஆரம்பிக்கப்பட்டுள்ள இடம் மற்றும் அவற்றின் மூலம் மேற்கொள்ளப்படுகின்ற நடவடிக்கைகள் யாவை என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) புத்தள கைத்தொழில் பேட்டை ஆரம்பிக்கப்பட்ட திகதி யாது என்பதையும்;

(ii) இதனை நிர்மாணிப்பதற்காக அரசாங்கம் செலவிட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iii) தற்போது அங்கு மேற்கொள்ளப்பட்டு வருகின்ற கைத்தொழில்கள்/ உற்பத்திகள் யாவை என்பதையும்;

(iv) தற்போது அங்கு சேவையாற்றுகின்ற அரசாங்க அல்லது வேறு துறைகளைச் சேர்ந்த ஊழியர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு பதவிக்கும் அமைய தனித்தனியே எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) (i) புத்தள கைத்தொழில்பேட்டைக்கு மின்சாரம் பெறப்படும் முறை யாது என்பதையும்;

(ii) அதற்கென மின்மாற்றி இயந்திரங்கள் பொருத்தப்பட்டுள்ளனவா என்பதையும்;

(iii) 2014 சனவரி மாதம் முதல் இன்று வரை அதன் பராமரிப்புக்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) கைத்தொழில் பேட்டையில் உற்பத்தி செய்யப்படுகின்ற வெட்டுமரக் கைத்தொழில் உற்பத்திகளின் சந்தைப்படுத்தலுக்காக அமுல்படுத்தப்பட்டுள்ள வேலைத்திட்டம் யாது என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(உ) இன்றேல், ஏன்?

5424/ ’14

11.

கௌரவ சுனில் ஹந்துன்னெத்தி,— போக்குவரத்து அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) புகையிரத திணைக்களத்தின் பயிற்சிபெற்ற கைவினை அடிப்படையிலான சேவைப் பிரமாணங்களின் பிரகாரம், 1997.01.01 தொடக்கம் சகல பயிற்சிபெற்ற கைவினைஞர்களும் மேற்படி சேவையில் உள்வாங்கப்பட்டுள்ளதை அறிவாரா என்பதையும்;

(ii) வேறு எந்தவொரு சேவைப் பிரமாணங்களிலும் காணப்படாத நிபந்தைனையாக மேற்படி சேவையின் பிரிவுகள் மற்றும் பதவியுயர்விற்கு ஏற்ப “அ” பிரிவிலுள்ள கைவினைஞர்களுக்கு முதல் வகுப்பிற்கான பதவியுயர்வுகள் வழங்கப்படுகின்றபோது 6:1 விகிதாசாரம் பின்பற்றப்படுகின்றதா என்பதையும்;

(iii) மேற்படி விகிதாசாரம் 6/2006 சுற்றறிக்கை அமுல்படுத்தப்படுகின்றபோது மாற்றப்படுமென பல சந்தர்ப்பங்களில் அதிகாரிகள் இணங்கியிருப்பதென்பதை அவர் அறிவாரா என்பதையும்;

(iv) எனினும், இற்றைவரை 6/2006 இன் பிரகாரம் பதவியுயர்வு நடைமுறையைத் தயாரிப்பதற்கு தவறியுள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், இதற்குரிய காரணங்கள் யாவை என்பதையும்;

(vi) மேற்படி பிரச்சினையின் காரணமாக சம்பள உயர்வின் உச்ச வரம்பில் உள்ள பெரும் எண்ணிக்கையான ஊழியர்களுக்கு அநீதி நேரிடுகின்றதென்பதை அறிவாரா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5439/ '14

கௌரவ (அல்ஹாஜ்) ஏ.எச்.எம் அஸ்வர்,— நீர் வழங்கல், வடிகாலமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தலவாக்கலை ஹொலிரூட் தோட்டத்தில் வசிக்கும் அண்ணளவாக 200 குடும்பங்களைச் சேர்ந்த மக்கள் நீண்ட காலமாக குடிநீரைப் பெற்றுக்கொள்வதில் சிரமங்களை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்;

(ii) மேற்படி தோட்டத்தில் வசிக்கும் மக்களுக்கு குடிநீர் வழங்கும் பொருட்டு தலவாக்கலை பிரதேசத்தில் செயற்படுகின்ற அரச சார்பற்ற அமைப்பொன்றான ரீ பீல்ட் நிறுவனத்தினால் அண்மையில் தாபிக்கப்பட்ட நீர் தாங்கிகள் மற்றும் குழாய் நீர் முறைமையொன்றின் மூலம் மேற்படி மக்களுக்கு தமது குடிநீர் தேவையை நிறைவுசெய்துகொள்ள இயலுமாயிருந்ததென்பதையும்;

(iii) தற்போது மேற்படி தோட்டத்தின் தேயிலைத் தொழிற்சாலைக்குத் தேவையான நீர் மேற்படி தாங்கியிலிருந்து பெறப்படுகின்றமையால் மேற்படி மக்கள் மீண்டும் குடிநீர் தேவையை நிறைவு செய்துகொள்ளும் சிரமத்தை எதிர்நோக்கியுள்ளனர் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) ஹொலிரூட் தோட்டத்தில் வசிக்கும் மக்களின் குடிநீர் தேவையை நிறைவு செய்யும் பொருட்டு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5568/ '14

13.

கௌரவ நிரோஷன் பெரேரா,— வனசீவராசிகள் வளப் பேணுகை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) வனசீவராசிகள் பாதுகாப்புத் திணைக்களத்திற்கு தருவிக்கப்பட்ட விமானிகளற்ற கண்காணிப்பு விமானத்திற்கென செலவிடப்பட்ட பணத் தொகை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி விமானத்தின் மூலம் பெறப்பட்ட தகவல்களின் படி வெளிப்படுத்தப்பட்ட சட்டவிரோத செயற்பாடுகள் யாவை என்பதையும்;

(iii) இவ்வாறு வெளிப்படுத்தப்பட்ட சட்டவிரோத செயற்பாடுகளுக்குப் பொறுப்புக் கூறவேண்டியவர்களென இனங்காணப்பட்டவர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி நபர்களுக்கு எதிராக மேற்கொள்ளப்பட்ட சட்ட நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) (i) தற்போது மேற்படி கண்காணிப்பு விமானம் காணாமல் போயுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில், மேற்படி விமானம் காணாமல் போனதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) காணாமல் போன மேற்படி விமானத்திற்கு பதிலாக வெறொரு விமானம் பதலீடு செய்யப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5642/ '14

14.

கௌரவ தலதா அத்துகோரல,— பெருந்தோட்டக் கைத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஒட்டுமொத்தமான சிறு தேயிலைத் தோட்டச் சொந்தக்காரர்களின் எண்ணிக்கை யாதென்பதையும்;

(ii) 2014 வரவு செலவுத்திட்டத்தின் மூலம் சிறு தேயிலைத் தோட்டங்களின் மண் மற்றும் நீர் பாதுகாப்பின் பொருட்டு ஒரு ஏக்கருக்கு ரூபா 5,000.00 வீதம் சிறு தேயிலைத்தோட்டச் சொந்தக்காரர்களுக்கு வழங்குவதற்கு முன்மொழியப்பட்ட நிவாரணத் தொகை ஒரே தடவையில் வழங்கப்படுமா என்பதையும்;

(iii) இன்றேல், அது பகுதி பகுதியாக வழங்கப்படுமா என்பதையும்;

(iv) மேற்படி நிவாரணத் தொகையை வழங்குவதற்காக 2014 ஆம் ஆண்டில் ஒதுக்கப்பட்ட மொத்தப் பணத் தொகை எவ்வளவு என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5656/ '14

15.

கௌரவ சிவசக்தி ஆனந்தன்,— பிரதம அமைச்சரும், பௌத்த சாசன மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பம்பலப்பிட்டி, மெஜஸ்ரிக் சிட்டி, மூன்றாம் மாடியில், இலக்கம் 3 – 26 மற்றும் 27 ஆம் இலக்கங்களில் அமைந்துள்ள 'பனமா டிரேடர்ஸ்' வர்த்தக நிலையத்தின் உரிமையாளரான ராமசாமி பிரபாகரன் என்பவர் 28 மாதகாலமாக கைது செய்யப்பட்டிருந்த நிலையில் உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம் விடுதலை செய்யப்பட்ட ஒருவராவாரா என்பதையும்;

(ii) விடுதலை பெற்ற பின்னர் இவர் பிரதிப் பொலிஸ் மாஅதிபர் அநுர சேனாநாயக்க மற்றும் அரச புலனாய்வுப் பிரிவில் சேவையாற்றிய சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் வாஸ் குணவர்த்தன ஆகியோருக்கு எதிராக மனித உரிமை மீறல் தொடர்பாக நீதிமன்றத்தில் வழக்குத் தாக்கல் செய்திருந்தார் என்பதையும்;

(iii) இது சம்பந்தமான வழக்கு விசாரணை 2012 பெப்ருவரி மாதம் 13 ஆம் திகதி நடாத்தப்படவிருந்தது என்பதையும்;

(iv) 2012 பெப்ருவரி 11 ஆம் திகதி பி.ப. 3.30 மணியளவில் வெள்ளை வேன் ஒன்றில் வந்த சிலர் வெள்ளவத்தை பிரதேசத்தில் வைத்து இவரை கடத்திச் சென்றுள்ளார்கள் என்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) (i) 2012 பெப்ருவரி 11 ஆம் திகதி காணாமல்போன ராமசாமி பிரபாகரன் தற்போது இருக்கும் இடம் யாது என்பதையும்;

(ii) இவரின் நிலைமை என்ன என்பதையும்;

(iii) மேற்படி கடத்தலுடன் தொடர்புடையவர்கள் அல்லது சம்பந்தப்பட்ட சந்தேகநபர்கள் யாவர் என்பதையும்;

(iv) இவர்களின் பெயர்களை வெளியிட முடியாதிருப்பின், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

# 2015 பெப்புருவரி 18, புதன்கிழமை

# வாய்மூல விடைக்கான வினாக்கள்

2767/ '12

1.

கௌரவ சஜித் பிரேமதாஸ,— பொருளாதார அபிவிருத்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) தேவையான உட்கட்டமைப்பு வசதிகள் எதுவும் இன்மையினால் களுத்துறை மாவட்டத்தில் பாலிந்த நுவர பிரதேச செயலாளர் பிரிவில் அமைந்துள்ள மாகெலிய நீர்வீழ்ச்சி சுற்றுலா கவர்ச்சியைப் படிப்படியாக இழந்து வருவதை அவர் அறிவாரா?

(ஆ) ஏற்புடைய ஏனைய நிறுவனங்களுடன் கலந்துரையாடி உள்நாட்டு, வெளிநாட்டு சுற்றுலாப் பயணிகளுக்கு மேற்படி நீர்வீழ்ச்சியைப் பார்வையிடக்கூடிய வகையில் வசதிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுமா என்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

3438/ '13

2.

கௌரவ ரவி கருணாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இன்றுள்ளவாறு அமுலிலுள்ள அனைத்து நேரடி மற்றும் மறைமுக வரிகள் எவை என்பதையும்;

(ii) இன்றுள்ளவாறு வரி பயன்படுத்தப்படும் வீதங்களின் தாக்கத்தின் ரூபா பெறுமானத்தையும்

அவர் இச்சபைக்கு தெரிவிப்பாரா?

(ஆ) (i) அரிசி, சீனி, பருப்பு, பால்மா, கோதுமை மா, பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், தகரத்திலடைக்கப்பட்ட மீன், வெங்காயம், மின்சாரம் மற்றும் வங்கிக் கடன் போன்றவற்றுக்கு இன்றுள்ளவாறு வதிக்கப்படும் வரியின் அளவுகளையும்;

(ii) 2004 ஏப்பிறல் 2, 2005 திசெம்பர் 01, 2009 திசெம்பர் 01 மற்றும் 2013 சனவரி 01 ஆகிய திகதிகளில் உள்ளவாறு அந்த அளவுகளின் ஒப்பீடு ஒன்றையும்

அவர் தனித்தனியாக குறிப்பிடுவாரா?

(இ) இன்றுள்ளவாறாக வரி பயன்படுத்தப்படும் வீதங்களின் தாக்கத்தின் வளப் பெறுமதியினை அவர் இச்சபைக்குத் தெரிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4488/ '13

3.

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க,— விளையாட்டுத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2013 ஒக்டோபர் மாதம் 15 ஆம் திகதி முதல் சுகததாச விளையாட்டு மைதானத்தின் செயற்கை ஓட்டப் பாதையில் மேற்கொள்ளப்படும் பராமரிப்பு நடவடிக்கைளின் பொருட்டு அதனை மூடிவிடுவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளதா என்பதையும்;

(ii) ஆமெனில் அதற்கான காரணம் யாதென்பதையும்;

(iii) இம்மைதானத்தின் செயற்கை ஓட்டப் பாதையை புதிதாக நிர்மாணிப்பதற்கு செலவாகிய பணத்தொகை எவ்வளவு என்பதையும்;

(iv) 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதமளவில் இச் செலவில் எவ்வளவு தொகை செலுத்தப்பட்டுள்ளது என்பதையும்;

(v) 2012 யூன் மாதம் முதல் 2013 ஆம் ஆண்டு ஒக்டோபர் மாதம் வரையிலான காலப்பகுதியில் திருத்த நடவடிக்கைகளுக்காக மேற்படி விளையாட்டு மைதானம் எத்தனை தடவைகள் மூடப்பட்டன என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4532/ '13

4.

கௌரவ புத்திக பதிரண,— பிரதம அமைச்சரும் பௌத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) 2011 வரவு-செலவு திட்டத்தின் பிரேரணையொன்றாக செயல்படுத்தப்பட்ட பாதுகாப்புத்துறை அங்கத்தவர்களது குடும்பங்களின் மூன்றாவது குழந்தையின் பிறப்புக்காக ரூபாய் ஓர் இலட்சம் கொடுப்பனவை வழங்குகின்ற வேலைத்திட்டம் தற்போதும் நடைமுறைப்படுத்தப்படுகின்றதா என்பதையும்;

(ii) மூன்றாவது மகப்பேறு தொடர்பாக மேற்படி பணத் தொகையை பெறுவதற்காக பாதுகாப்புத்துறை அங்கத்தவர் ஒருவர் பின்பற்ற வேண்டிய முறையியல் யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4579/ '13

3.

கௌரவ அனுர திசாநாயக்க,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (2)

(அ) (i) இலங்கையில் கெசினோ சூதாட்டத்திற்கென 2012 ஆம் ஆண்டு முதல் இற்றைவரை வழங்கப்பட்டுள்ள உரிமப்பத்திரங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி உரிமப்பத்திரதாரர்களின் பெயர் மற்றும் முகவரிகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படும் பிரதேசங்கள் யாவை என்பதையும்;

(iv) இன்றளவில் உரிமப்பத்திரம் இன்றி கெசினோ நிலையங்கள் கொண்டுநடாத்தப்படுவதாக அறியவந்துள்ளதா என்பதையும்;

(v) ஆமெனின், மேற்படி கெசினோ நிலையங்கள் தொடர்பில் எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாவை என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

4685/ '13

6.

கௌரவ பீ.ஹரிசன்,— சுதேச மருத்துவத்துறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) 2010 – 2013 ஆம் ஆண்டு வரை இலங்கையில் ஆரம்பிக்கப்பட்டுள்ள ஆயுர்வேத உடல் பிடிப்பு நிலையங்களின் எண்ணிக்கை வருடவாரியாக தனித்தனியே எவ்வளவென்பதை அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) மேற்படி எண்ணிக்கை மாவட்ட வாரியாக தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி ஆண்டுகளில் குறித்த உடல் பிடிப்பு நிலையங்கள் ஊடாக அரசாங்கத்திற்கு கிடைத்த வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) அனுராதபுரம் மற்றும் குருணாகல் ஆகிய மாவட்டங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள மேலே குறிப்பிடப்பட்டவாறான உடல் பிடிப்பு நிலைய உரிமையாளர்களின் பெயர், முகவரி மற்றும் இவற்றில் தொடர்புபட்டுள்ள சுதேச மருத்துவர்களின் பெயர்கள் மாவட்ட வாரியாக தனித்தனியே யாவை என்பதையும்

அவர் இச்சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) ஆயுர்வேத உடல் பிடிப்பு நிலையமொன்றில் உள்நாட்டவர் ஒருவரிடமருந்தும் வெளிநாட்டவர் ஒருவரிடமிருந்தும் அறவிடப்படும் பணத் தொகை வெவ்வேறாக எவ்வளவென்பதை அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

4947/ '14

7.

கௌரவ சுஜீவ சேனசிங்க,— நெடுஞ்சாலைகள், துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கொழும்பு – கட்டுநாயக்க, கொட்டாவை – காலி, காலி – மாத்தறை மற்றும் கொட்டாவை – கடுவளை ஆகிய அதிவேகப் பாதைகளின் நிலைமை ஏனைய நாடுகளிலுள்ள அதிவேகப் பாதைகளுக்கான சர்வதேச தரநியமங்களுக்கேற்ப உள்ளனவா என்பதையும்;

(ii) இலங்கையில் நிர்மாணிக்கப்பட்டுள்ள அதிவேகப் பாதைகளின் ஒரு கிலோ மீற்றருக்காக செலவிடப்பட்ட பணத் தொகை மேலே குறிப்பிடப்பட்ட ஒவ்வொரு பாதையின் பிரகாரம் தனித்தனியாக எவ்வளவென்பதையும்;

(iii) மேற்படி அதிவேகப் பாதைகள் மற்றும் சமகாலத்தில் வெளிநாடுகளில் சர்வதேச ரீதியாக ஏற்றுக்கொள்ளப்பட்ட தரநியமங்களுக்கேற்ப நிர்மாணிக்கப்பட்டுள்ள பாதைகளின் ஒரு கிலோ மீற்றருக்காக செலவிடப்பட்டுள்ள பணத் தொகையை ஒப்பீட்டு ரீதியாக காட்ட முடியுமா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5108/ '14

8.

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— கல்வி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தொழில்நுட்பப் பாடப் பிரிவின் கீழ் உயர் தர வகுப்புகள் நடைபெறுகின்ற பாடசாலைகளின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) உயர்தர தொழில்நுட்பப் பாடப் பிரிவின் கீழ் தற்போது கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(ஆ) (i) குருநாகல் மாவட்டத்தில் தொழில்நுட்பப் பாடப் பிரிவின் கீழ் உயர் தர வகுப்புக்கள் நடைபெறுகின்ற பாடசாலைகளின் பெயர்கள் யாவை என்பதையும்;

(ii) மேற்படி ஒவ்வொரு பாடசாலைகளிலும், தொழில்நுட்பப் பாடப் பிரிவின் கீழ் கல்வி கற்கின்ற மாணவர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்

அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(இ) (i) தொழில்நுட்பப் பாடப் பிரிவைக் கற்பிப்பதற்காக புதிதாக ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டுள்ள ஆசிரியர்களின் எண்ணிக்கை யாது என்பதையும்;

(ii) மேற்படி ஆசிரியர்கள் பூர்த்தி செய்திருக்க வேண்டிய தகைமைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஆசிரியர்களுக்கு தேவையான பயிற்சி அளிக்கப்படுகின்றதா என்பதையும்;

(iv) மேற்படி பாடப் பிரிவைக் கற்பிக்கின்ற பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுக்கப்பட்டுள்ள வசதிகள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5111/ '14

9.

கௌரவ அஜித் மான்னப்பெரும,— வலு, சக்தி அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) இலங்கை மின்சார சபையின் மின்சார விநியோக வலயங்களின் (Transmission Divisions) எண்ணிக்கை யாது என்பதையும் ;

(ii) அவ்வலயங்கள் யாவை என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 2012 ஆம் ஆண்டில் மேற்படி ஒவ்வொரு வலயத்தினாலும் ஒரு அலகு மின்சாரத்தை வினியோகிப்பதற்காக ஏற்கப்பட்ட செலவினம் வெவ்வேறாக எவ்வளவு என்பதையும்;

(ii) 2012 ஆம் ஆண்டில் ஒரு அலகு மின்சாரத்தை விநியோகிப்பதற்காக ஏற்கப்பட்ட செலவினம் மேற்படி ஒவ்வொரு வலயத்தின் அடிப்படையில் வேறுபட்டிருப்பின் அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5311/ '14

10\.

கௌரவ அஜித் பீ. பெரேரா,— புனர்வாழ்வளிப்பு, சிறைச்சாலைகள் மறுசீரமைப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) தற்போது மரண தண்டனை விதிக்கப்பெற்று சிறைச்சாலையிலுள்ள சிறைக்கைதிகளின் எண்ணிக்கை;

(ii) மரண தண்டனை விதிக்கப்பெற்ற சிறைக்கைதிகளின் பெயர்கள் யாவை

என்பதை அவர் சபையில் சமர்ப்பிப்பாரா?

(ஆ) மரண தண்டனை விதிக்கப்பெற்றுள்ள மேற்படி சிறைக்கைதிகளில்,

(i) கொலைக் குற்றச்சாட்டுக்காக குற்றவாளிகளான நபர்களின் எண்ணிக்கை;

(ii) ஹெரோயின் விற்பனை மற்றும் கடத்தலில் ஈடுபடுதல் தொடர்பில் குற்றவாளிகளான நபர்களின் எண்ணிக்கை;

(iii) வேறு தவறுகளுக்கு குற்றவாளியானவர்களின் எண்ணிக்கை

வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) கடந்த 10 வருட காலப் பகுதியினுள் மரண தண்டனை விதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒவ்வொரு வருடத்திற்கும் ஏற்ப, வெவ்வேறாக யாதென்பதை அவர் குறிப்பிடுவாரா?

(ஈ) இன்றேல், ஏன்?

5339/ '14

11\.

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க,— பிரதம அமைச்சரும் புத்த சாசன, மத அலுவல்கள் அமைச்சருமானவரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) பொலிஸ் திணைக்களத்தில் பொலிஸ் பாதுகாப்பு உதவியாளர்கள் என்ற பெயரில் சில உத்தியோகத்தர்கள் சேவையாற்றுகின்றனரா என்பதையும்;

(ii) ஆமெனின், மேற்படி அலகு தாபிக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(iii) மேற்படி பதவிக்கு முதலில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(iv) இவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்பட்ட ஆண்டு யாதென்பதையும்;

(v) இவர்கள் சேவையில் நிரந்தரமாக்கப்படுகின்றபோது செலுத்திய அடிப்படைச் சம்பளம் மற்றும் 2014 ஆம் ஆண்டளவில் செலுத்தப்படும் அடிப்படைச் சம்பளம் எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) முதலில் ஆட்சேர்க்கப்பட்ட உத்தியோகத்தர்களில் தற்போது சேவையாற்றுகின்ற மற்றும் பதவியை விட்டு நீங்கிய எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(ii) பொலிஸ் உத்தியோகத்தர்களுக்குரிய சம்பள உயர்வு, இணைந்த படிகள், கஷ்டப் பிரதேச கொடுப்பனவு ஆகியன மற்றும் பல்வேறு பாடநெறிகளைக் கற்கின்ற வாய்ப்புகள், விடுமுறை மற்றும் விடுதி வசதிகள் போன்ற சிறப்புரிமைகளை இவர்களுக்கும் பெற்றுக்கொடுப்பரா என்பதையும்;

(iii) இன்றேல், அதற்கான காரணங்கள் யாவை என்பதையும்;

(iv) தற்போது சேவையில் ஈடுபட்டுள்ள பொலிஸ் பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் பலத்த அநீதிக்கு உள்ளாகியுள்ளமையை அவர் அறிவாரா என்பதையும்;

(v) ஆமெனின், இவர்களுக்கு நிரந்தர பொலிஸ் கான்ஸ்டபிள் பதவிக்குரிய சகல சிறப்புரிமைகளையும் பெற்றுக்கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதையும்;

(vi) ஆமெனின், அதனை மேற்கொள்கின்ற திகதி யாதென்பதையும்

அவர் இச்சபைக்கு அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5440/ '14

12.

கௌரவ ( அல்ஹாஜ் ) ஏ.எச்.எம் அஸ்வர்,— கமத்தொழில் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஹாரிஸ்பத்துவ, பூஜாபிட்டிய பிரதேச செயலாளர் பிரிவில், இஞ்சி செய்கையின் மூலம் சிறந்த விளைச்சல் கிடைக்கின்றதென்பதையும்;

(ii) மேற்படி பிரதேசத்தில் போதியளவு நீர்ப்பாசன வசதிகள் இன்மையால் கைவிடப்பட்டிருந்த வயல் காணிகளிலும் ஏனைய தரிசு நிலங்களிலும் பயிரிடப்பட்ட இஞ்சி செய்கையின் மூலம்கூட சிறந்த விளைச்சல் கிடைத்துள்ளதென்பதையும்;

(iii) இஞ்சி செய்கைக்குத் தேவையான ஆலோசனைகள், விதை இஞ்சி மற்றும் சேதனப் பசளை ஆகியன மெதவல, யட்டிவாவல மற்றும் பூஜாபிட்டிய ஆகிய கமநல சேவை நிலையங்களினூடாக வழங்கப்பட்டுள்ளதென்பதையும்

அவர் அறிவாரா?

(ஆ) மேற்படி (அ)(i) இல் குறிப்பிட்டுள்ள பிரதேசத்தில் இருக்கின்ற இஞ்சி செய்கையாளர்களின் விளைச்சலை சந்தைப்படுத்துவதற்குத் தேவையான வசதிகளை பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுப்பாரா என்பதை அவர் குறிப்பிடுவாரா?

(இ) இன்றேல், ஏன்?

5521/ '14

13.

கௌரவ (திருமதி) அனோமா கமகே,— முதலீட்டு ஊக்குவிப்பு அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்தின் ஆரம்ப கட்டத்தில், 1990-1992 அங்கு இயங்கிய தொழிற்சாலைகளின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) மேற்படி தொழிற்சாலைகள் (ஆடைகள் மற்றும் ஏனையவை) எத்தகைய உற்பத்திகளுக்காக ஆரம்பிக்கப்பட்டன என்பதையும்;

(iii) மேற்படி தொழிற்சாலைகளில் சேவையாற்றிய பெண் மற்றும் ஆண் ஊழியர்களின் எண்ணிக்கை தனித்தனியே எவ்வளவென்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) (i) 1992 ஆம் ஆண்டில் ஆடை ஏற்றுமதியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் எவ்வளவென்பதையும்;

(ii) 2014 ஆம் ஆண்டில் ஆடை ஏற்றுமதியின் மூலம் பெற்றுக்கொள்ளப்பட்ட வருமானம் எவ்வளவென்பதையும்;

(iii) 2014 ஆகஸ்ட் மாதமளவில் கட்டுநாயக்க முதலீட்டு ஊக்குவிப்பு வலயத்தில் காணப்பட்ட தொழிற்சாலைகளின் எண்ணிக்கை, ஒவ்வொரு உற்பத்தியின் அடிப்படையில் தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி தொழிற்சாலைகளில் சேவையாற்றும் ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(இ) இன்றேல், ஏன்?

5569/ '14

14.

கௌரவ நிரோஷன் பெரேரா,— நிதி, திட்டமிடல் அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) கடந்த ஐந்து ஆண்டுகளினுள் தீர்வை வரியின்றி இலங்கைக்கு இறக்குமதி செய்யப்பட்ட, ஓட்டப் பந்தயங்களுக்காகப் பயன்படுத்தப்படும் மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(ii) இவ்வாறு இறக்குமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன வகைகள் யாவை என்பதையும்;

(iii) மேற்படி ஒவ்வொரு மோட்டார் வாகன வகைக்கும் வழங்கப்பட்ட வரிச் சலுகைகளின் முழுமொத்தப் பெறுமதி தனித்தனியே எவ்வளவென்பதையும்;

(iv) மேற்படி மோட்டார் வாகனங்களில் ஓட்டப் பந்தயங்களுக்கு பயன்படுத்திய பின்னர் மீள்ஏற்றுமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கை எவ்வளவென்பதையும்;

(v) மீள்ஏற்றுமதி செய்யப்பட்ட மோட்டார் வாகன வகைகள் யாவை என்பதையும்;

(vi) மீள்ஏற்றுமதி செய்யப்பட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையானது மேற்படி (i) இல் குறிப்பிட்ட மோட்டார் வாகனங்களின் எண்ணிக்கையில் எத்தனை சதவீதம் என்பதையும்

அவர் இச்சபையில் அறிவிப்பாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

5644/ '14

15.

கௌரவ (திருமதி) தலதா அத்துகோரல,— நீர்ப்பாசன, நீர்வள முகாமைத்துவ அமைச்சரைக் கேட்பதற்கு,— (1)

(அ) (i) ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபை இலங்கை மகாவலி அதிகார சபைக்கு ஒப்படைக்கப்பட்ட சமயத்தில் ஆற்றுப்பள்ளத்தாக்கு அபிவிருத்தி சபையின், உடவளவ வலயத்திற்குரிய உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்த ஊழியர்களின் எண்ணிக்கை எவ்வளவு என்பதையும்;

(ii) மேற்படி உத்தியோகபூர்வ விடுதிகளில் வசித்த ஊழியர்களுக்கு அவற்றை ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டதா என்பதையும்;

(iii) ஆமெனின், மேற்படி ஒப்படைப்பு மேற்கொள்ளப்பட்ட அடிப்படை யாதென்பதையும்;

(iv) அப்போது மேற்படி விடுதிகளுக்கு ஏற்புடையதாக சமர்ப்பிக்கப்பட்ட மதிப்பீட்டுப் பெறுமதியை அறவிட்டு அதற்குரிய உரிமையை ஒப்படைக்கின்ற உறுதிகள் குறித்த குடியிருப்பாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளதா என்பதையும்

அவர் குறிப்பிடுவாரா?

(ஆ) இன்றேல், ஏன்?

# திகதி குறிக்கப்படாத பிரேரணை முன்னறிவித்தல்கள்

*1.

கல்வி அமைச்சர்,— தேசிய கல்விக் கொள்கையொன்றைத் தயாரிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு, —

இலங்கையில் இலவசக் கல்வித் திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்ட பின்னர் கல்வி முறையானது அளவுசார் ரீதியாக விருத்தியடைந்திருந்த போதிலும் ஒப்பீட்டளவில் பண்புரீதியாகவும் கட்டமைப்பு ரீதியாகவும் வளர்ச்சியடையாமையினால் ஆசிரியர்களுக்கும் மாணவ, மாணவியருக்கும் பெற்றோர்களுக்கும் பாதிப்பு ஏற்படக்கூடிய சுற்றுச்சூழல் தோன்றியுள்ளதாலும்,

அவ்விடயத்துடன் தொடர்புடையதாக கல்வித்துறையில் பலவிதமான முறையற்ற செயல்களும் அநீதியும் மாத்திரமின்றி மோசடியும் ஊழல்களும் இடம் பெறுவதாக சமூக அபிப்பிராயமொன்று தோன்றியுள்ளமையாலும்,

ஒட்டுமொத்தமான கல்வித்திடத்திலும் பாரிய மாற்றங்களும் பல்வேறு மறுசீரமைப்புக்களும் இடம்பெற வேண்டுமென்ற மக்கள் கருத்து உருவாகியுள்ளதாலும்,

மஹிந்த சிந்தனை எதிர்கால நோக்கினை மையமாகக் கொண்ட அபிவிருத்தி உபாய முறையைக் கவனத்திற் கொண்டும்,

ஒட்டுமொத்தமான இலங்கை மாணவர் சந்ததியினரின் எதிர்காலத்தை உருவாக்க ஏற்புடையதாகக் கூடியவாறு பாலர் பாடசாலைப் பருவத்திலிருந்து பல்கலைக்கழகக் கல்விவரை மாணவர்களின் அறிவு, திறன் மற்றும் மனப்பாங்கினை விருத்தி செய்வதற்கு ஏதுவான வகையிலான தேசிய கல்வித் திட்டமொன்றை தயாரிப்பது காலந்தாழ்த்த இயலாததும், தேசிய முன்னுரிமை கிடைக்க வேண்டிய விடயமாக அமைவதாலும்,

(அ) முன்பள்ளிகள், ஆரம்ப, இரண்டாம் நிலை மற்றும் மூன்றாம் நிலைக் கல்வியில் ஏற்பட வேண்டிய அளவு ரீதியான, பண்பு ரீதியான மற்றும் கட்டமைப்பு ரீதியான மாற்றங்கள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும் ,

(ஆ) தேசிய சமய, மற்றும் கலாசார விழுமியங்களைப் பாதுகாக்கும் பொருட்டு கல்வித் திட்டத்தில் ஏற்படுத்த வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(இ) பிரிவேனாக் கல்வியில் இடம்பெற வேண்டிய மாற்றங்கள் பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஈ) முதலாந் தரத்திற்குச் சிறுவர்களைச் சேர்த்துக் கொள்வதற்கான திட்டவட்டமான வழிமுறையொன்று உள்ளதாவெனக் கண்டறிவதற்காகவும்,

(உ) அனைத்துப் பரீட்சைகளினதும் பரீட்சித்தங்களினதம் பெறுபேறுகளை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்வருதல் மற்றும் உயர்கல்விக்கான தகைமைகளைப் பெறாத மாணவர்களுக்காக கல்வித் திட்டத்திலுள்ளே வழங்கக்கூடிய மாற்று வழிமுறைகளை உருவாக்க வேண்டுமா என்பதைக் கண்டறிவதற்காகவும்,

(ஊ) பல்கலைக்கழகத்தில் பிரவேசிப்பதற்கான தகைமைகளைப் பெற்ற போதிலும் இலங்கைப் பல்கலைக்கழமொன்றில் பிரவேசிக்காமல் வெளிநாடுகளில் கல்விபெறும் பொருட்டு வெளிநாடுகளுக்குச் செல்லும் மாணவர்களுக்கு இந்நாட்டிலேயே கல்விக்கான வாய்ப்புக்களை வழங்கக்கூடிய வழிமுறைகள் உள்ளனவாவென்பதைக் கண்டறிவதற்காகவும்,

(எ) கல்வித்திட்டம் அமுலாக்கப்படுகின்ற நிலையில் பிரதேச, இன மற்றும் சமய ரீதியில் நிலவுகின்ற முரண்பாடுகளை நீக்குவதற்காக மேற்கொள்ள வெண்டிய வழிமுறைகள் யாவையெனக் கண்டறிவதற்காகவும்,

(ஏ) தேசிய கல்விக் கொள்கை நடைமுறைப்படுத்தப்படுகையில் மத்திய அரசாங்கத்திற்கும் மாகாண சபைகளுக்கும் இடையில் உருவாக வேண்டிய இடைத்தொடர்புகளின் தன்மை பற்றிக் கண்டறிவதற்காகவும்,

(ஐ) கல்விச் செயற்பாட்டில் ஆசிரியர்கள், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலையதிபர்கள், கோட்டக் கல்விப் பணிப்பாளர்கள், வலயக் கல்விப் பணிப்பாளர்கள் மற்றும் மாகாணக் கல்விப் பணிப்பாளர்களை உள்ளிட்ட ஒட்டுமொத்தமான கல்விமான்களின் பொறுப்பையும் கடமையையும் நிச்சயித்துக் கொள்வதற்காக மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் யாவையென்பதைக் கண்டறிவதற்காகவும்,

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படுதல் வேண்டுமென்று இச்சபை, தீர்மானிக்கின்றது.

(2) (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

(இ) அதன் அறிக்கையை அதன் முதலாவது கூட்டத்தில் இருந்து மூன்று மாத (03) காலப்பகுதிக்குள் அல்லது பாராளுமன்றத்தினால் நீடிக்கப்படுகின்ற அத்தகைய காலப்பகுதிக்குள் பாராளுமன்றத்திற்குச் சமப்பித்தல் வேண்டும்.

(3) அக்குழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கு அதிகாரமுடைய தாயிருத்தல் வேண்டும்.

(ஆ) குழுவின் முன் தோற்றுமாறு எவரையும் கட்டளையிட்டழைப்பதற்கும் ஏதேனும் ஆவணத்தை அல்லது பதிவேட்டைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடவும் மேலுள்ள விடயத்தைப் பூரணமாக ஆராய்வதற்குத் தேவையானதெனக் கருதும் அத்தகைய எழுத்திலான அல்லது வாய்மொழியிலான அனைத்துச் சாட்சிகளைப் பெற்றுக் கொள்ளவும் பொறுப்பேற்கவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

(இ) குழுவுக்குத் துணைபுரியவென உரிய துறைகளில் சிறப்புத் தகுதிகள் உடையோர் மற்றும் நிபுணர்கள் ஆகியோரின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கு அதிகாரமுடையதாயிருத்தல் வேண்டும்.

(ஈ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

2.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ ஜே. ஸ்ரீ ரங்கா

கௌரவ ஹரின் பெர்னாந்து,— நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு தட்டுப்பாடு நிலவுகின்றமை தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

நாட்டில் அத்தியாவசிய மருந்துப் பொருட்களுக்கு பெரும் தட்டுப்பாடு நிலவுகின்றமையாலும்,

இத்தட்டுப்பாட்டிற்கான காரணங்களை கௌரவ சுகாதார அமைச்சர் பாராளுமன்றத்தில் வெளிப்படுத்தியுள்ளமையாலும்,

இந்த நிலையை நிவர்த்திப்பதற்குப் பரிகார நடவடிக்கைகள் உடனடியாக மேற்கொள்ளப்படாவிடில் அது ஒரு பேரழிவிற்கு இட்டுச் செல்லுமாகையாலும்,

(அ) இப் பற்றாக்குறைக்கான காரணங்கள் தொடர்பாக விசாரிப்பதற்கும்,

(ஆ) நிலைமையைச் சமாளிப்பதற்குத் தேவையான குறுகியகால நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

(இ) எதிர்காலத்தில் இந்த நிலைமை மீண்டும் ஏற்படுவதை தடுப்பதற்குத் தேவையான நிரந்தர நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்,

பாராளுமன்றத் தெரி குழுவொன்று நியமிக்கப்படல் வேண்டும் என இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எதுவாக இருந்த போதிலும், குழுவானது இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.38/ '10

3.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ அகில விராஜ காரியவசம்

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா

கௌரவ ரஞ்சன் ராமநாயக்க

கௌரவ ஹரின் பெர்னாந்து

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ அர்ஜுன ரனதுங்க

கௌரவ நிமல் விஜேசிங்க,— கொழும்பு நகரத்திலும் அதன் புறநகர்ப் பகுதிகளிலும் அடிக்கடி வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்ந்து, அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

கடந்த பல தினங்களாக கொழும்பு மாநகர சபை பிரதேசத்திலும் கொழும்பு மாவட்டத்தின் பெரும்பாலான பகுதிகளிலும் மிகக் கடுமையான வெள்ளம் ஏற்பட்டிருப்பதாலும்,

கொழும்பு மாநகர சபை மற்றும் மாவட்டம் ஆகிய இரண்டையும் சேர்ந்த மக்களுக்கு இந்நிலைமை வழக்கமாக மீண்டும் மீண்டும் ஏற்படுகின்ற ஒரு நிகழ்வாகியுள்ளதாலும்,

இந்நிலைமையைக் கட்டுப்படுத்துவதற்கு பொறுப்புமிக்கவர்களால் எவ்வித முயற்சியும் மேற்கொள்ளப் படாதுள்ளமையினாலும்,

இந்த வெள்ள நிலைமை மீண்டும் மீண்டும் ஏற்படுவதைத் தடுப்பற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாதுள்ளதாலும்,

காலப்போக்கில் நிலைமை மேலும் மோசமடைந்து சென்றுள்ளதாலும்,

வெள்ளம் வற்றியதும் எல்லாவற்றையும் மறந்துவிடும் போக்கு காணப்படுவதாலும்,

இது மிகவும் திருப்தியற்ற ஒரு நிலைமை என்பதாலும்,

(அ) கொழும்பு நகரிலும் அதன் சுற்றுப்புறத்திலும் மாவட்டத்திலும் மீண்டும் மீண்டும் வெள்ளம் ஏற்படுவதற்கான காரணங்களை ஆராய்வதற்கும்,

(ஆ) மேலே சொல்லப்பட்டவாறு வெள்ளம் ஏற்படுவதைத் தடுப்பதற்குத் தேவையான உடனடி மற்றும் குறுகிய கால நடவடிக்கைகள் பற்றி ஆராய்வதற்கும்,

(இ) இந்தப் பிரச்சினை மீண்டும் மீண்டும் ஏற்படுவதை நிரந்தரமாகத் தடுப்பதற்கான வழிவகைகளை விதந்துரைப்பதற்கும், பாராளுமன்றத் தெரி குழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், அக்குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நட்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஆறு மாத காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.58/ '10

4.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ டி. எம். சுவாமிநாதன்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ ஜெ. ஸ்ரீரங்கா,— தேர்தல்களுடன் தொடர்புபட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்தங்களை விதந்துரைப்பதற்குமான பாராளுமன்றத் தெரி குழு,—

இலங்கையில் தேர்தல் முறைமையை மறுசீரமைப்பதற்கு கடந்த பல வருடங்களில் பல்வேறு முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமையினாலும்;

தேர்தல் மறுசீரமைப்பைப் பற்றி ஆராய்வதற்கு, 5 ஆவது பாராளுமன்றத்தின் போதும் 2006ஆம் ஆண்டில் 6ஆவது பாராளுமன்றத்தின் போதும் நியமிக்கப்பட்டவை அடங்கலாக பல சந்தர்ப்பங்களில் தெரிகுழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களால் பல இடைக்கால அறிக்கைகள் சமர்ப்பிக்கப்பட்டுள்ளமையினாலும்;

இக்குழுக்களின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு எவ்வித நடவடிக்கையும் மேற்கொள்ளப்படாமையினாலும்;

(அ) தேர்தல்கள் தொடர்பான சட்டங்களுக்கு, அதிலும் குறிப்பாக தேருநர்களைப் பதிவு செய்தல் சட்டம், உள்ளூராட்சி அதிகார சபைத் தேர்தல்கள் சட்டம், மாகாண சபைத் தேர்தல்கள் சட்டம், பாராளுமன்றத் தேர்தல்கள் சட்டம், ஜனாதிபதித் தேர்தல்கள் சட்டம் ஆகியவற்றுக்கு கடந்த பல வருடங்களில் மேற்கொள்ளப்பட்ட பல்வேறு திருத்தங்கள் மற்றும் மேலே சொல்லப்பட்ட சட்டங்களின் ஏற்பாடுகளுக்குப் பொருந்தத்தக்கதாக ஆக்கப்பட்ட விசேட ஏற்பாடுகள் ஆகியவற்றுடன் சேர்த்து மேலே குறிப்பிடப்பட்ட சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) இந்தச் சட்டங்களை மீளாய்வு செய்வதற்கும், திருத்துவதற்கும், ஒருங்கிணைப்பதற்குமான தேவையை ஆராய்வதற்கும்;

(இ) தேர்தல்கள் தொடர்பான தற்போதைய சட்டங்களில் அவசியமான சீர்திருத்தங்களையும் திருத்தங்களையும் விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிகப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல.95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

5.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்துமபண்டார

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க,— அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தத்தின் ஏற்பாடுகள் நடைமுறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும் அது நடைமுறைப்படுத்துவதற்காக மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பது பற்றி அறிக்கை செய்வதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு,—

2001 ஆம் ஆண்டில் அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டம் பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்பட்டு சான்றுப்படுத்தப் பட்டுள்ளதாலும்;

சொல்லப்பட்ட திருத்தத்தின் ஏற்பாடுகள் பல்வேறு அரச நிர்வாக மற்றும் நீதித்துறை நிறுவனங்களின் சுதந்திரத்தை உறுதிப்படுத்துவதற்கான பல முக்கியமான சிறப்பம்சங் களை அறிமுகப்படுத்தியும் உள்ளடக்கியுமிருப்பதாலும்;

சொல்லப்பட்ட திருத்தங்கள் நீதியானதும் சுதந்திரமானதுமான சமூகமொன்றை உறுதிப்படுத்துவதைக் நோக்காகக் கொண்டிருப்பதாலும்;

அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் மீறப்பட்டுள்ளமை அவதானிக்கப்பட்டுள்ளதாலும்;

(அ) அரசியலமைப்பிற்கான பதினேழாவது திருத்தச் சட்டத்தின் ஏற்பாடுகள் நடை முறைப்படுத்தப்படுவதை மீளாய்வு செய்வதற்கும்;

(ஆ) அதன் ஏற்பாடுகள் பின்பற்றப்படுவதை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(இ) மேலும் ஏதேனும் திருத்தங்கள் அவசியமா என்பதைப் பரிசீலிப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன்போ தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்க ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதிசெய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்வதற்கும்; மற்றும்

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் தனது அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்.

பா.66/ '10

6.

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ மங்கள சமரவீர,— அரச நிதி பற்றிய குழு,—

எதிர்க்கட்சி உறுப்பினரொருவர் தவிசாளராக இருக்கக்கூடிய விதத்தில் தெரிவுக் குழுவினால் பெயர் நியமனம் செய்யப்பட்ட பதினொரு உறுப்பினர்களையும், தவிசாளர் ஒருவரையும் கொண்ட அரச நிதி பற்றிய குழு எனப் பெயரிடப்பட்ட குழுவொன்று இருத்தல் வேண்டும்.

(2) பின்வருவனவற்றை பரிசீலித்தல் குழுவின் கடமையாக இருத்தல் வேண்டும்.

(அ) அரசியலமைப்பின் 148 ஆம் உறுப்புரையின் கீழான வருமான சேகரிப்பு.

(ஆ) அரசியலமைப்பின் 149(1) ஆம் உறுப்புரையின் கீழ் திரட்டிய நிதியத்திலிருந்து வழங்கப்படும் கொடுப்பனவுகள்.

(இ) அரசியலமைப்பின் 149(1) ஆம் உறுப்புரையின் கீழ் சட்டத்தினால் விதிக்கப்பட்ட குறிப்பிட்ட நோக்கங்களுக்காக பொது நிதியத்தைப் பயன்படுத்தல்.

(ஈ) அரசியலமைப்பின் 150(1) ஆம் மற்றும் 150(2) ஆம் உறுப்புரையின் கீழ் பொதுநிதியத்தைப் பிரயோகித்தல்.

(உ) நடப்பு வருடத்திற்காக ஒதுக்கீட்டுச் சட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள ஒதுக்கீடுகள் தொடர்பான பின்னடைவுகள், ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் செலவு செய்யப்படாத மிகுதிகளின் மாற்றம்.

(ஊ) நடப்பு வருடத்திற்கான ஒதுக்கீட்டுச் சட்டத்தை நடைமுறைப்படுத்தல்.

(எ) பொதுக்கடன் மற்றும் கடனை மீளச் செலுத்துதல்.

(ஏ) 2003 ஆம் ஆண்டின் 2 ஆம் இலக்க நிதி முகாமைத்துவ (பொறுப்புகள்) சட்டத்தின் கீழான அறிக்கைகளும் கூற்றுகளும்.

(3) மேலே பந்தி 2 இல் குறிப்பிடப்பட்டுள்ள விடயங்களிலிருந்து எழும் விடயங்கள் தொடர்பில் பாராளுமன்றத்திற்கு அவ்வப்போது குழு அறிவிக்க வேண்டும்.

(4) சட்டமூலத்தின் வரவு செலவுத்திட்ட மதிப்பீடுகள் சபாபீடத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு வார காலப்பகுதியினுள், அரசாங்கத்தின் கொள்கை வரம்பிற்குள் பணம் முறையாக ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளதா என்பதை உள்ளடக்கிய மதிப்பீடுகள் பற்றிய ஓர் அறிக்கையை குழு சமர்ப்பித்தல் வேண்டும்.

(5) வரவு செலவுத்திட்டம் சமர்ப்பிக்கப்பட்டு ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டிற்குப் பின்னர் 4 நாட்களுள் மொத்த மதிப்பீட்டுச் செலவுகளையும் வரவுகளையும் தீர்மானிப்பதற்கு அடிப்படைகளாகப் பயன்படுத்தப்பட்ட நாணய, நிதி மற்றும் பொருளாதார ஊகங்கள் தொடர்பான அறிக்கையைக் குழு பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பித்தல் வேண்டும்.

ப.67/ ’10

7.

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ மங்கள சமரவீர,— மேற்பார்வை நிலையியற் குழுக்கள்,—

(அ) “மேற்பார்வை நிலையியற் குழுக்கள்” என அழைக்கப்படும் கீழே குறிப்பிடப் பட்டவாறான குழுக்கள் பாராளுமன்றத்தில் இருக்க வேண்டும் என்பதோடு, அவை ஒவ்வொன்றும் தமது நியாயாதிக்கத்தினுள் வரும் எல்லா சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் கீழே பட்டியலிடப்பட்ட ஏனைய விடயங்கள் தொடர்பாக பரிசீலிப்பதற்கான நியாயாதிக்கத்தையும் தொடர்புடைய பணிகளையும் கொண்டிருக்க வேண்டுமெனவும்.

(ஆ) அவற்றின் நியாயாதிக்கத்துக்கு உட்பட்ட சகல சட்டமூலங்கள், தீர்மானங்கள், ஒப்பந்தங்கள், அறிக்கைகள் மற்றும் ஏனைய விடயங்களும் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் அவற்றின் அறிக்கைக்காக சம்பந்தப்பட்ட குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும் எனவும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

1. சர்வதேச தொடர்புகள்

   சர்வதேச வர்த்தகம் அடங்கலாக வெளிநாட்டுத் தொழில்வாய்ப்பு, சர்வதேச நிறுவனம், சர்வதேச மாநாடுகள் மற்றும் உடன்படிக்கைகள், பிராந்திய நிறுவனங்கள்.

2. தேசிய பாதுகாப்பு

   இலங்கையின் பாதுகாப்பு அடங்கலாக, ஆயுதப் படைகள், புலனாய்வு, பொதுச் சட்டமும் ஒழுங்கும், பொலிஸ் மற்றும் பாதுகாப்பு, வெளிநாடுகளுடனான ஒத்துழைப்பு.

3. கமத்தொழில் மற்றும் காணிகள்

   பெருந்தோட்டக் கைத்தொழில்கள் அடங்கலாக மகாவலி அதிகார சபை, காணி மற்றும் நீர்ப்பாசனம்.

4. மனித வளங்கள் மற்றும் கலாசாரம்

   கல்வி அடங்கலாக, பயிற்சி, இளைஞர், விளையாட்டு, கலாசாரம் மற்றும் மத அலுவல்கள்.

5. மனித குடியேற்றம் மற்றும் எரிசக்தி

நகர மற்றும் கிராமிய உட்கட்டமைப்பு, நெடுஞ்சாலைகள், வீதிகள், புகையிரதம், கப்பல் போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, தபால் மற்றும் தொலைத் தொடர்பாடல்கள்.

6. மனித சேமநலன்கள்

சுகாதாரம் அடங்கலாக, சமூக சேமநலன்கள், வறுமை ஒழிப்பு, அங்கவீனர், சிரேஷ்ட பிரசைகள் மற்றும் சிறுவர் சேமநலன்.

7. உள்ளக நிர்வாகம்

8. சுற்றாடல் மற்றும் இயற்கை வளங்கள்

நீர் முகாமைத்துவம் அடங்கலாக, நீரக வள மூலங்கள், விஷேட பொருளாதார வலயங்கள் மற்றும் கடற்றொழில்.

9. சட்ட மற்றும் மகளிர் விவகாரம்

நீதிமன்றங்கள் அடங்கலாக, மனித உரிமைகள், ஊடகங்கள், தொழிலாளர், தேசிய ஒருங்கிணைப்பு மற்றும் பால்நிலை.

(இ) அரசியலமைப்பின் உறுப்புரைகள் 44(இ) மற்றும் 45(1) யின் கீழ் அமைச்சுகளுக்கு குறித்தொதுக்கப்படும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களை சட்டவாக்க மேற்பார்வை நோக்கத்துக்காக உரிய நிலையியற் குழுவுக்கு பாராளுமன்றம் ஒப்படைத்தல் வேண்டும்.

2. (அ) பின்வரும் விடயங்களில் பாராளுமன்றத்துக்கு உதவுவதற்காக பந்தி ( ஆ) இல் சொல்லப்பட்டுள்ள பொதுவான மேற்பார்வைப் பொறுப்புகளை பல்வேறு மேற்பார்வை நிலையியல் குழுக்கள் கொண்டிருத்தல் வேண்டும்:

(i) (அ) பாராளுமன்றத்தினால் நிறைவேற்றப்படும் சட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம் மற்றும் பயனுறுதி; மற்றும்

(ஆ) புதிய அல்லது மேலதிக சட்டங்களை ஆக்குவதற்கான அவசியம் அல்லது விரும்பத்தக்க தன்மையைக் குறித்துக் காட்டக்கூடிய நிலைமைகளும் சூழ்நிலைகளும்; ஆகியவை பற்றிய அதன் பகுப்பாய்வு, கணிப்பீடு மற்றும் மதிப்பீடு; மற்றும்

(ii) சட்டங்களை வகுத்தல், பரிசீலித்தல் மற்றும் இயற்றுதல் அல்லது அவற்றுள் மாற்றங்கள் செய்தலும் தேவையான அல்லது பொருத்தமான அத்தகைய மேலதிக சட்டவாக்கமும்.

(ஆ) ஒரு குழுவின் நியாயாதிக்கத்தினுள் வருகின்ற பிரச்சினைகளைக் கையாளும் சட்டங்கள், கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித்திட்டங்கள் ஆகியன பாராளுமன்றத்தின் நோக்கத்திற்கமைய நடைமுறைப்படுத்தப்பட்டு நிறைவேற்றப்படுகின்றனவா என்பதையும் அவை தொடரப்பட வேண்டுமா, கட்டுப்படுத்தப்பட வேண்டுமா அல்லது நீக்கப்பட வேண்டுமா என்பதையும் நிர்ணயிப்பதற்கு பின்வரும் விடயங்களை ஒவ்வொரு குழுவும் தொடர்ச்சியான அடிப்படையில் மீளாய்வு செய்தல் வேண்டும்.

(i) அதன் நியாயாதிக்கத்தனுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் பிரயோகம், நிர்வாகம், நிறைவேற்றம், மற்றும் பயனுறுதி;

(ii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்களை கையாளும் சட்டவாக்கக் கருத்திட்டங்கள் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களின் நிர்வாகம் மற்றும் நிறைவேற்றத்துக்கான பொறுப்புகளைக் கொண்ட திணைக்களங்கள் மற்றும் நிறுவனங்களின் ஒழுங்கமைப்பும் தொழிற்பாடும்;

(iii) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் தொடர்பாக (அது தொடர்பான ஒரு சட்டமூலம் அல்லது தீர்மானம் அறிமுகப்படுத்தப் பட்டிருப்பினும் இல்லாவிடினும்) கையாளும் புதிய அல்லது மேலதிக சட்டவாக்கத்தின் அவசியத்தை அல்லது விரும்பத்தகுந்த தன்மையை குறித்துக்காட்டும் ஏதேனும் நிலைமைகள் அல்லது சூழ்நிலைகள்; மற்றும்

(iv) அதன் நியாயாதிக்கத்தினுள் வரும் விடயங்கள் பற்றிய எதிர்கால ஆய்வுகளும் எதிர்வு கூறலும்.

(இ) ஒவ்வொரு குழுவும் தனது பொறுப்புகளை நிறைவேற்றுவதில் அவசியமானது அல்லது பொருத்தமானது எனக் கருதும் அத்தகைய புலனாய்வுகளையும் ஆய்வுகளையும் எந்நேரத்திலும் நடத்தலாம்.

(ஈ) பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கி ஆறு வாரங்கள் பிந்தாமல், ஒவ்வொரு நிலையியல் குழுவும் அந்தப் பாராளுமன்றத்திற்கான அதன் மேற்பார்வைத் திட்டத்தினை வகுக்க வேண்டும். அத்தகைய திட்டம் பாராளுமன்ற அலுவல்கள் தொடர்பான குழுவிற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டும். ஒவ்வொரு குழுவும் அதன் திட்டத்தினை உருவாக்குகையில், இயலுமான அளவிற்கு

(i) இவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்களினை மீளாய்வு செய்கையில், குழுக்களுக்கு இடையில் ஆகக்கூடுதலான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப் பினை உறுதிப்படுத்து முகமாக, இதேபோன்ற அல்லது இது போன்றவற்றுடன் தொடர்புடைய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் மீது நியாயத்துவத்தினைக் கொண்ட ஏனைய குழுக்களுடன் கலந்தாலோசித்தல். அத்துடன் அவ்வாறான ஒத்துழைப்பு மற்றும் ஒருங்கிணைப்பினை உறுதிப் படுத்துவதற்காக எடுக்கப்பட்ட அல்லது எடுக்கப்படவுள்ள நடவடிக்கை களின் விளக்கங்களை அதன் திட்டத்தில் உள்ளடக்குதல்.

(ii) தெளிவற்றதாக இருக்கின்ற, தன்னிச்சையானதாக இருக்கின்ற அல்லது அர்த்தமற்றதாக இருக்கின்ற அல்லது தனிநபர்களுள் மீது மோசமான நிதிச் சுமைகளை சுமத்துகின்ற அரசாங்கத்தின் விதிகள், ஒழுங்கு விதிகள், நியதிச் சட்டங்கள் மற்றும் நீதிமன்றத் தீர்மானத்துடன் தொடர்புடைய குறிப்பிட்ட பிரச்சினைகளை மீளாய்வு செய்தல்.

(iii) அவ்வாறான சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித் திட்டங்கள், அல்லது நிரந்தரமான வரவு - செலவுத் திட்ட அதிகார சபை அல்லது நிரந்தரமான நியதிச் சட்ட அதிகார சபை ஆகியவற்றின் கீழ் இயங்கும் முகவர்கள் மீதான மீளாய்வுவினை அதன் திட்டத்தில் உள்ளடக்குவதற்கு முன்னுரிமையை வழங்குதல்.

(iv) அதன் நியாயாதிக்கத்தின் கீழுள்ள முக்கிய சட்டவாக்கக் கருத்திட்டங்கள், நிகழ்ச்சித்திட்டங்கள் அல்லது முகவர்கள் 10 வருடங் களுக்கு ஒரு தடவை மீளாய்வுக்கு உட்படுவதை உறுதிப்படுத்துவதைப் பார்த்துக் கொள்ளல் வேண்டும்.

(உ) மேற்பார்வைத் திட்டங்களின் பயனுறு ஒருங்கமைப்பை உறுதி செய்வதற்கும் இவ்வுப வாசகத்தின் குறிக்கோள்களை அடைவதற்கும் குழுக்கள் மேற்கொள்ளக் கூடிய விதப்புரைகளுடன் அக்குழுக்கள் பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கும் அறிக்கைகளை பாராளுமன்ற அலுவல்கள் குழு பாராளுமன்றத்தின் முதலாவது கூட்டத்தொடர் தொடங்கியதில் இருந்து ஒன்பது வாரங்கள் கடப்பதற்கு முன் சமர்ப்பிக்க வேண்டும்.

3. (அ) பாராளுமன்றமானது எந்த ஒரு விடயத்தினையும் எந்த ஒரு மேற்பார்வை நிலையியற் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) அமைச்சர் ஒருவர் அவருக்குக் கீழ்வரும் விடயம், செயற்பாடு, திணைக்களம் அல்லது நிறுவனத்தின் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட சம்பந்தப்பட்ட மேற்பார்வை நிலையியற் குழுவிற்கு எந்த ஒரு விடயத்தினையும் ஆற்றுப்படுத்தலாம்.

4. (அ) சபாநாயகர், ஒவ்வொரு சட்டமூலத்தினையோ, ஒழுங்குவிதியினையோ, தீர்மானித்தினையோ அல்லது இந்த நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளுக்கு அமைவாக, 1 ( அ) பந்தியின் கீழ் பெயரிடப்பட்ட மேற்பார்வை நிலையியற் குழுவின் கீழ் பட்டியலிடப்பட்டுள்ள விடயம் தொடர்புடைய வேறு ஏதாவது விடயத்தினையோ ஆற்றுப்படுத்தலாம்.

(ஆ) 1(அ) பந்தியின் கீழ் ஏற்பாடொன்றின் விடயப் பொருள் மீது நியாயாதிக்கத்தினைக் கொண்ட ஒவ்வொரு குழுவும் அவ்வாறான ஏற்பாட்டினைக் கருத்திற்கொண்டு பாராளுமன்றத்திற்கு அறிக்கையிடுவதன் சாத்தியமான உச்சப்பட்ட அளவினை உறுதிப்படுத்தும் வகையில் பந்தி 4 (அ) இன் கீழ் சபாநாயகர் விடயங்களை ஆற்றுப்படுத்தலாம்.

(இ) விடயத்தினை ஆற்றுப்படுத்தல் தொடர்பாக பந்தி (அ) மற்றும் (ஆ) இன் கீழ் செயலாற்றும் போது சபாநாயகர்,

(i) ஆரம்ப நியாயாதிக்கத்திற்கான குழுவினை நியமிக்கலாம்.

(ii) ஆரம்பத்தில் அல்லது ஆரம்ப நியாயாதிக்கக் குழுவினால் அதன் கருத்துக்களுக்காக விடயமானது அறிக்கையிடப்பட்டதன் பின்னர் பரிசீலனைக்காக விடயத்தினை ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட மேலதிகக் குழுக்களுக்கு ஆற்றுப்படுத்தலாம்.

(iii) ஆற்றுப்படுத்தலினை பொருத்தமான காலவரையறைகளுக்கு உட்படுத்தலாம்; மற்றும்

(iv) பொருத்தமானது எனக் கருதப்படக்கூடிய அவ்வாறான ஏனைய ஏற்பாடுகளை மேற்கொள்ளலாம்.

(ஈ) அபிப்பிராயத்தினை வழங்கும் குழுவின் பொறுப்பின் பரப்பின் கீழ்வரும் விடயங்களுடன் மாத்திரமே அபிப்பிராயமானது சம்பந்தப்படலாம்.

(உ) ஆரம்ப நியாயாதிக்கக் குழுவானது ஒரு காலக்கெடுவினை விதிக்கலாம். அதனுள் குழு அபிப்பிராயத்தினைக் கோரும். அத்துடன் அது ஆரம்ப நியாயாதிக்கக் குழுவில் கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமாயின், அக்காலக்கெடுவின் முன் அதனை வழங்க வேண்டும்.

5. (அ) நியாயாதிக்கத்தினைப் பயன்படுத்தும் ஒவ்வொரு குழுவும், குழுவினால் கவனத்தில் கொள்ளப்படும் ஒவ்வொரு விடயம் தொடர்பாகவும் ஓர் அறிக்கையினைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கலாம். அவ்வாறான அறிக்கைகள் பாராளுமன்றத்தின் சபாபீடத்தின் முன் சமர்ப்பிக்கப்பட சபாநாயகர் ஏற்பாடு செய்வார்.

(ஆ) (i) எந்தவொரு சட்டமூலம் அல்லது ஒழுங்கு விதி மீதான குழுவின் எந்த அறிக்கையும், இணைக்கப்பட்டுள்ள முன்மொழிவுகளுக்கு, அவ்வாறானவை இருப்பின், வரைபுத் திருத்தங்களை, குறுகிய நியாயாதிக்கங்களின் படி பொருத்தமானதெனின், உள்ளடக்க வேண்டும்.

(ii) ஒரு சட்டமூலத்திற்கான அவ்வாறான எந்தவொரு திருத்தமும், அந்தச் சட்ட மூலத்தினை் குழுநிலையின் போது, தவிசாளரினால் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு உறுப்பினரினால் பிரேரிக்கப்பட்ட திருத்தமாக, நிலையியற் கட்டளை 56 இன் கீழ் பாராளுமன்றத்திற்கு சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

(iii) ஒழுங்குவிதி ஒன்றிற்கான அவ்வாறான எந்தத் திருத்தமும், குழுவின் தவிசாளரினால் அல்லது குழுவினால் நியமிக்கப்பட்ட வேறு ஓர் உறுப்பினரினால் பிரேரிக்கப்பட்ட திருத்தமாக; சபாநாயகரினால் சமர்ப்பிக்கப்படும்.

(இ) பாராளுமன்றமானது அதன் முன்னால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள எந்தவொரு சட்டவாக்கம் சாராத அறிக்கையின் விதப்புரைகளினையும் பிரேரணை மூலம் அங்கீகரிக்கலாம்.

6. (அ) ஒவ்வொரு நிலையியற் குழுவும் அதன் கூட்டங்கள் பற்றிய கால சூசிகையினைத் தயாரித்து அதனைச் சபாநாயகருக்குச் சமர்ப்பிக்கும்.

(ஆ) ஒவ்வொரு நிலையியற் குழுவும், மாதத்தில் இரண்டு நாட்களுக்குக் குறையாமல் கூடும். ஒவ்வொரு நிலையியற் குழுவினதம் கூட்டங்கள் சபாநாயகர் அங்கீகரித்த அதன் சூசிகை / நேர அட்டவணைக்கு அமைவாகக் கூட்டப்படும்.

(இ) எந்தவொரு நிலையியற் குழுவினதும் மேலதிகக் கூட்டங்கள் ஒன்றில் பாராளுமன்றத்தின் வேண்டுகோளின்படியோ அல்லது நிலையியற் குழுவின் உறுப்பினர்களில் அரைவாசிப் பேரின் வேண்டுகோளின்படியோ கூட்டப்படலாம்.

(ஈ) எந்தவொரு நிலையியற் குழுவும் அதற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பாக அவ்வாறு ஆற்றுப்படுத்தப்பட்டு எட்டு வாரங்கள் கடந்த பின்னர் அவ்விடயம் தொடர்பான முன்னேற்றம் குறித்து ஏதாவது நிலையியற் குழு ஓர் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர்களுள் மூன்றில் ஒரு பங்கினர் கோரிக்கை விடுக்கலாம். அத்தகைய கோரிக்கை கிடைக்கப் பெற்றதன் பேரில் அத்தகைய நிலையியற் குழு இரண்டு வாரங்களுக்குள் பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றை சமர்ப்பித்தல் வேண்டும். அத்தகைய அறிக்கை பாராளுமன்ற சபாபீடத்தில் இடப்படல் வேண்டும்.

7. ஒவ்வொரு நிலையியற் குழுவும் பாராளுமன்ற பதவிக்காலம் வரை செயற்படும்.

8. (அ) பின்வருவோரை தவிர்ந்த சகல பாராளுமன்ற உறுப்பினர்களும் நிலையியற் குழுக்களின் உறுப்பினர்களாக பணியாற்ற தகுதியுடையோராவார்:

(i) சபாநாயகர்

(ii) பிரதிச் சபாநாயகர்

(iii) குழுக்களின் பிரதித் தவிசாளர்

(iv) பிரதம அமைச்சர்

(v) சபை முதல்வர்

(vi) எதிர்க்கட்சித் தலைவர்

(vii) அரசியலமைப்பின் 44(1) ஆம் உறுப்புரையின் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சர்கள்.

(viii) அரசியலமைப்பின் 45(1) இன் கீழ் நியமிக்கப்பட்ட அமைச்சரவை அமைச்சரது நியாயாதிக்கத்தின் கீழ் வராத அமைச்சுக்களின் விடயங்களையும் பணிகளையும் கொண்ட அல்லது உறுப்புரை 4(4) இன் கீழ் விடயங்களும் பணிகளும் குறித்துரைக்கப்பட்ட அமைச்சர்கள்.

(ஆ) தகுதியுடைய ஒவ்வொரு பாராளுமன்ற உறுப்பினரும் ஒரு நிலையியற் குழு உறுப்பினராக பணியாற்றுதல் வேண்டும். 8 (அ) (viii) பந்தியின் கீழ் வராத பிரதி அமைச்சர்களும், அமைச்சர்களும் தாம் எந்த அமைச்சரவை அமைச்சின் கீழ் பணியாற்றுகின்றார்களோ, அந்த அமைச்சின் கீழ் வரும் ஏதேனும் விடயங்கள், பணிகள், திணைக்களங்கள் அல்லது நிறுவனங்களின் அதே நியாயாதிக்கங்கள் மற்றும் பணிகளைக் கொண்ட ஏதேனும் நிலையியற் குழுவில் பணியாற்றுதல் ஆகாது.

(இ) (i) சபநாயகர், தகுதியுடைய உறுப்பினர்களின் நிரல் ஒன்றை தயாரித்தல் வேண்டும்.

(ii) தகுதிவாய்ந்த உறுப்பினர்களின் பட்டியலின் ஒவ்வொரு நிலையியற் குழுவினதும் உறுப்பாண்மை பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் வகிக்கும் அரசியல் கட்சிகளினதும் சுயேட்சைக் குழுவினதும் எண்ணிக்கைக்கு அமைய சபாநாயகர் அவர்களால் ஒதுக்கீடு செய்யப்படும்.

(ஈ) பாராளுமன்றத்திலிருக்கும் கட்சிகளின் அல்லது சுயேட்சைக் குழுக்களின் தலைவர்கள் ஒவ்வொரு நிலையியற் குழுவிற்குமான தமது உறுப்பினர் பெயர் நியமனங்களை சபாநாயருக்கு சமர்ப்பிக்க வேண்டும். தெரிவுக் குழுவிடம் கலந்தாலோசித்து சபாநாயகர் அத்தகைய பெயர்களை பாராளுமன்றத்தில் அறிவிக்க வேண்டும்.

(உ) பாராளுமன்றத்திலிருக்கும் ஏதேனும் கட்சியின் அல்லது நிலையியற் குழுவின் தலைவர் 8(ஈ) பந்தியின் கீழ் பெயர் நியமனம் செய்யப்பட்ட அத்தகைய எவரேனும் உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து அகற்றுமாறு எழுத்து மூலம் சபாநாயகரைக் கேட்டுக்கொள்ளலாம். அத்தகைய வேண்டுகோள் கிடைக்கப் பெற்றதன் பேரில் பாராளுமன்றத்திற்கு அறிவித்த பின்னர் சபாநாயகர் அத்தகைய உறுப்பினரை அத்தகைய குழுவிலிருந்து நீக்க வேண்டும்.

(ஊ) (i) ஒவ்வொரு நிலையயிற் குழுவும் அதன் முதலாவது கூட்டத்தின் போது அல்லது அதன் தவிசாளர் பதவி வெற்றிதடமான பின்னர் நடைபெறும் முதலாவது கூட்டத்தின் போது அந்நிலையியற் குழுவின் தவிசாளரைத் தெரிவு செய்தல் வேண்டும்.

(ii) நிலையியற் குழுவொன்றின் தவிசாளராகத் தெரிவுசெய்யப்படுவதற்கு அமைச்சர் ஒருவருக்கோ அல்லது பிரதி அமைச்சர் ஒருவருக்கோ அங்கீகாரம் இல்லை.

(எ) குழுவினது மூன்று தொடர்ச்சியான கூட்டங்களுக்கு அங்கத்தவர் எவராவது சமுகமளிக்காமலிருந்தால் அவர் அக்குழுவின் உறுப்புரிமையை இழந்தவராகக் கருதப்படுவார்.

9. மேற்பார்வை நிலையியற்குழு ஒவ்வொன்றும் அக்குழுவினைப் பரிசீலனை செய்தல் மற்றும் அக்குழுவிற்கு அறிக்கையிடல் போன்ற விடயங்கள் அவசியமாகும் போது தனது சொந்த உறுப்பினர்களைக் கொண்டு உப குழுக்களை நியமித்தல் அத்தியாவசியமெனக் கருதுகிறது.

10. ஏதாவதொரு குறித்த விடயத்தில் அறிக்கையிடலுக்கான காலநீடிப்பு பாராளுமன்றத் தினால் பிரகடனப்படுத்தப்பட்டிருந்தாலன்றி, குறிப்புரை கொடுக்கப்பட்ட காலத்திலிருந்து மூன்று மாதங்கள் காலாவதியாகும் வரை மேற்பார்வை நிலையியற் குழுவிற்கு குறித்துரைக்கப்பட்ட விடயங்கள் பாராளுமன்றத்தினால் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படமாட்டாது. பிரகடனத்தில் குறித்துரைக்கப்பட்ட கால எல்லை காலாவதியாகிய பின்பு மாத்திரமே இவ்விடயம் பரிசீலனைக்கு எடுத்துக் கொள்ளப்படும்.

11. ஏதாவதொரு சட்டமூலம் அல்லது பொது முக்கியத்துவம் சம்பந்தப்பட்ட வேறு ஏதாவது விடயம் சார்பாக அச்சட்ட மூலத்தினால் பாதிக்கப்பட்ட சகல தரப்புகள் அல்லது அக்கறையுள்ள ஏதாவது தரப்புகள் அல்லது அனுபவசாலிகள் ஆகியோரிடமிருந்து சாட்சியங்களை மேற்பார்வை நிலையியற்குழு ஒவ்வொன்றும் அழைக்கலாம்.

12. (அ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறித்துரைக்கப்பட்டுள்ள ஒரு சட்டமூலத்தை அல்லது அரசியலமைப்பிற்கான ஒரு திருத்தத்தைத் தவிர்ந்த சட்டத்தை ஆக்குவதற்கு மேற்பார்வை நிலையியற் குழுவொன்று விதப்புரை செய்யுமிடத்து, அத்தகைய நோக்கத்திற்காக அவ்வறிக்கையின் குறித்துரைக்கப்படும் குழுவின் தவிசாளர் அல்லது எவரேனும் உறுப்பினர் அரசியலமைப்பின் 78 ஆம் உறுப்புரைக்கு உட்பட்டு, அறிவித்தலின் பின்னர் அச்சட்டமூலம் பாராளுமன்றத்தின் கட்டளை ஒன்று இன்றியே பாராளுமன்றத்தில் முதல் மதிப்பீடு செய்வதற்கான பிரரேரணை ஒன்றை பிரேரிக்கலாம். அச்சட்டமூலத்தின் பிரதிகள் அப்பிரேரணையுடன் சேர்த்துச் சமர்ப்பிக்கப்படல் வேண்டும். அப்பிரேரணை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்ட ஆறு வாரங்களுக்குள் சபாநாயகர் அத்தகைய பிரேரணையை வாக்கெடுப்பிற்காக பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும். எனினும், இவ் ஆறுவார காலம் ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் இரண்டாம் மதிப்பீட்டு காலத்துள் அல்லது அதன் குழுநிலையில் அல்லது அதன் மூன்றாவது மதிப்பீட்டின்போது வருமாயின், ஒதுக்கீட்டுச் சட்டமூலத்தின் மீதான பரிசீலனை நிறைவுற்றதன் பின்னர் பாராளுமன்றத்தில் இடுதல் வேண்டும். அத்தகைய பிரேரணை ஒன்றைப் பாராளுமன்றம் அங்கீகரித்ததன் பின்னர் அச்சட்டமூலம் முதலாம் முறை வாசிக்கப்படுதல் என்பதோடு அச்சிடப்படுவதற்கும் கட்டளையிடவேண்டும்.

எனினும், அத்தகைய சட்டமூலம் மேற்பார்வை நிலையியற் குழுவின் மொத்த உறுப்பினர்களுள் 2/3 பங்கினரால் அங்கீகரிக்கப்பட்டிருப்பதோடு, பெயர்களுடன் அவ்வாறு பதியப்பட்டிருக்க வேண்டும்.

(ஆ) சட்டமூலம் முதல் முறை மதிப்பிடப்பட்டு, அச்சிடப்படுவதற்கு கட்டளையிடப்பட்ட பின்னர், சபாநாயகர் அத்தகைய சட்டமூலத்தை அமைச்சரவைக்கு அனுப்பி வைத்தல் வேண்டும். அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு ஒரு அறிக்கையைச் சமர்ப்பிக்கும் வரை அதன்மீது மேலும் எவ்வித நடவடிக்கைகளும் மேற்கொள்ளப் படமாட்டாது.

(இ) அமைச்சரவை பாராளுமன்றத்திற்கு அறிக்கையொன்றைச் சமர்ப்பித்த பின்னர் அல்லது அச்சட்டமூலம் அமைச்சரவைக்கு அனுப்பிவைக்கப்பட்ட தினத்திலிருந்து இரண்டு மாதங்கள் முடிவுற்றதன் பின்னர் அச்சட்டமூலம் இரண்டாம் வாசிப்பிற்காக இடப்படும்.

13. (அ) ஒவ்வொரு நிலையியற் குழுவும் ஆட்களையும், பத்திரங்களையும், பதிவுகளையும் கேட்டுப்பெறுவதற்கு அதிகாரம் உடையதாக இருப்பதோடு, தம்முன் எடுக்கப்பட்ட சான்றுகள் பற்றிய அறிக்கைகளோடு தமது அபிப்பிராயங்கள் மற்றும் அவதானிப்புகள் ஆகிய அடங்கிய அறிக்கைகளைச் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவும் வேண்டும்.

(ஆ) நிலையியற் குழுவின் எவரேனும் உறுப்பினரொருவரின் மாற்றுக்கருத்துகள் குழுவின் ஏதாவது அறிக்கையுடன் இணைக்கப்படலாம்.

14. (அ) அரசியலமைப்பின் 152 ஆம் உறுப்புரையில் குறிப்பிடப்பட்டுள்ள சட்டம் இயற்றுதலுக்கு நிலையியற் குழுவின் அறிக்கை எப்போதாவது விதப்புரை செய்யுமாயின், அத்தகைய அறிக்கை பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்டு 3 மாத காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை பாராளுமன்றத்தில் சமர்ப்பித்தல் வேண்டும்.

(ஆ) ஒரு நிலையியற் குழுவின் அறிக்கை சட்டவாக்கம் சாராத அறிக்கையாக இருக்குமிடத்து, அவ்வறிக்கை பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்டு 2 மாத காலப்பகுதியினுள் அமைச்சரவை தனது அபிப்பிராயங்களை சமர்ப்பிக்க வேண்டும். அத்தகைய அறிக்கைகள் பாராளுமன்றத்தினால் பரிசீலனைக்காக எடுத்துக்கொள்ளப்படலாகாது.

15. யாராவது முகவர், சங்கம், அதிகாரி அல்லது நபர் ஏதாவது சட்டத்தின் கீழ் நம்பிக்கை அல்லது இரகசியத்தன்மை ஆகியவற்றைப் பேணுவதற்கு தேவைப்படுத்தப் பட்டிருக்கும் பொழுது சம்பந்தப்பட்ட நிலையியற் குழு அத்தகைய சட்டத்திற்கமைய செயற்பட வேண்டும்.

16. (அ) அரசியலமைப்பின் 155 ஆம் உறுப்புரையின் கீழ் உருவாக்கப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்புத் தொடர்பான ஏதாவது ஒழுங்கு விதிகள் சட்டம் மற்றும் மகளிர் அலுவல்கள் தொடர்பான நிலையியற் குழுவிற்கு அறிக்கையிடுவதற்காக ஆற்றுப்படுத்தப்படுதல் வேண்டும். வேறு குழுவொன்றின் நியாயாதிக்கத்தின் கீழ் வருகின்ற திட்டவட்டமான விடயங்களை ஒழுங்கு விதியொன்றின் சுருக்கப்பெயர் குறிப்பிடுகின்ற பொழுது, 4 ( இ) ( ii ) பந்தியின் பிரகாரம் அத்தகைய ஒழுங்கு விதிகளை அத்தகைய நிலையியற் குழுவிற்கு சபாநாயகர் ஆற்றுப்படுத்த வேண்டும்.

(ஆ) உப பந்தி (அ) வின் கீழ் குறிப்பிடப்பட்ட விடயங்களுக்கு 7 ஆம் பந்தி ஏற்புடையதாகாது.

17. மேற்பார்வை செய்வதற்கான ஏதாவது நிலையியற் குழு, சபாநாயகரிடமிருந்து அனுமதியைப் பெற்றுக்கொண்டதன் பின்னர், ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட ஏனைய நிலையியற் குழுக்களுடன் கலந்துரையாடலாம்.

18. ஏதாவது ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் பாவிக்கப்படாத மிகுதிகள் தொடர்பாக நிதி அமைச்சின் செயலாளர், வரவு செலவுத் திட்டப் பணிப்பாளர், சம்பந்தப்பட்ட அமைச்சரின் செயலாளர் ஆகியோர் உடனடியாக பொது நிதி குழுவிற்கு அறிவிக்க வேண்டும்.

19. நியாயாதிக்கம் எனப்படுவது சட்ட மேற்பார்வை நியாயாதிக்கம் எனப் பொருள்படும் என்பதோடு துணைச்சட்டவாக்கங்கள் மீதான மேற்பார்வையையும் அது உள்ளடக்கும்.

ஏதாவது ஒதுக்கீடுகளின் மாற்றம் மற்றும் பாவிக்கப்படாத மிகுதிகள் தொடர்பாக சம்பந்தப்பட்ட அமைச்சின் செயலாளர், உரிய மேற்பார்வைக் குழுவிற்கு உடனடியாக அறிவிக்க வேண்டும்.

20. 8 ( அ) மற்றும் ஊ (ii) ஆம் பந்திகளின், அரசாங்க கணக்குகள் பற்றிய குழு மற்றும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழு ஆகியவற்றிற்கு ஏற்புடையனவாயிருத்தல் வேண்டும்.

பா.121/ '11

8.

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஏ.டி. சம்பிக பிரேமதாச,— உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா மீது நம்பிக்கையின்மை,—

2011 ஏப்ரல் 01 ஆம் திகதி உள்ளூராட்சி அதிகார சபைகளின் புதிய கூட்டத்தொடர் ஆரம்பிக்கவிருப்பதால், 2011 ஆம் ஆண்டு மார்ச் மாதம் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நடைபெறும் என உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சர் கௌரவ ஏ.எல்.எம். அதாவுல்லா 2011 ஜனவரி 04 ஆம் திகதி பின்வருமாறு கூறி சபைக்கு உறுதியளித்த தனாலும்:

"අද වෙලා තියෙන්නෙ මේකයි. 2011 අප්‍රේල් 01 වැනිදා අපි පළාත් පාලන ආයතනවල අලුත් සභා වාරය කැඳවන්න ඕනෑ. ඒකට ඇත්තටම මාර්තු මාසයේ ඡන්දය තියන්න වෙනවා."

கொழும்பு, ஸ்ரீ ஜயவர்தனபுர – கோட்டே மற்றும் தெஹிவளை - கல்கிசை மாநகர சபைகள் மற்றும் கொலன்னாவ நகர சபை ஆகியவற்றிற்கான தேர்தல்கள் தற்போது பின்போடப்பட்டுள்ளதுடன் மேலும் சில மாநகர சபைகள், நகர சபைகள் மற்றும் பிரதேச சபைகளுக்கான தேர்தல்களும் பின்போடப்படவுள்ளதாக அறிக்கை செய்யப்பட்டுள்ளதாலும்; அத்துடன்

அமைச்சர் வேண்டுமென்றே உண்மைக்குப் புறம்பான கூற்றை வெளியிட்டதன் மூலம் சபையைத் தவறாக வழிநடத்தியுள்ளதனாலும்;

உள்ளூராட்சி, மாகாண சபைகள் அமைச்சராகத் தொடர்ந்தும் தனது பணிகளை நிறைவேற்றுவதற்கான அமைச்சரின் ஆற்றலில் இந்த சபை நம்பிக்கை இழந்துள்ள தெனவும் அவர் அமைச்சரவையில் தொடர்ந்து பதவி வகிப்பதற்கு தகுதியற்ற, பொருத்தமற்ற ஒருவர் எனவும் இந்தச் சபை தீர்மானிக்கின்றது.

பா. 125/ '11

9.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ இரான் விக்கிரமரத்ன,— குமரன் பத்மநாதன் தடுத்துவைக்கப்பட்டுள்ளமை மற்றும் அவருக்கு எதிராக குற்றச்சாட்டுக்கள் சுமத்தப்படுவது எந்தச் சட்ட ஏற்பாடுகளின் பிரகாரம் என்பது பற்றியும் மற்ற விடயங்கள் பற்றியும் ஆராய்ந்து அறிக்கைசெய்வதற்கான பாராளுமன்ற தெரிகுழு,—

இலங்கை அரசாங்கத்தின் 2009, ஆகஸ்ட் 7ஆம் திகதிய அறிவித்தலின் பிரகாரம், செல்வராசா பத்மநாதன் என்றும் குமரன் பத்மநாதன் என்றும் அழைக்கப்படுபவரும் அதைவிடப் பொதுவாக "கே.பி" என அழைக்கப்படுபவருமான சண்முகம் குமரன் தர்மலிங்கம் தற்போது ஓராண்டுக்கும் மேலாக அதன் பாதுகாப்பில் இருப்பதனாலும்,

ஆயுதக் கடத்தல் மற்றும் குற்றவியல் சதித்திட்டம் உள்ளிட்ட பல்வேறு குற்றச்சாட்டுகளுக்காக சர்வதேச பொலிசாரின் மிகவும் தேடப்படுவோர் பட்டியலில் "கே.பி" இடம்பெறுவதனாலும்,

1991இல் இடம்பெற்ற முன்னாள் இந்தியப் பிரதமர் ரஜீவ் காந்தியின் படுகொலை தொடர்பாகவும் பயங்கரவாதச் சட்டம் மற்றும் இந்திய வெடிபொருட்கள் சட்டம் ஆகியவற்றை மீறியமைக்காகவும் இந்திய சட்ட வினைப்படுத்துகை முகவராண்மைகளினால் அவர் தேடப்படுவதனாலும்,

இலங்கையில் ஸ்ரீ மஹாபோதி மற்றும் புத்த பெருமானின் புனிதத் தந்தம் வைக்கப்பட்டுள்ள கோயில் ஆகியவைமீதான தாக்குதல்கள் உள்ளிட்ட பல பயங்கரவாதத் தாக்குதல்களில் அவர் நேரடியாகவும் மறைமுகமாகவும் சம்பந்தப்பட்டுள்ளதாலும்,

தமிழ் ஈழ விடுதலைப் புலிகளின் (த.ஈ.வி.பு) ஆயுதக் கொள்வனவாளராக அவர் இருந்துள்ளதாலும்,

த.ஈ.வி.பு.களின் ஆயுதக் கொள்வனவு, வழங்கல்கள் மற்றும் பணம் தூய்தாக்கல் தொழிற்பாடுகளில் ஈடுபட்டிருந்த த.ஈ.வி.பு.களின் அலுவலகங்களின் உலகளாவிய வலையமைப்பொன்றை அவர் கொண்டுநடத்தியதாலும்,

த.ஈ.வி.பு.களுக்கான ஆயுதங்களையும் வெடிபொருட்களயும் ஏற்றிச்செல்வதில் ஈடுபட்டிருந்த கப்பல் கம்பனி ஒன்றை அவர் இயக்கியதாக அறியவருவதாலும்,

இலங்கையில் நடைபெற்ற பல வங்கிக் கொள்ளைகளின் சூத்திரதாரியாக அவர் விளங்கியதாகக் கூறப்படுவதாலும்,

த.ஈ.வி.பு.களுக்கு பெருந்தொகையான ஆயுதங்களை வழங்குவதில் அவர் ஈடுபட்டிருந்ததாலும்,

த.ஈ.வி.பு.களுக்குச் சொந்தமான 19 கப்பல்கள் மற்றும் தங்கம் உள்ளிட்ட பெருந்தொகையான சொத்துகளை அவர் தனது கட்டுப்பாட்டில் வைத்திருந்ததாகக் கூறப்படுவதனாலும்,

த.ஈ.வி.பு.களினால் 2009, யூலை 21ஆம் திகதி வெளியிடப்பட்ட ஓர் அறிக்கை அவரை த.ஈ.வி.பு.களின் தலைவராகப் பிரகடனம் செய்தமையாலும்,

த.ஈ.வி.பு. இயக்கம் அப்பாவி மக்களைக் கொன்று கொடுமைகள் இழைத்துள்ளதாக ஐ.நா. அறிக்கை கூறுவதாலும்,

த.ஈ.வி.பு.களின் செயற்பாடுகளுக்கு நிதியழிப்பதற்கு சர்வதேச ரீதியில் பணம் சேகரித்தவர் “கே.பி” என்பவரே என அரசாங்கம் கூறுவதனாலும்,

பின்வருவன தொடர்பாக விசாரணை செய்து அறிக்கையிடுவதற்காக பாராளுமன்ற தெரிகுழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

(அ) எந்தச் சட்ட ஏற்பாட்டின் கீழ் கே.பி. தடுத்து வைக்கப்பட்டுள்ளார்;

(ஆ) கே.பி. க்கு எதிராக குற்றச்சாட்டுக்களைச் சுமத்துவதற்குத் தீர்மானிக்கப் பட்டுள்ளதா, அவ்வாறாயின் —

- (i) எச் சட்டத்தின் கீழ் அவர் குற்றம் சாட்டப்படுவார்,
- (ii) குற்றப் பத்திரிகையில் என்னென்ன குற்றங்கள் உள்ளடக்கப்படும்,
- (iii) அவருக்கு எதிராக எப்போது நீதிமன்றத்தில் குற்றங்களை சாட்டுவதற்கு உத்தேசிக்கப்படுகிறது, அத்துடன்
- (iv) எந்த நீதிமன்றத்தில் அத்தகைய குற்றச்சாட்டுக்கள் தாக்கல் செய்யப்படும்;

(இ) அவரை நாட்டை விட்டு அனுப்புமாறு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளதா, அவ்வாறாயின் எந்த நாடுகள் அவ்வாறான வேண்டுகோளை விடுத்துள்ளன, அவ்வாறு அவரை நாட்டை விட்டு வெளியேற்ற உத்தேசிக்கப்பட்டுள்ளதா;

(ஈ) கே.பி. வசமிருந்த குறிப்பாக தங்கம், கப்பல்கள் உள்ளிட்ட எல்.ரீ.ரீ.ஈ. யின் சொத்துக்கள் எங்கேயுள்ளன. மற்றும் அவற்றின் கதி என்ன;

(உ) நாட்டின் சட்டங்களின் கீழ் கே.பி.க்கு எதிராக வழக்குத் தொடராமல் அவரை வைத்திருப்பதில் எந்த உத்தியோகத்தர் அல்லது உத்தியோகத்தர்களின் தனது கடமையை புரியாது வாளாவிருக்க தேசத்துரோக நடவடிக்கைக்காக குற்றவாளிகளா உள்ளனரா என்ற விடயத்தையும் அத்தெரிகுழு பரிசீலிக்க வேண்டும்.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல.95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது, —

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.135/'11

10.

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ ஹரின் பர்னாந்து

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— ஹெஜின் உடன்படிக்கையின் பிரகாரம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்டுள்ள பாதிப்பு மற்றும் நட்டம் மற்றும் அந்த உடன்படிக்கை தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகள் பற்றி ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபன முகாமைத்துவத்தின் ஒட்டுமொத்த இயலாமை காரணமாக 160 மில்லியன் அமெரிக்க டொலர் சம்பந்தப்பட்ட தீர்ப்பொன்று அதற்கெதிராக வழங்கப்பட்டுள்ளதனாலும்,

வழங்கப்படவுள்ள மேலும் இரண்டு தீர்ப்புகள் அவ்வாறே கூட்டுத்தாபனத்துக்கு எதிராக அளிக்கப்படின், கூட்டுத்தாபனம் மேலும் முறையே 60 மில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் 200 மில்லியன் அமெரிக்க டொலர்களை இழக்க நேரிடும் என்பதாலும்,

முறைகேடான வகையில் செய்துகொள்ளப்பட்ட இந்த ஹெஜின் உடன்படிக்கைகள் செய்துகொள்ளப்பட்டது, திறமையின்மையினாலா அல்லது நேர்மையீனத்தினாலா என்பது புரிந்துகொள்ள முடியாதிருப்பதனாலும்,

(அ) இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்துக்கு முற்றிலும் பிரதிகூலமான அத்தகைய ஹெஜின் உடன்படிக்கைகள் எவ்வாறு செய்துகொள்ளப்பட்டன என்பதையும்;

(ஆ) இந்த உடன்படிக்கைகளுக்குப் பொறுப்பான கூட்டுத்தாபனத்தில் உள்ள அலுவலர்கள் யார் என்பதையும்;

(இ) இந்த ஹெஜின் உடன்படிக்கைகளின் விளைவாக கூட்டுத்தாபனத்துக்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ஈ) எதிர்காலத்தில் அத்தகைய நிகழ்வுகள் இடம்பெறாமல் தடுப்பதற்கு மேற்கொள்ளப்படவேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(உ) இந்த ஹெஜின் உடன்படிக்கைக்குப் பொறுப்பானவர்களுக்கு எதிராக என்ன நடவடிக்கை மேற்கொள்ளப்படவேண்டும் என்பதையும்; மற்றும்

(ஊ) பரிசீலனைக்குட்பட்ட இந்த விடயங்கள் மீது தாக்கத்தைக் கொண்டிருக்குமெனவும் இச்சூழ்நிலைகளில் பொருத்தமானதெனவும் குழு கருதும் வேறு ஏதேனும் விடயங்கள் தொடர்பாகவும்;

ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல. 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா.136/'11

11.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ மொஹான்லால் கிரேரு

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ தயாசிறி ஜயசேகர,— இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தினால் தரக் குறைவான பெற்றோலை இறக்குமதி செய்தது எவ்வாறாகும் என்ற பிரச்சினையுடன் தொடர்புடைய நிறுவனங்கள் தொடர்பாக பொறுப்புக் கூற வேண்டிய நபர்களுக்கு எதிராக எடுக்க வேண்டிய நடவடிக்கைகளும் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட நட்டத்தையும் தொடர்பாக ஆராய்ந்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

அண்மைக் காலத்தில் இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் நிர்வாகமானது திருப்தியற்றதாக இருப்பது கண்டறியப்பட்டுள்ளமையினாலும்,

கூட்டுத்தாபனம் தரம் குறைந்த பெற்றோலினை இறக்குமதி செய்துள்ளமை தற்போது தெரிய வந்துள்ளமையினாலும்,

இத்தரம் குறைந்த பெற்றோலானது ஆயிரக்கனக்கான வாகனங்களைப் பழுதடையச் செய்திருப்பதுடன் சிலவற்றினை பழுது பார்க்க முடியாத அளவிற்குச் சேதப்படுத்தியிருப்பதனாலும்,

பல எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பொருத்தப்பட்டுள்ள எரிபொருள் பம்பிகளுக்கு இதனால் சேதம் ஏற்பட்டுள்ளமையினாலும்,

கூட்டுத்தாபனத்தின் இச் செயற்பாடானது சொல்லொணா நிதி இழப்புக்களை ஏற்படுத்தியுள்ளதனாலும்,

குற்றத்தினை ஏற்றுக்கொள்வதற்கு அதிகாரபீடம் ஏற்கனவே ஒரு பலிக்கடாவினைக் கண்டுபிடித்துள்ளதனாலும்,

தரக் குறைவான பெற்றோல் உண்மையிலேயே இறக்குமதி செய்யப்பட்டது என்பதை அமைச்சர் ஏற்றுக்கொண்டுள்ளதனாலும்,

இச்சம்பவம் தொடர்பாக அரசாங்கம் முன்னுக்குப் பின் முரணான பல கூற்றுக்களை வழங்கியுள்ளதனாலும்,

(அ) இப்பெற்றோல் இருப்பிற்காகக் கட்டளை பிறப்பிக்கையில் ஏன் கேள்விமனுக்கோரல் செயன் முறைகள் பின்பற்றப்படவில்லை என்பதையும்;

(ஆ) உண்மையிலேயே தரக் குறைவான பெற்றோல் கூட்டுத்தாபனத்தினால் இறக்குமதி செய்யப்பட்டதா என்பதையும்;

(இ) எந்த நாட்டிலிருந்து அத்தகைய இறக்குமதிகள் மேற்கொள்ளப்பட்டன என்பதையும்;

(ஈ) இறக்குமதிகளின் மொத்தச் செலவினம் எவ்வளவு என்பதையும்;

(உ) இவ் இறக்குமதிகளின் விளைவாகக் கூட்டுத்தாபனத்திற்கு ஏற்பட்ட மொத்த நட்டம் எவ்வளவு என்பதையும்;

(ஊ) இவ் இறக்குமதிகளைத் தடைசெய்வதற்கு நடவடிக்கை ஏன் மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(எ) கிடைக்கப்பெற்ற இருப்புகள் தரம் குறைந்ததாகக காணப்பட்டிருப்பின், அவற்றை நிராகரிப்பதற்கு ஏன் நடவடிக்கை மேற்கொள்ளப்படவில்லை என்பதையும்;

(ஏ) இறக்குமதிசெய்யப்பட்ட இருப்புகள் தரம் குறைந்ததாக இருப்பது தெரியவந்ததன் பின்னரும் அவற்றை நாட்டிலுள்ள பல்வேறு எரிபொருள் நிரப்பு நிலையங்களுக்கு அனுப்பியது ஏன் என்பதையும்;

(ஐ) இறக்குமதிசெய்யப்பட்ட இருப்புகள் தரம் குறைந்ததாக இருப்பது கண்டுபிடிக்கப்பட்ட பின்னரும் கொடுப்பனவுகள் ஏன் செலுத்தப்பட்டன என்பதையும்;

(ஒ) பெற்றோலுக்கான தட்டுப்பாடு ஏற்பட இருப்பது பற்றிப் பொதுமக்களுக்கு ஏன் அறிவிக்கப்படவில்லை என்பதையும்;

(ஓ) இவ் இறக்குமதிகளுக்குப் பொறுப்பாகவுள்ள நபர்கள் யார் என்பதையும்;

(ஔ) எதிர்காலத்தில் அந் நிகழ்வுகளைத் தடுப்பதற்கு மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(க) இவ் இறக்குமதிகளுக்குப் பொறுப்பாகவுள்ளவர்களுக்கெதிராக மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கை யாது என்பதையும்;

(ச) பரிசீலனையின்கீழ் உள்ள இவ்விடயங்கள்மீது தாக்கங்களை கொண்டிருப்பவையெனவும் அத்தகைய சூழ்நிலையில் பொருத்தமானதெனவும் குழு கருதும் வேறு யாதேனும் விடயம் தொடர்பாகவும்;

ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கு பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2 (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரினால் நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை இல. 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3 அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவேடுகளை வரவழைப்பதற்கும், எந்தவொரு நபரையும் பாராளுமன்றத்தின் முன்போ அல்லது அத்தகைய குழுவின்முன் தோற்றவும் அத்தகைய நபர் வசமுள்ள அல்லது அவரின் கட்டுப்பாட்டிலுள்ள எந்தவொரு பத்திரத்தையோ, புத்தகப் பதிவேட்டையோ அல்லது ஆவணத்தையோ சமர்ப்பிக்கவும் ஆணையிடுதற்கும்;

(இ) குழுவின் தவிசாளர் முன்னிலையிலோ அல்லது அந்நோக்கத்திற்கென விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஒரு நபரின் முன்னிலையிலோ சத்தியப்பிரமாணம் செய்துகொள்ளும் அல்லது உறுதிமொழி எடுத்துக்கொள்ளும் சாட்சிகளின் சாட்சியத்தை வாய்மொழி விசாரணை மூலமாக ஊர்ஜிதம் செய்தற்கு அல்லது வேறுவிதமாக உறுதி செய்தற்கு மற்றும் சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்குத் துணை புரியும்பொருட்டு உரிய துறைகளிலுள்ள வல்லுநர் களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் மற்றும் பராளுமன்ற ஒத்திவைப்பு எதனையும் கருத்திற் கொள்ளாது தனது கூட்டத்தைக் கூட்டுவதற்கும் அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

4 குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

12.

கௌரவ ஏ. டி. சுசில் பிரேமஜயந்த

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ ரஊப் ஹகீம்

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ டக்ளஸ் தேவானந்தா

கௌரவ தினேஷ் குணவர்தன

கௌரவ மைத்திரிபால சிறிசேன

கௌரவ வாசுதேவ நாணாயக்கார

கௌரவ றிஸாட் பதியுதீன்

கௌரவ பெஸில் ரோஹண ராஜபக்ஷ

கௌரவ வீ.எஸ். இராதாகிருஷ்ணன்

கௌரவ டியூ குணசேகர

கௌரவ முத்து சிவலிங்கம்

கௌரவ பெருமாள் ராஜதுரை

கௌரவ ராஜீவ விஜேசிங்க

கௌரவ டலஸ் அழகப்பெரும,— இலங்கை மக்களை ஒரே தேசத்தின் மக்களாக வலுவூட்டுவதற்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு ரீதியில் நடவடிக்கைகளை பரிந்துரைப்பதற்கும் அது தொடர்பாக அறிக்கை சமர்ப்பிப்பதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு.

தேசத்தினதும் அதன் பிரஜைகளினதும் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக ஒரு தேசமாக ஒன்றிணைவதற்கும் பணிபுரிவதற்கும் இலங்கை மக்களுக்கு உன்னதமான வாய்ப்பொன்று உருவாகியுள்ளதாலும்;

இதற்காக இலங்கை மக்களின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும் அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தீர்மானங்களை மேற்கொள்வதற்கும், அவர்களை வலுவூட்டுவதற்கும் நடவடிக்கை மேற்கொள்வதற்கும் இது பொருத்தமான தருணம் என்பதனாலும்;

மேலே சொல்லப்பட்ட விடயங்களை இயலச் செய்வதற்கான நடவடிக்கைகளின் தன்மை, விடயப் பரப்புகள் ஆகியவற்றை நிர்ணயிப்பதற்கு மக்களால் தெரிவுசெய்யப்பட்ட பிரதிநிதிகளாகிய பாராளுமன்ற உறுப்பினர்களின் தெரிகுழுவொன்று சாலப்பொருத்தமானது என்பனாலும்;

(அ) இலங்கை மக்களின் ஐக்கியத்தை மேம்படுத்துவதற்கும்,

(ஆ) ஒரே தேசத்தின் மக்களாக அவர்களை மேலும் வலுவூட்டுவதற்கும்,

(இ) அவர்களின் பொருளாதார, சமூக மற்றும் அரசியல் அபிவிருத்திக்காக தீர்மானங்களை மேற்கொள்வதற்கும் நடவடிக்கைகளில் ஈடுபடுவதற்கு அவர்களை இயலச் செய்வதற்கும்,

இலங்கை மக்களுக்குப் பொருத்தமானதும் ஏற்றுக்கொள்ளக் கூடியதுமான தீர்வொன்றுக்கான அரசியல் மற்றும் அரசியலமைப்பு வழிமுறைகளை இந்த கௌரவ சபைக்கு 06 மாதங்களுக்குள் விதந்துரைப்பதற்கு பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

02 (அ) மேற்படி தெரிகுழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர்குறிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாயிருப்பினும், அக்குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

03 மேற்படி பாராளுமன்றத் தெரிகுழுவானது,

(அ) அதன் கூட்டநடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) அவசியமெனக் கருதக்கூடிய ஆட்களையும் ஆவணங்களையும் வரவழைப்பதற்கும்;

(இ) அவ்வாறு அழைக்கப்படுகின்ற எவரேனுமொருவரை சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிமொழியின் பேரில் விசாரணை செய்வதற்கும்;

(ஈ) காலத்திற்குக் காலம் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் தனது செயற்பாடுகளைத் தடையின்றி தொடர்ந்து நடாத்துவதற்கும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிப்பதற்கும்

இப்பாராளுமன்ற தெரிகுழு அதிகாரத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

பா.149/11

13.

கௌரவ மைத்திரிப்பால சிறிசேன

கௌரவ நிர்மல கொத்தலாவல

கௌரவ முஹமட் அஸ்லம்

கௌரவ இந்திக்க பண்டாரநாயக்க

கௌரவ டபிள்யு. பீ. ஏக்கநாயக்க

கௌரவ ஏ.ஆர்.எம். அப்துல் காதர்

கௌரவ சுசந்த புஞ்சிநிலமே

கௌரவ ருவன் ரணதுங்க

கௌரவ தராநாத் பஸ்நாயக்க

கௌரவ விநாயகமூர்த்தி முரளீதரன்

கௌரவ பழனி திகம்பரம்

கௌரவ சரண குணவர்தன

கௌரவ ஜகத் பாலசூரிய

கௌரவ ரஞ்சித் சியம்பலாப்பிட்டிய

கௌரவ துலிப் விஜேசேகர

கௌரவ வை.ஜீ. பத்மசிறி

கௌரவ சஜித் த வாஸ் குணவர்தன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ மனுஷ நாணயக்கார

கௌரவ (திருமதி) பவித்ரா தேவி வன்னியாராச்சி

கௌரவ உதித் லொகுபண்டார

கௌரவ நிமல் விஜேசிங்க

கௌரவ ஏ.எச்.எம். பௌசி

கௌரவ எச்.எம்.எம். ஹரிஸ்

கௌரவ லக்ஷ்மன் வசந்த பெரேரா

கௌரவ அசல ஜாகொடகே

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ நிஷாந்த முத்துஹெட்டிகமகே

கௌரவ (டாக்டர்) ரோஹண புஷ்பகுமார

கௌரவ சாந்த பண்டார

கௌரவ டீ. ரஞ்சித் த சொய்சா

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ லசந்த அழகியவன்ன

கௌரவ சரத் குமார குணரத்ன

கௌரவ திஸ்ஸ கரலியத்த

கௌரவ ஹேமால் குணசேகர

கௌரவ எரிக் பிரசன்ன வீரவர்தன

கௌரவ செஹான் சேமசிங்க

கௌரவ கனக ஹேரத்

கௌரவ லொஹான் ரத்வத்தே

கௌரவ ரொஷான் ரணசிங்க

கௌரவ கீதாஞ்சன குணவர்தன

கௌரவ ரெஜினோல்ட் குரே

கௌரவ வீ. எஸ். ராதாகிருஷ்ணன்

கௌரவ ஜயரத்ன ஹேரத்

கௌரவ விக்டர் அன்ரனி

கௌரவ (செல்வி) கமலா ரணதுங்க

கௌரவ சிறிபால கம்லத்

கௌரவ எச்.ஆர். மித்ரபால

கௌரவ ரோஹண திஸாநாயக்க

கௌரவ (திருமதி) உபேக்ஷா சுவர்ணமாலி

கௌரவ (திருமதி) மாலனி பொன்சேகா

கௌரவ ஜானக்க வக்கும்புர

கௌரவ விஜித பேருகொட

கௌரவ காமினி லொகுகே

கௌரவ சந்திரசிறி கஜதீர

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ பியசேன கமகே

கௌரவ குமார வெல்கம

கௌரவ காமினி விஜித் விஜிதமுணி த சொய்சா

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ ரிசாட் பதியுதீன்

கௌரவ ஜே.ஆர்.பீ. சூரியப் பெரும

கௌரவ டபிள்யு.டீ.ஜே. செனவிரத்ன

கௌரவ எஸ்.சீ. முத்துகுமாரண

கௌரவ ஏ.டீ. சுசில் பிரேமஜயந்த

கௌரவ ரஊப் ஹக்கீம்

கௌரவ மில்ரோய் பர்னாந்து

கௌரவ (கலாநிதி) மேர்வின் சில்வா

கௌரவ ஏ.எல்.எம். அதாஉல்லா

கௌரவ ஏ.எம். சாமிக புத்ததாச

கௌரவ பீலிக்ஸ் பெரேரா

கௌரவ விமல் வீரவங்ச

கௌரவ எம்.பீ. பாறூக்

கௌரவ நந்திமித்ர ஏக்கநாயக்க,— இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசின் முன்னாள் பிரதம நீதியரசர் மாண்புமிகு சரத் என் சில்வாவுக்கு எதிராக அதிகாரத் துஷ்ப்பிரயோகம் பற்றியும், துர்நடத்தை மற்றும்/அல்லது ஒழுக்கக்கேடு பற்றியும் விசாரித்து அறிக்கையிடுவதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

மேற்படி குற்றச்சாட்டுகளுக்கிணங்க அவர் நீதிமன்றத்தை அபகீர்த்திக்கு உள்ளாக்கி யுள்ளாரெனக் குறிப்பிடப்பட்டுள்ளதாலும்,

நீதிமன்றத்தின் சுயாதீனத்தன்மை மற்றும் சட்டத்தின் ஆதிக்கத்தைப் பாதுகாப்பதிலும் பேணிவருவதிலும் அவர் தவறியுள்ளாரென்பதாலும்,

பின்வரும் விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் பிரேரிக்கின்றது.

(அ) வெல்லவாய, முன்னாள் நீதிவான் திரு. ஜனக பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்கள் மற்றும் அவரது இராஜினாமாவை சமர்ப்பிக்க அவருக்கு அழுத்தம் கொடுக்கப்பட்டதா என்பதும்;

(ஆ) கொழும்பு, முன்னாள் மேலதிக நீதவான் திரு. ஹிரான் ஏக்கநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை வன்மமாக இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(இ) முன்னாள், நீதவான் திரு. சுனில் லோரன்ஸ் த கொஸ்தாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்

(ஈ) மாத்தறை, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. அனுர பண்டாரவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(உ) மாளிகாகந்த, முன்னாள் நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஊ) நீர்கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. டி.எம். சிறிவர்தனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(எ) நுவரெலியா, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. பிரபாத் த சில்வாவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஏ) கெப்பித்திகொல்லேவ, முன்னாள் நீதவான் திரு. டி.எம்.ரி.பீ. திசாநாயக்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஐ) கொழும்பு, முன்னாள் மேலதிக மாவட்ட நீதவான் திரு. ஹெரல்ட் விஜேசிறி லியனகேயின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஒ) மொறவக்க, முன்னாள் நீதவான் திரு. கே.டி.கே. த ஆப்றூவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஓ) பலப்பிட்டிய, முன்னாள் நீதவான் திரு. வை.எல். தர்மசேனவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ஔ) கண்டி, முன்னாள் மேலதிக நீதவான் திரு. நந்தன வீரசிங்கவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(க) கந்தளாய், முன்னாள் நீதவான் திரு. ஏ.எம்.டி.எஸ். திக்கபிட்டியவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ங) எல்பிட்டிய, முன்னாள் மாவட்ட நீதவான் திரு. ஜீ.டி. குலதிலகவின் சேவையை இடைநிறுத்த ஏதுவான காரணங்களும் அவரது சேவை இடைநிறுத்தப்பட்டதா என்பதும்;

(ச) மேலே குறிப்பிட்ட தருணங்களுக்கு மேலதிகமாக நீதிச் சேவை அலுவலர்களின் சேவைகள் வன்மமான முறையில் முடிவுறுத்தப்பட்ட தருணங்கள்;

(ஞ) கொழும்பு 7, விஜேவர்தன மாவத்தை, 129 ஆம் இலக்கத்தில் அமைந்துள்ள பிரதம நீதியரசர் உத்தியோகபூர்வ இல்லத்தில் பேணிவரப்பட்ட நீதியரசர்களின் நிறுவனத்தின் பொறுப்பாளர் எனும் வகையில் நீதிமன்றத்தின் முன்னிலையில் பல குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டிருந்த ரோஹணகுமார என்பவருக்கு மாண்புமிகு சரத் என். சில்வாவினால் நியமனமொன்று வழங்கப்பட்டதா என்பதும்;

(ட) மாண்புமிகு சரத் என். சில்வா கௌரவ பணிப்பாளரொருவராக சேவையாற்றுகின்ற பௌத்த ஒலிபரப்புச் சேவையை தாபிக்க ஏதுவான விடயங்கள் மற்றும் த புடிஸ்ற் (The Buddhist TV Channel) தொலைக்காட்சி அலைவரிசையை ஆரம்பிக்க 65 மில்லியன் ரூபா கொடையினை வழங்கிய முகுந்தன் கானகீ மனுதாரராக தோற்றிய சி.பீ.என். செய்மதி (C.B.N. Sat) வழக்கின் தீர்ப்புடன் சம்பந்தப்பட்ட விடயங்கள்;

(ண) பாராளுமன்றத்தை நவீனமயமாக்கல், சனநாயகம் மற்றும் அபிவிருத்தி பற்றிய உலக வங்கி / ஐ.நா. அ. வே. (World Bank / UNDP) உதவிக் கருத்திட்டத்தில் மாண்புமிகு சரத் என். சில்வாவினால் ஈடேற்றப்பட்ட கடமைகளுடன் தொடர்புடைய விடயங்கள்;

(த) பிரதம நீதியரசர் எனும் வகையில் மாண்புமிகு சரத் என். சில்வா சேவையாற்றிய காலப்பகுதிக்குள்ளே அவரது வன்மமான செயல்கள் காரணமாக வேறு ஆட்கள் எவருக்கேனும் இடர்கள் ஏற்பட்டுள்ளதா என்பதும்;

2. (அ) இக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) 95 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் ஏற்பாடுகளினால் தடைபெறாமல், குழு முப்பத்தொன்றுக்கு (31) மேற்படாத எண்ணிக்கையிலான உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. அக்குழுவானது, —

(அ) அதன் நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) தனது குழுவின் முன் தேன்றும்படி எவரேனும் நபரை அழைப்பதற்கும், ஏதேனுமோர் பத்திரத்தை அல்லது அறிக்கையை வரவழைப்பதற்கும், பாராளுமன்றத்தில் அல்லது தனது குழுவின் முன் தோன்றுமாறு கட்டளையிடுவதற்கும் அத்தகைய நபரின் பொறுப்பில் அல்லது கட்டுப்பாட்டின் கீழுள்ள ஏதேனும் பதிவேட்டினை, புத்தகத்தை, அறிக்கையை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சியாளர்களை வாய்மூலமாக விசாரிப்பதனூடாக திட்பநுட்பத் தன்மையை விசாரித்தறியவும் அல்லது வேறுவிதமாக உறுதிசெய்து கொள்ளவும் குழுவின் தவிசாளர் அல்லது அப்பணிக்கென விசேடமாக தத்துவமளிக்கப்பட்ட ஒருவரால் சத்தியம் செய்யப்பட்ட சாட்சியாளர்களை விசாரணை செய்வதற்கும்;

(ஈ) குழுவின் உதவிக்கென உரிய துறைகளின் சிறப்பறிவுள்ள நபர்களின் மற்றும் நிபுணர்களின் சேவைகளைப் பெற்றுக் கொள்வதற்கும்; மற்றும்,

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும் பராளுமன்ற ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்லவும்

அதிகாரம் கொண்டிருத்தல் வேண்டும்.

பா.150/11

14.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ (கலாநிதி) ஹர்ச த சில்வா

கௌரவ சஜித் பிரேமதாச

கௌரவ ஆர்.எம். ரஞ்சித் மத்தும பண்டார

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ ரவி கருணாநாயக்க,— 2011 திசெம்பர் 1 ஆம் திகதி பாராளுமன்றத்திற்கு சமர்ப்பிக்கப்பட்ட அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கை மூலமாக கவனத்திற்கு கொண்டுவரப்பட்டுள்ள அரசுக்கு சொந்தமான தொழில்முயற்சிகளின் நட்டம் தொடர்பில் ஆராய்ந்து அவற்றுக்கு பொறுப்பானவர்களுக்கு எதிராக நடவடிக்கை எடுப்பதற்கும் அவற்றை சீர்செய்வதற்கு எடுக்கவேண்டிய நடவடிக்கைகளை பரிந்துரை செய்து அறிக்கை செய்வதற்குமான பாராளுமன்றத் தெரிகுழு,—

மனித வளங்கள் அமைச்சரும் அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் (COPE ) தவிசாளருமான கௌரவ டியூ குணசேக்கர அவர்களால் குழுவின் அறிக்கை 2011 திசெம்பர் 1 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருப்பதனாலும்

பல நிறுவனங்களும் அரசிற்குச் சொந்தமான பல பொறுப்பு முயற்சிகளும் நட்டத்தில் இயங்குவதாக மேற்குறிப்பிடப்பட்டுள்ள அறிக்கை கோடிட்டுக் காட்டுவதனாலும்;

இந்த நிறுவனங்களுள் மிகவும் முக்கியத்துவம் வாய்ந்தவையாக

1. ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை
2. இலங்கை சமுர்த்தி அதிகாரசபை
3. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்
4. ஸ்ரீ லங்கன் விமானச் சேவை
5. மிஹின் எயார் லிமிடெட்
6. இலங்கை துறைமுக அதிகார சபை
7. வீதி அபிவிருத்தி அதிகார சபை

ஆகிய நிறுவனங்கள் காணப்படுவதாலும்,

இலங்கை கிரிக்கெட் வங்குரோத்து நிலையயை அடைந்திருப்பதாகவும் அதனை இலங்கை அரசாங்கம் மீட்டெடுக்க வேண்டும் எனவும் தெரியவந்திருப்பதனாலும்;

இந்த நட்டங்கள் இலங்கையின் நிதி நிலைமைக்கு பாரிய இழப்பாகும் என்பதனாலும்;

இந்த நிறுவனங்களைப் பராமரிக்கின்ற மற்றும் மீட்டெடுக்கின்ற செலவினம் இறுதியில் பொதுமக்களினாலேயே தாங்கிக்கொள்ளப்பட வேண்டியிருப்பதனாலும்;

அரசாங்க பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அதிகாரங்கள் வெறுமனே அறிக்கைகளை வெளியிடுவதற்கு அவற்றினை மட்டுப்படுத்துவதுடன் ஆய்ந்தறிந்தவைகள் தொடர்பாக மேலதிக நடவடிக்கைகளை எடுப்பதற்கு எவ்வித வகிபாகத்தினையும் அதற்கு வழங்கவில்லை என்பதனாலும்,

(அ) அரசாங்கப் பொறுப்பு முயற்சிகள் பற்றிய குழுவின் அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டுள்ள நிறுவனங்களின் குறிப்பாக இங்கு பட்டியலிடப்பட்டுள்ள நிறுவனங்களின் நட்டத்திற்கான காரணங்களை நிர்ணயிப்பதற்காக அவற்றின் விவரங்களை ஆராய்வதற்கும்,

(ஆ) இந்த நிறுவனங்களின் தவறான முகாமைத்துவத்திற்கு யாராவது தனிநபர் அல்லது தனிநபர்கள் பொறுப்பாக உள்ளனரா அல்லது அவர்கள் மோசடிச் செயற்பாடுகளில் ஈடுபட்டுள்ளனரா என்பதை நிர்ணயிப்பதற்கும்

(இ) இந்த நட்டங்கள் தொடர்ச்சியாக ஏற்படுவதைத் தடுப்பதற்கும்

(ஈ) இவற்றிற்குப் பொறுப்பாக உள்ளவர்களைத் தண்டிப்பதற்கு முதலில் என்ன நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படல் வேண்டும் என்பதைப் பரிந்துரைப்பதற்கும்

(உ) இந்த இழப்புக்களை ஈடுசெய்வதற்கு என்ன நடவடிக்கைகளை மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை நிர்ணயிப்பதற்கும்

(ஊ) பாராளுமன்ற வரவு செலவுத் திட்ட அலுவலகத்தை தாபித்தல் உள்ளடங்கலாக அறிக்கையிலுள்ள விதப்புரைகளை அமுல்படுத்துவதற்கு அவசியமான மேலதிக சட்டங்கள் யாவை என்பதை நிர்ணயிப்பதற்கும்

பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படுதல் வேண்டும் என இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்பட வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எதுவாக இருந்த போதிலும், குழுவானது இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,

(அ) கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்கள், பத்திரங்கள், பதிவேடுகள் ஆகியவற்றை வரவழைப்பதற்கும், பாராளுமன்றின் அல்லது குழுவின் முன் தோற்றுமாறும் அந்த நபர் வைத்திருக்கும் அல்லது அந்த நபரின் கட்டுப்பாட்டிலிருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிக்குமாறு எவரேனும் ஒருவருக்குக் கட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அனுமதிக்கப்பட்ட ஒரு நபரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் மீது சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறு வகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவுக்கு உதவ உரிய துறைகளிலிருந்தான, நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும் கூட்டத்தைத் தொடர்ந்து நடாத்திச் செல்வதற்கும் அதிகாரமுடையதாக இருத்தல் வேண்டும்

4. குழு தனது அறிக்கையை தனது முதலாவது அமர்வுத் தேதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகையதொரு காலத்துள் அல்லது மேலுமொரு காலத்துள் சமர்ப்பிக்க வேண்டும்.

பா. 156/ '12

15.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ எம்.ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ கபீர் ஹசீம்

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ பி. ஹரிசன்

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ காமினி ஜயவிக்கிரம பெரேரா

கௌரவ அகில விராஜ் காரியவசம்,— 2011 ஆண்டிற்கான கல்வி உயர்தரப் பரீட்சை பெறுபேறுகள் தொடர்பில் ஏற்பட்டுள்ள பிரச்சினைகளை பரிசீலித்து அவை செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கான பாராளுமன்றத் தெரி குழு,—

2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை முடிவுகள் வெளியிடப்பட்டமை பாரதூரமான பிரச்சினைகளை உருவாக்கியுள்ளதாலும்;

பல்வேறு தரப்பினால் முரண்பாடான கூற்றுகள் வெளியிடப்படுவதனாலும், மேலும் பிரச்சினைகள் தொழில்நுட்பக் குழுவினால் ஏற்பட்டது என சில தரப்பினர் கூறுவதனாலும்;

பெறுபேறுகளை தேவையற்ற விதத்தில் அவசரமாக வெளியிட்டமை மீது இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

சம்பந்தப்பட்ட உத்தியோகத்தர்களின் ஆற்றலின்மைதான் பிரச்சினை என இன்னும் சிலர் குறை கூறுவதாலும்;

பரீட்சை ஆணையாளர் அவரின் பதவியிலிருந்து அகற்றப்பட்டுள்ளமையாலும்;

இவ்விடயத்தினை விசாரிப்பதற்கு சனாதிபதியே ஒரு ஆணைக்குழுவினை நியமதித்துள்ளதாலும்;

முழு மாணவ பரம்பரையின் எதிர்காலமே அபாயநிலைக்குத் தள்ளப்பட்டுள்ளமையினாலும்;

இதனால் கல்வி முறைமை மீதுள்ள நம்பிக்கை மோசமாகக் சீர்குலைந்துள்ளமையினாலும்; மேலும்

கல்வித் திணைக்களத்தினால் விநியோகிக்கப்படுகின்ற சான்றிதழ்களை ஏற்றுக்கொள்ளல் தொடர்பில் சந்தேகம் எழுந்துள்ளமையினாலும்;

(அ) ' Z ' புள்ளியின் முறைமையைப் பரீட்சிப்பதற்கும்;

(ஆ) இப் பிரச்சினைகளுக்கு இட்டுச் சென்ற காரணங்களைப் பரிசீலிப்பதற்கும்;

(இ) 2011 கல்வியாண்டிற்கான உயர்தரப் பரீட்சை பெறுபேறுகளைச் செம்மையாக்கப் பரிகாரம் காண்பதற்குரிய வழிவகைகளை விதந்துரைப்பதற்கும்;

(ஈ) இவ்வாறான பிரச்சினைகள் எதிர்காலத்தில் நடைபெறுவதைத் தவிர்ப்பதற்கு நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

(உ) குழு அவசியம் எனக் கருதும் ஏனைய பரிகார நடவடிக்கைகளை விதந்துரைப்பதற்கும்;

பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் கருதுகின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் நியமிக்கப்படல் வேண்டும்.

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாக இருப்பினும் குழுவானது இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. அக்குழுவானது,—

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணை நிர்ணயிப்பதற்கும்

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகத்தை, பதிவேட்டை அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்குமாறும் கட்டளையிடுவதற்கும்;

(இ) சாட்சிகளை வாய்மொழி மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறுவிதமாக உறுதிப்படுத்துவதற்கும் சாட்சிகளை விசாரணை செய்யும் நோக்கத்துக்காக குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆள் நிருவகிக்கும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதிப்பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிப்பதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த வல்லுனர்வுகளின் நிபுணர்களின் சேவைகளைப் பெறுவதற்கும்;

(உ) காலத்திற்கு காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் அத்துடன் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது கூடுவதற்குமான தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஒரு வருடத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் அதன் அறிக்கையைச் சமர்ப்பித்தல் வேண்டும்.

பா.157/ ’12

16.

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ சஜித் பிரேமதாஸ

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ எம். ஜோசப் மைக்கல் பெரேரா

கௌரவ புத்திக பதிரண

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ மங்கள சமரவீர

கௌரவ ஆர். எம். சஞ்சித் மத்துமபண்டார

கௌரவ அசோக் அபெசிங்க

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ (திருமதி) அனோமா கமகே

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ அப்துல் ஹலீம்

கௌரவ வசந்த அலுவிஹாரே

கௌரவ பாலித ரங்கே பண்டார

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ ஜயந்த கெடக்கொட

கௌரவ சுஜீவ சேனாசிங்க

கௌரவ அர்ஜுன ரணதுங்க

கௌரவ ஆர். யோகராஜன்

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ துனேஷ் கன்கந்த

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா,— பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ டபிள்யூ.டீ. ஜே. செனெவிரத்ன அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

தற்போது இந்த நாட்டில் சுமார் 40,000 இற்கும் அதிகமான வேலையற்ற பட்டதாரிகள் உள்ளனர் என்பதனாலும்;

மேற்படி வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலைகள் வழங்கும் போது முறைசார்ந்த மற்றும் நியாயமான வேலைத்திட்டமொன்று செயற்படுத்தப்படாமையினாலும்;

அரசாங்கத்தினால் வேலையற்ற பட்டதாரிகளுக்கு வேலைவாய்ப்புகள் வழங்கும் போது அரசியல் நட்பு முறைகள், குடும்ப தொடர்புகள், வேறு உறவு முறைகள் என்பனவற்றை காரணமாகக் கொண்டு வேலைவாய்ப்புகள் வழங்குவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுவதனாலும்;

“அரசியல் பட்டியல்கள்” மூலம் வேலையற்ற பட்டதாரிகளுக்கு அரசாங்க வேலை வாய்ப்புகள் வழங்குதலானது, அநீதியானதும் முறைசாரர்பற்றதும் என்பதோடு அரசாங்க வேலைகளுக்கு ஆட்சேர்ப்புக்கான எற்றுக்கொள்ளப்பட்ட நடைமுறையினை முற்றிலும் மீறப்படுவதாக அமைந்துள்ளதினாலும்;

அரசியல் பக்கச்சார்பினைக் கருத்திற்கொண்டு அரசாங்க வேலைவாய்ப்புக்களை வழங்குவதன் மூலம் அரசியலமைப்பின் 12(1) உறுப்புரையின் மூலம் உறுதிப்படுத்தப்பட்டுள்ள அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளதனாலும்;

அரச கொள்கைகளை செயற்படுத்தும் கோட்பாடுகளின் 27(2)(அ) உறுப்புரையின் மூலம் அடிப்படை உரிமைகளை அவ்விதமாகவே செயற்படுத்தும் பொறுப்பு அரசாங்கத்திடம் கையளிக்கப்பட்டுள்ளதனாலும்;

இவ்வாறு வேலைவாய்ப்புகளை வழங்குவதற்கு காரணமாக அமைந்துள்ள விடயங்கள் தொடர்பில் நியாயமான விளக்கம் அளிப்பதற்கு சம்பந்தப்பட்ட அமைச்சர் தவறியிருப்பதனாலும்;

வேலையற்ற பட்டதாரிகளை இவ்வாறு கவனிப்பது, இந்த நாட்டின் இளைஞர்களை வெறுமனே அரசியல்வாதிகளின் பின்னால் செல்லும் குழுவினராக மாற்றும் அடிப்படை நோக்குடன் செயற்படுத்தப்படும் ஒரு செயலாகக் கருதப்பட முடியும் என்பதனாலும்;

அரசாங்க சேவைக்கு மட்டுப்படுத்தப்பட்ட போட்டிப் பரீட்சையின் மூலம் அரசாங்க உத்தியோகத்தர்களை ஆட்சேர்க்கையில், போட்டிப் பரீட்சையின் பெறுபேறுகளை வெளியிடாது நேர்முகப் பரீட்சை மூலம் அவர்களை ஆட்சேர்த்து, பின்னர் பெறுபேறுகளை வெளியிடுவதன் மூலம், அரசாங்க சேவையின் ஆட்சேர்த்தல் தொடர்பில் எந்தவித வெளிப்பாட்டுத்தன்மையும் காணப்படாமையினால், நாட்டில் உள்ள பெரும்பான்மையான படித்த இளைஞர்களுக்கு அநீதி இழைக்கப்படுவதனாலும்;

அரச உத்தியோகத்தர்களை நியமித்தல், இடம் மாற்றல், பதவி உயர்த்துதல் தொடர்பிலான சுயாதீன அரச தாபனமான பகிரங்க சேவை ஆணைக்குழுவினை, சுயாதீனமாக இயக்குவதற்கான வாய்ப்புக்கள் தடுக்கப்பட்டுள்ளதனாலும்;

பொது நிருவாக, உள்நாட்டலுவல்கள் அமைச்சர் கௌரவ. டபிள்யூ. டீ. ஜே. செனெவிரத்ன மீது சபை நம்பிக்கை இழந்துள்ளதென இப் பாராளுமன்றம் தீர்மானிக்கின்து.

பா.168/ '12

17.

கௌரவ (கலாநிதி) ஹர்ஷ த சில்வா

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா,— இலங்கை மத்திய வங்கியினால் கிரேக்க முறிகளில் மேற்கொள்ளப்பட்ட முதலீடுகள் சம்பந்தமாக சர்வதேச நிதியக் கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்களால் பாராளுமன்றத்தில் செய்யப்பட்ட கூற்று தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பொறுப்பற்ற உள்நாட்டுப் பொருளாதார முகாமைத்துவத்தினால் தீவிரமடைந்துள்ள உலகளாவிய நிதி நெருக்கடியின் விளைவினால் 2010ஆம் ஆண்டளவில் பல யூரோ வலயப் பொருளாதாரங்கள் நெருக்கடி நிலையினை அடைந்துள்ளதாலும்,

மதிப்பீடுகளை விட கிரேக்க வளர்ச்சி வீதத்தின் வீழ்ச்சி, பாரிய வித்தியாசத்தில் வரி வருமானங்களை விட செலவு அதிகரித்துள்ளதனால் ஏற்படும் அரசிறைச் சமநிலையின்மை, கடன் கட்டுப்பாட்டை மீறிய நிலைக்கு வருதல் ஆகியவற்றுடன் அரசாங்கத்தின் புள்ளிவிபரங்களின் நம்பகத் தன்மை ஏறக்குறைய பூச்சியமாக வீழ்ச்சியடைந்து, குறிப்பாக கிரேக்க அரசாங்கம் அதன் கற்பனையான வரவு செலவுப் பற்றாக்குறைத் தொகையைச் சமர்ப்பித்து ஐரோப்பிய ஒன்றியத்தைத் தொடர்ச்சியாக தவறாக வழிநடத்தியமை ஆகிய காரணங்களினால் மிக மோசமாகப் பாதிக்கப்பட்ட நாடுகளுள் ஒன்றாக கிரேக்கம் இருப்பதனாலும்,

2010ஆம் ஆண்டின் முதல் காலாண்டின்போது, அதன் படுகடன் கடப்பாடுகளை ஈடுசெய்யும் கிரேக்க அரசாங்கத்தின் ஆற்றல் பாரதூரமான நிலைமைக்குள்ளாக்கப்பட்டு, இறைமைக் கடனை செலுத்த முடியாதவாறான அச்ச நிலைக்கு வந்துள்ளதாலும்,

தரமிடும் முகவர்களின் கிரேக்க நாட்டுக்கான தனிப்பட்ட கடன் வசதி வெற்று நிலைமைக்கு உள்ளாகி அவர்கள் அதனை "பெறுமதியற்ற" அந்தஸ்துக்கு மதிப்பிறக்கம் செய்துள்ளதாலும்,

வீழ்ச்சியடைந்துவரும் பொருளாதாரத்துக்கு முற்றுப்புள்ளி வைக்கும் எண்ணத்துடன் மிகக்கடுமையான சிக்கனப் பொதியை நடைமுறைப்படுத்தும் நிபந்தனையுடன் யூரோ வலய நாடுகளினாலும் சர்வதேச நாணய நிதியத்தினாலும் கூட்டாக நிதியிடப்பட்ட 110 பில்லியன் யூரோ விடுவிப்புப் பொதியை வழங்குமாறு 2010ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் கிரேக்க அரசாங்கம் கோரி பெற்றுக்கொண்டதனாலும்,

நாணய விடயத்தில் நெகிழ்ச்சித்தன்மை இன்றி, கடுமையான அரசிறை நிலைமைகளில் கிரேக்க அரசாங்கத்தினால் முன்னெடுத்துச் செல்ல முடியாத நிலைமையில், மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் மக்கள் வீதியில் இறங்கி கலகத்தில் ஈடுபடுவதற்கு போதுமானவையாதலாலும்,

கிரேக்கப் பொருளாதாரம் தொடர்ந்தும் வீழ்ச்சியடைந்து, கிரேக்க கடன் மீதான நம்பிக்கை படுமோசமான நிலையை அடைந்ததுடன் இறைமைக் கடன் தொடர்பாக ஏமாற்றம் நிகழலாம் என அதிகரித்த எதிர்பார்ப்புக்கு வழிவகுத்துள்ளமையினாலும்,

2011ஆம் ஆண்டு மார்ச் மாதம் தரமிடல் முகவரான 'மூடி' என்ற நிறுவனம் கிரேக்க படுகடனை எதிர்க்கணிய நோக்குடன் அதிகூடிய இடரை ஊகித்து மேலும் படுமோசமான "பெறுமதியற்ற" நிலைக்கு தரமிறக்கம் செய்துள்ளமையினாலும்,

இந்த நிலைமையில் முதலீட்டாளர்கள் உடனடியாக கிரேக்க முறிகளை "பெறுமதியற்ற பத்திரங்களாக" புறக்கணிக்க ஆரம்பித்து, கிரேக்க அரசாங்கம் கடன் செலுத்துவதற்கான நிபந்தனைகளை ஈடுசெய்வதற்கு சிக்கனப் பொதியை நடைமுறைப்படுத்த முடியாமல் யூரோ வலய, சர்வதேச நாணய விடுவிப்பு முடியாத நிலையில் அதன் விளைவுகள் அதிகரிக்க ஆரம்பித்ததாலும்,

இந்தப் பின்புலத்தில் இலங்கை மத்திய வங்கி 2011ஆம் ஆண்டின் ஏப்ரல் மாத ஆரம்பத்தில் கிரேக்க முறிகளில் பாரிய அளவிலான நட்டம் ஏற்படும் அளவுக்கு 22 மில்லியன் யூரோக்களை முதலிட்டுள்ளதாக சொல்லப்படுவதாலும்,

கிரேக்க முறிகளில் சிலவற்றை நட்டத்தில் விற்ற காரணத்தினால் இலங்கை மத்திய வங்கிக்கு பாரிய அளவில் நட்டம் ஏற்பட்டிருந்ததாக பத்திரிகைகள் வெளியிட்ட பின்னர் 2012 யூலை 17ஆம் திகதி இவ்விடயம் பாராளுமன்றத்தில் எழுப்பப்பட்டதாலும்,

இது உண்மையா எனவும், அவ்வாறெனின், முதலீடுகள் பற்றிய விபரங்களையும் அத்தகைய முதலீடு, குறிப்பாக நாணயச் சபையின் அனுமதியின்றி ஏன் மேற்கொள்ளப்பட்டது என்பது பற்றியும் சர்வதேச நிதியக் கூட்டிணைப்பு அமைச்சரிடம் வினவியதாலும்,

சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம இவ்வினாவுக்குப் பதிலளிக்கையில், உண்மையில் இலங்கை மத்திய வங்கி ஏப்ரல் மாத ஆரம்பத்தில் முறிகளில் முதலிட்டிருந்ததாகக் கூறியதாலும்,

அந்த முதலீட்டை நியாயப்படுத்துகையில், *"ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டுப் பொதியினால் ஆதரவளிக்கப்பட்ட நெருக்கடி முகாமைத்துவத்துக்கான வலுவான சட்டகம் ஒன்றினால் அந்நேரத்தில் (2011 ஏப்ரல் 5) மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்தில் (கிரேக்க முறிகளில் முதலிடல்) செல்வாக்குச் செலுத்தியதாக"* கௌரவ அமைச்சர் கூறியதாலும்,

*"அந்நேரத்தில் உலகளாவிய நிதியியல் அதிகாரிகள் உருவாக்கிய இந்தப் பாரிய நிதி கிரேக்கத்தைக் காப்பாற்றியதாகக் கூறியதாலும், எனவே. இந்தச் சூழ்நிலையில், அந்த இடர் நியாயமான அளவு குறைவாகவும் தாங்கக்கூடியதாகவும் கருதப்பட்டது"* என கௌரவ அமைச்சர் மேலும் கூறியதாலும்,

மேலே சொல்லப்பட்ட சர்வதேச நிதயக் கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம அவர்களின் கூற்று சரியானதல்ல என அவதானிக்கப்பட்டுள்ளதாலும்,

கிரேக்க முறிகளில் இடர் அதிகமாகவும் ஏமாற்றமடைவதற்கான வாய்ப்பும் காணப்படுவதாலும்,

கிரேக்க முறிகளில் சொல்லப்பட்ட முதலீடு மேற்கொள்ளப்பட்ட நேரத்தில் ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டு வசதி (EFSF) அந்நாட்டுடன் எவ்வித ஒழுங்கையும் மேற்கொண்டிருக்கவில்லை என்பதாலும்,

“விருப்பத் தேர்வுக் கடன் வழங்குனர்” என்னும் அந்தஸ்துடன் நிரந்தர ஐரோப்பிய உறுதிப்பாட்டு உபாயம் (ESM ) தற்காலிக ஐரோப்பிய நிதியியல் உறுதிப்பாட்டு வசதியாதலால், இலங்கைக்குப் பயனளிக்காத நிதியியல் உறுதிப்பாட்டு வசதியில் (EFSF ) இருந்து கிரேக்கம் விடுவிப்பைப் பெற்றாலும் அது சர்வதேச நாணய நிதியத்துக்கு மட்டுமே இரண்டாம்பட்சமானது என்பதாலும்,

“விருப்புத் தேர்வுக் கடன் வழங்குனர்” அந்தஸ்து என்பதன் பொருள் யாதெனில், ஐரோப்பிய உறுதிப்பாட்டு உபாயத்தினால் (ESM ) மேற்கொள்ளப்பட்ட விருப்புரிமை ஒழுங்கிலான கொடுப்பனவு சர்வதேச நாணய நிதியம் நீங்கலாக, ஏனைய எல்லா தரப்புகளையும் விட விருப்புரிமை கொண்டிருக்கும் என்பதாலும்,

இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடு ஏமாற்றமடைவதற்கான பாரதூரமான நெருக்கடியைக் கொண்டிருப்பதாலும்,

உண்மையில் இலங்கை மத்திய வங்கியினால் மேற்கொள்ளப்பட்ட முதலீடு மிகுந்த ஆபத்துக்குள்ளாகியிருக்கும்போது அது பாதுகாப்பானது எனக் குறிப்பிட்டு கௌரவ அமைச்சர் சபையை பிழையாக வழிநடத்தியதாலும்,

கிரேக்க முறிகளில் இலங்கை மத்திய வங்கியினால் முதலீடு மேற்கொள்ளப்பட்டதை உடனடுத்து, கிரேக்க அரசாங்கம் மீண்டும் தடுமாறி, அதன் கடன் வீதம் உலகில் அதி தாழ்ந்ததாக தர இறக்கம் செய்யப்பட்டுள்ளதாலும்,

2011 ஒற்றோபர் மாதமளவில் கடன் வழங்குனர்கள் அவர்களின் கடனில் 50 சதவீதத்தை பதிவழிப்பதற்கு இணங்கியதால் கிரேக்கம் கட்டுப்படுத்தப்பட்ட தவறுதல் நிலைக்குச் சென்றதாலும்,

இலங்கை மத்திய வங்கியும் தனது முதலீட்டு மிகுதிகளில் (மிகுந்த கழிவில் விற்றதன் பின்னர்) கொண்டிருந்த 53.5 சதவீத கிரேக்க முறிகள் நாட்டிற்குப் பாரிய நட்டம் ஏற்படும் வகையில் ஒழித்ததாலும்,

சர்வதேச நிதிய கூட்டிணைப்பு அமைச்சர் கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம 2012 ஜூலை 17ஆம் திகதிய கூற்றில் உண்மையை வெளியிடாது, *“அந்த நேரத்தில் கிரேக்கத்தைப் பாதுகாப்பதற்காக உலகளாவிய நிதியியல் அதிகாரிகள் உருவாக்கிய பாரிய நிதியம் காரணமாக இடர் நியாயமானதாகவும் தாங்கக்கூடியதாகவும்* இருப்பதாக கூறி முதலீட்டை நியாயப்படுத்தி சபையை பிழையாக வழிநடத்தியதாலும்,

(அ) இலங்கை மத்திய வங்கியினால் கிரேக்க முறிகளில் 22 மில்லியன் யூரோக்கள் முதலீடு செய்யப்பட்டுள்ளமை சம்பந்தமாக கௌரவ (கலாநிதி) சரத் அமுனுகம இச்சபையை பிழையாக வழிநடத்தியுள்ளாரா எனவும் மற்றும் எந்தளவுக்கு சபையை அவர் தவறான வழியில் இட்டுச் சென்றுள்ளார் எனவும் தீர்மானிக்கவும்,

(ஆ) இந்நிலைமையில் என்ன நடவடிக்கை எடுக்கப்படவேண்டும் என்பதை சபைக்குப் பரிந்துரைக்கவும்,

ஒரு பாராளுமன்றத் தெரிகுழு நியமிக்கப்பட வேண்டும் என இச்சபை தீர்மானிக்கின்றது.

2. (அ) குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகர் அவர்களால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும்.

(ஆ) நிலையியல் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும் குழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் தீர்மானிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவுகளை அழைப்பிப்பதற்கும் பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறு எவரேனும் ஆளை ஆணையிட்டழைக்கவும் அத்தகைய ஆளின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரம், புத்தகப் பதிவு அல்லது ஆவணத்தை சமர்ப்பிக்கச் செய்யவும்;

(இ) சாட்சியங்களை வாய்மூல விசாரணை மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறு விதமாக உறுதிப்படுத்துவதற்கும் குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளினால் நிர்வகிக்கப்படும் விதமாக சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப் பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிக்கவும்;

(ஈ) குழுவிற்கு உதவி வழங்குவதற்காக குறிப்பிட்ட துறையில் துறைசார் நிபுணர்கள் மற்றும் கைதேர்ந்தவர்களின் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிக்கவும் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைபெறாது அமர்வதற்கும்;

குழு தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் அறிக்கையை அதன் முதலாவது அமர்வில் இருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கக் கூடியவாறான அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் தயாரித்தல் வேண்டும்.

பா.169/ '12

18.

கௌரவ ஜோன் அமரதுங்க

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ சுஜீவ சேனசிங்க

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்,— 2012 நவெம்பர் 09ஆம் திகதி இடம்பெற்ற சிறைச்சாலைக் கலவரம் தொடர்பில் ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

பாரதூரமான சிறைச்சாலைக் கலவரமொன்று 2012 நவெம்பர் 09ஆம் திகதி இரவு ஆரம்பித்து 2012 நவெம்பர் 10ஆம் திகதி அதிகாலை வேளை வரை இடம்பெற்றுள்ளதாலும், இக்கலவரத்தினால் ஏறத்தாள 30 உயிரிழப்புகள் ஏற்பட்டுள்ளதாலும், விசேட அதிரடிப் படைத் தலைவரான பிரதிப் பொலிஸ் மா அதிபர் உட்பட அதேயளவிலானோர் காயமடைந்திருப்பதனாலும்,

எமது சிறைச்சாலைகளில் இத்தகைய நிகழ்வுகள் நடைபெற்றிருப்பது இது முதற்தடவையல்ல என்பதனாலும்,

சிறைச்சாலை முறைமையில் ஏற்பட்ட ஊழல் காரணமாகவே இந்தச் சம்பவங்கள் நடைபெற்றிருப்பது போல் தென்படுவதனாலும்,

(அ) தற்போதைய கலவரங்களுக்குரிய உடனடிக் காரணமாக அமைந்தது எது என்பதையும்;

(ஆ) சிறைச்சாலைக் கலவரங்கள் அடிக்கடி எதனால் தூண்டப்படுகின்றன என்பதையும்;

(இ) சிறைச்சாலை ஒழுக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகின்ற தீர்க்கப்படாமல் நீண்டகாலமாகவுள்ள பிரச்சினைகள் யாவை என்பதையும்;

(ஈ) இத்தகைய நிகழ்வுகளைத் தடுப்பதற்கான குறுகிய கால மற்றும் நீண்ட கால நடவடிக்கைகள் யாவை என்பதையும்;

(உ) இதனுடன் தொடர்பானவை எனக் குழு கருதும் ஏற்புடைய வேறு ஏதாவது விடயங்களையும்

ஆராய்ந்து, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு பாராளுமன்றத் தெரிகுழுவொன்று நியமிக்கப்பட வேண்டும் என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கின்றது.

2. (அ) அக்குழுவும் அதன் தவிசாளரும் சபாநாயகரால் பெயர் குறித்து நியமிக்கப்படுதல் வேண்டும் என்பதுடன்,

(ஆ) நிலையியல் கட்டளை 95இன் ஏற்பாடுகள் எவ்வாறிருப்பினும், தெரிகுழு இருபத்தொன்றுக்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்.

3. குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களை, பத்திரங்களை மற்றும் பதிவுகளை அழைப்பிப்பதற்கும் பாராளுமன்றத்தின் அல்லது அத்தகைய குழுவின் முன்னிலையில் சமுகமளிக்குமாறு எவரேனும் ஆட்களை ஆணையிட்டழைக்கவும் அத்தகைய ஆட்களிடமுள்ள அல்லது அவர்களின் கட்டுப்பாட்டிலுள்ள பத்திரங்கள், புத்தகங்கள், அறிக்கைகள் அல்லது ஆவணங்களைச் சமர்ப்பிக்குமாறு கட்டளையிடவும்;

(இ) சாட்சியங்களை வாய்மூல விசாரணை மூலம் மெய்ப்பிப்பதற்கும் அல்லது வேறு விதமாக உறுதிப்படுத்துவதற்கும் மற்றும் குழுவின் தவிசாளர் அல்லது விசேடமாக அந்நோக்கத்துக்காக அதிகாரமளிக்கப்பட்ட ஓர் ஆளின் மேற்பார்வையின் கீழ் சத்தியப் பிரமாணம் அல்லது உறுதிப் பிரமாணத்தின் மீதமைவாக சாட்சிகளை விசாரிக்கவும்;

(ஈ) குழுவிற்கு உதவி வழங்குவதற்காக ஏற்புடைய துறைகளைச் சேர்ந்த துறைசார் வல்லுநர்களினதும் நிபுணர்களினதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்துக்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைச் சமர்ப்பிக்கவும், அத்துடன் பாராளுமன்றம் ஒத்திவைக்கப்படினும், தொடர்ந்தும் அமர்வுகளை நடாத்திச் செல்வதற்குமான

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

4. குழு அதன் அறிக்கையை அதன் முதலாவது அமர்வுத் திகதியிலிருந்து ஒரு வருட காலத்தினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கக் கூடியவாறான அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தினுள் அறிக்கை சமர்ப்பித்தல் வேண்டும்.

19.

கௌரவ ரவி கருணாநாயக்க

கௌரவ லக்ஷமன் கிரிஎல்ல

கௌரவ தயாசிறி ஜயசேகர

கௌரவ டி.எம். சுவாமிநாதன்

கௌரவ (டாக்டர்) ஜயலத் ஜயவர்தன

கௌரவ ஜெ. ஸ்ரீ ரங்கா

கௌரவ (திருமதி) விஜயகலா மகேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஸி சேனாநாயக்க

கௌரவ பாலித தெவரப்பெரும

கௌரவ திலிப் வெதஆரச்சி

கௌரவ அகில விராஜ் காரியவசம்

கௌரவ ரன்ஜன் ராமநாயக்க

கௌரவ (திருமதி) சந்திராணி பண்டார ஜயசிங்க

கௌரவ அஜித் பி. பெரேரா

கௌரவ நிரோஷன் பெரேரா

கௌரவ ருவன் விஜேவர்தன

கௌரவ ஆர். யோகராஜன்,— மின்வலு, எரிசக்தி அமைச்சர் கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் மீது நம்பிக்கையின்மை,—

மின்சாரக் கட்டண அதிகரிப்பு தொடர்பாக எதிர்க்கட்சி முதற்கோலாசான், கௌரவ ஜோன் அமரதுங்க அவர்களால் 2013 ஏப்பிறல் 23ஆம் திகதி எழுப்பப்பட்ட வினாவிற்கு மின்வலு, எரிசக்தி அமைச்சர் கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் பதிலளிக்கும் வேளையில் அண்மைக்கால மின்கட்டண அதிகரிப்பை அமுல்படுத்தல் தொடர்பான முன்மொழிவு, தனது தற்போதைய பதவியில் கடமைகளைத் தான் பொறுப்பேற்க முன்னரே, பதவியில் முன் இருந்தவரான கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்களினால் கொண்டுவரப்பிட்டிருந்தது என உறுதியாகக் கூறியுள்ளதாலும்;

தொழில்நுட்ப, ஆராய்ச்சி மற்றும் அணுசக்தி தொடர்பான தற்போதைய அமைச்சர் கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் 2013 ஏப்பிறல் 24ஆம் திகதி வழங்கிய கூற்றில் மின்கட்டண அதிகரிப்பு பற்றி விசேடமாக யாதேனும் கடப்பாடு தொடர்பாகக் கூற மறுத்துவிட்டதாலும்;.

உண்மையில், கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள் அவரது கூற்றை ஆதாரப்படுத்திச் சான்றுதலளிக்கும் அளவிற்கு கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க அவர்கள் சவால் விடுத்துள்ளதாலும்;

இதனால், மின்வலு, எரிசக்தி அமைச்சர் சபையை வேண்டுமென்றே தவறாக வழிநடாத்திச் சென்றுள்ளதோடு, இச்சபை மற்றும் அதன் அனைத்து உறுப்பினர்களினதும் சிறப்புரிமையை மீறிய குற்றச்சாட்டிற்கும் ஆளாகியுள்ளார் என்பது தெளிவாகின்றதாலும்;

எனவே, கௌரவ (திருமதி) பவித்திராதேவி வன்னிஆரச்சி அவர்கள், மின்வலு, எரிசக்தி அமைச்சராக தொடர்ந்தும் பதவி வகிப்பது தொடர்பில் அவர் மீது ஏதேனும் நம்பிக்கையைக் கொண்டிருக்கவில்லை என இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பா.260/ ’14

கௌரவ ரணில் விக்கிரமசிங்க

கௌரவ கரு ஜயசூரிய

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ அஜித் பி. பெரேரா,— பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்திற்கான உத்தேச திருத்தங்கள் மீதான தாக்கங்கள் குறித்து ஆராய்ந்து அறிக்கை செய்வதற்கான பாராளுமன்றத் தெரிகுழு,—

சட்டவரைஞர் அரசாங்கத்தின் அறிவுறுத்தலின் பிரகாரம் பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தை (தற்போது L.D.O.20/2014 இலக்கத்தைக் கொண்டுள்ளது) திருத்துவதற்கானதொரு சட்டமூலத்தைத் தயாரித்துள்ளதாலும்,

தற்போதைய பௌத்த அறநிலையங்கள் கட்டளைச்சட்டத்தின் மீது முழுமையானதும் பரந்த செயல்விளைவைக் கொண்டதுமான திருத்தங்கள் பிரேரிக்கப்படுவதாலும்,

இம்முன்மொழியப்பட்ட திருத்தங்களின் ஏற்பாடுகள் தொடர்பில் எவ்வித பொதுக் கலந்துரையாடல்களும் நடைபெறாததாலும்,

விகாரைகள் மற்றும் தேரர்களிடம் உள்ள ஆதனத்தை உள்ளடக்கும் பௌத்த சாசனத்தைப் பாதுகாத்துப் பேணும் கடப்பாட்டை அரசியலமைப்பு ரீதியாக அரசாங்கம் கொண்டுள்ளதாலும்,

இத்திருத்தங்கள் மூலமாக மிக அதிகமாகப் பாதிக்கப்படும் பௌத்த பிக்குகளுடன் குறிப்பாக பல மதப்பிரிவுகளின் மஹாநாயக்க தேரர்களுடன் எவ்விதமான கலந்தாராய்வும் இடம்பெறாததாலும்,

அ. தேரர்களின் பாதுகாப்பிலுள்ள விகாரைகளின் ஆதனங்கள் மற்றும் பிற அறநிலையங்கள் மீதான உத்தேச திருத்தங்களின் தாக்கங்கள்;

ஆ. ஆலய ஆதனங்களைப் பாதுகாக்கும் பொருட்டு அவசியம் என குழுவினால் கருதப்படும் ஏதாவது திருத்தங்கள்;

இ. தற்போது தேரர்களின் பாதுகாப்பிலுள்ள விகாரையின் ஆதனங்களைப் பராதீனப்படுத்துவதை அல்லது ஒதுக்கீடுசெய்வதைத் தவிர்ப்பதற்கு அவசியமான நடவடிக்கைகள்;

ஈ. தேரர்களின் பாதுகாப்பிலுள்ள விகாரையின் ஆதனங்கள் மற்றும் ஏனைய அறநிலையங்கள் தொடர்பாக ஏதேனும் நடவடிக்கையை மேற்கொள்வதற்கு முன்னராக சம்பந்தப்பட்ட மஹாநாயக்க தேரர்களுடனான கலந்தாராய்வுச் செயன்முறையொன்றை உறுதிசெய்வதற்கான பொறிமுறை;

உ. குழுவின் பரிசீலனையின் கீழுள்ள விடயங்கள் மீது தாக்கத்தைக் கொண்ட சூழ்நிலைகளில் குழு பொருத்தமானதும் அவசியமானதும் எனக்கருதும் ஏதேனும் வேறு விடயங்கள் பற்றி விசாரணை செய்து அறிக்கை சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்றத் தெரிகுழு ஒன்று நியமிக்கப்படல் வேண்டுமென இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

2.

(அ) குழுவும் அதன் தவிசாளரும் கௌரவ சபாநாயகரினால் நியமிக்கப்படல் வேண்டும்;

(ஆ) நிலையியற் கட்டளை 95 இன் ஏற்பாடுகள் எவ்வாறாகவிருப்பினும், குழு இருபத்தியொன்றிற்கு (21) மேற்படாத உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும்.

3. மதப்பிரிவுகளின் வணக்கத்துக்குரிய மகாநாயக்கர்களின் மதியுரையின் பேரில் தெரிகுழு ஆலோசித்து, செயற்பட வேண்டும்.

4. அக்குழுவானது,

(அ) அதன் கூட்ட நடப்பெண்ணைத் நிர்ணயிப்பதற்கும்;

(ஆ) ஆட்களையும் பத்திரங்களையும் பதிவேடுகளையும் வரவழைப்பதற்கும் எவரேனும் ஆளை பாராளுமன்றத்தின் முன்னிலையில் அல்லது குழுவின் முன்னிலையில் சமூகமளிக்குமாறும் அத்தகைய ஆளிடம் அல்லது அவரின் கட்டுப்பாட்டின் கீழ் இருக்கும் ஏதேனும் பத்திரத்தை, புத்தகப் பதிவேட்டை அல்லது ஆவணத்தைச் சமர்ப்பிப்பிக்குமாறு சட்டளையிடுவதற்கும்;

(இ) குழுவின் தவிசாளரினால் அல்லது அந்நோக்கத்திற்காக விசேடமாக அதிகாரமளிக்கப்பட்ட ஆள் ஒருவரினால் செய்து வைக்கப்படும் சத்தியப்பிரமாணம் அல்லது உறுதியுரையின் கீழ் சாட்சி கூறும் சாட்சிகளை வாய்மொழிமூலப் பரிசீலனை மூலம் சரிபார்ப்பதற்கு அல்லது வேறுவகையில் உறுதிப்படுத்துவதற்கும்;

(ஈ) குழுவிற்கு உதவுவதற்கு சம்பந்தப்பட்ட துறைகளைச் சேர்ந்த நிபுணர்களதும் வல்லுநர்களதும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளவும்;

(உ) காலத்திற்குக் காலம் இடைக்கால அறிக்கைகளைத் தயாரிப்பதற்கும் பாராளுமன்றத்தின் ஒத்திவைப்பினால் தடைப்படாது அமர்வு நடைபெறுவதற்கும்

தத்துவத்தைக் கொண்டிருத்தல் வேண்டும்.

5. குழு அதன் முதல் அமர்வுத் திகதியிலிருந்து ஆறு மாதங்களினுள் அல்லது பாராளுமன்றம் வழங்கும் அத்தகைய வேறு அல்லது மேலதிக காலத்தில் அதன் அறிக்கையைச் சமர்ப்பிக்க வேண்டும்.

* அரசாங்க அலுவல்களைக் குறிக்கின்றன.